# தமிழக வரலாற்றுச் செய்திகள்

ஆசிரியர் :
பழம்பொருள் கல்வெட்டு ஆராய்ச்சியாளர்
வித்துவான் சி. கோவிந்தராசனார்,
தமிழ் விரிவுரையாளர்,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

சாந்தி நூலகம்
2/122, பிராட்வே • சென்னை-1.

சாந்தி வெளியீடு எண் : 37
முதற் பதிப்பு: பிப்ரவரி, 1962.
உரிமை பதிப்பகத்தாருக்கே.

V8111:
N62

விலை ரூ. 3-00

ARCHIVES
108744

Jeevan Press, Madras-5. (558)

பேராசியர் டாக்டர் மா. இராசமாணிக்கனார்,

எம். ஏ., எல். டி., எம், ஓ. எல்., பி. எச். டி.

அவர்கள் மனமுவந்தருளிய

MADRAS
MADRAS

## மதிப்புரை

கரந்தைப் புலவர் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர்-திருவாளர் சி. கோவிந்தராசன் அவர்கள் புலவர் பட்டம் பெற்றவர். அவர் பல்லாண்டுகளாகப் பல கோவில்களைப் பார்வையிட்டு அங்குள்ள கல்வெட்டுக்களைப் படித்துத் தமிழக வரலாற்றை அறிந்தவர். அவர்தம் ஆராய்ச்சியிற் புலப்படும் உண்மைகளைத் தமிழ்ப் பொழிலில் பல கட்டுரைகளாக எழுதி வருபவர்.

இங்ஙனம் அவரால் எழுதப் பெற்ற ஆராய்ச்சிக் கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல் ஆகும். ஆசிரியர் இந்நூலில் குறித்துள்ள பல செய்திகள் ஆராய்ச்சி அரங்கிற்குப் புதியவையாகும். ஆசிரியர் தாமே தம் செலவில் பல இடங்களுக்கும் சென்று இச் செய்திகளைக் கண்டறிந்தார்; கற்போர்க்கு விளங்கும்படி அவற்றைத் தெளிவாகப் புலப்படுத்தியுள்ளார். ஆசிரியரது இம் முயற்சி பெரிதும் பாராட்டத்தக்கது.

ஆசிரியர் இவை போன்ற பல அரிய கல்வெட்டுச் செய்திகளை மேலும் எழுதி வெளியிடுமாறு இறைவன் திருவருளை வேண்டுகிறேன்.

—மா. இராசமாணிக்கனார்.

# முன்னுரை

தமிழக வரலாறு செம்மையாக அமைவதற்குரிய உண்மைச் சுவடுகள் செப்பேடுகளாகவும், கல்வெட்டுக்களாகவும், சிற்பவோவியங்களாகவும், புதைபொருள்களாகவும், சுவடிகளாகவும், நாட்டுப் பாடல்களாகவும், மலையாகவும் யாறாகவும் நாடெங்கணும் மல்கிக் கிடக்கின்றன. முயன்று அவற்றைக் கண்டு, ஆய்வுசெய்து, தமிழக வரலாற்றை வளரச் செய்த வரலாற்றறிஞரின் தொண்டினைப் பின்பற்றும் சிறு முயற்சியின் சின்னமே இந்நூலாகும்

கி. பி. 1944-ஆம் ஆண்டிலிருந்து யான் தனித்து முயன்று கண்டுபிடித்த புதிய கல்வெட்டுகளும், புதை பொருள்களும், செப்பேடுகளும் பலவாகும் அவற்றுள் இந்நூலுள் இடம் பெறுவன இருபது கட்டுரைகளேயாம்.

'சோழன் விசயாலயன் எடுத்த துர்க்கைக் கோயில்' முதல், தஞ்சையின் எஞ்சிய வரலாறாக யான் கண்டுள்ளன வற்றுடன் 'விக்கிரம சோழ விண்ணகரம்', செந்தலையைச் சேர்ந்த கல்வெட்டுகள்', 'கண் கொடுத்த வனிதம் கல்வெட் கள்' ஆகிய, என்னால் புதியனவாகக் கண்டுபிடிக்கப்பட்ட வெட்டுச் செய்திகளையும் வரலாற்று நூலாசிரியர்கள் கண் பிற்காலச் சோழர் வரலாறு, பாண்டியர் வரலாறு ஆகியவற் றின் வளர்ச்சியாக இடம்பெறச் செய்தற்கு இந்நூல் மிக் பயன் தரும்.

இதுவரையில், வெளிவராத, கல்வெட்டு, செப்பே புதை பொருள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொ வரலாற்றாராய்ச்சிக் கட்டுரைத் தொகுப்பாக வெளிவ

மு ம் தமிழ்நூல் இதுவேயாகும். இந்நூல், கலைக்கல்லூரி த ந்க் கல்லூரி மாணவர்கட்கும், தமிழக வரலாற்று வளர்ச்சி கருதும் அறிஞர்கட்கும் இன்றியமையாததாகும்.

இந்நூலுக்கு அரியதொரு மதிப்புரை வழங்கியுதவிய பேராசிரியர் டாக்டர் இராசமாணிக்கனார் அவர்கட்கும், அச்சுத்தாள்களை ஒப்புநோக்கித் திருத்தியுதவிய என் அருமை நண்பர் புலவர் தணிகை உலகநாதன் அவர்கட்கும், இதனைச் சிறந்த முறையில் வெளியிட முன்வந்த சென்னைச் சாந்தி நூலகத்தாருக்கும் என் அன்புகலந்த நன்றி என்றும் உரியதாகும்.

இதனைத் தமிழக அறிஞர் போற்றுவது, என்னுடைய தொண்டு மேலும் வளர்ச்சியுறுவதற்குரிய ஆதரவாகும்.

நலம்.

Lives of great men all remind us
We can make our lives sublime,
And departing, leave behind us
Footprints on the sands of time.

(H. W. Longfellow)

—சி கோவிந்தராசனார்.

# உள்ளுறை


| எண் | கட்டுரை | பக்கம் |
|---|---|---|
| 1. | விசயாலயன் எடுத்த துர்க்கைக் கோயில் | ... 5 |
| 2. | தஞ்சாவூர்—புறம்படி—கருந்திட்டைக்குடி | ... 18 |
| 3. | இஞ்சியில் எஞ்சிய சிற்பங்கள் | ... 26 |
| 4. | இராசராசேசுவரம்—உள்ளூர்ப் பண்டாரம் | ... 36 |
| 5. | மாமதிள் தஞ்சை | ... 46 |
| 6. | வரலாறு கொண்ட நாகத்தீ(வு) | ... 53 |
| 7. | விக்கிரம சோழ விண்ணகரம் | ... 62 |
| 8. | கண் கொடுத்த வனிதம் | ... 75 |
| 9. | திருப்பனையூர்க் கல்வெட்டுகள் | ... 84 |
| 10. | செப்பேட்டு வளைய முகப்பு | ... 89 |
| 11. | பருத்தியூர்க் கல்வெட்டுகள் | ... 93 |
| 12. | வரலாறு கண்ட வரதட்சணை | ... 97 |
| 13. | கருந்திட்டைக்குடிக் கல்வெட்டு | ... 101 |
| 14. | முதல் இராசேந்திரசோழன்செப்பேட்டுப் படிகள் | .. 105 |
| 15. | வராகியார் கோயிற் கல்வெட்டுகள் | ... 114 |
| 16. | இரண்டு புதிய கல்வெட்டுகள் (செந்தலை) | ... 118 |
| 17. | கொல்லியும் குற்றாலமும் | ... 126 |
| 18. | பட்டடை, புதைவடை, தாழிகள் | ... 135 |
| 19. | தஞ்சையில் நாயக்கர் ஆட்சி | ... 146 |
| 20. | மூன்று வரலாற்று முத்துக்கள் | ... 153 |



விசயாலயன் அமைத்த நிசும்பசூதனி (துர்க்கை)
(போட்டோ: ஆசிரியர்)

# 1. விசயாலயன் எடுத்த துர்க்கைக் கோயில்

சோழ மன்னர்கள் தலைநகரமாகக் கொண்டு ஆண்ட இடங்களுள் இன்று வரலாற்றுச் சின்னங்களுடன் தெளிவாக விளங்குவது தஞ்சைமா நகரமேயாகும். இத் தஞ்சை கி. பி. ஏழு, எட்டாம் நூற்றாண்டளவில் தென்னகத்தின் பெரும்பகுதியைத் தன்னகத்தே கொண்டு சிறந்து விளங்கிய பல்லவப் பேரரசுக்கு அடிக்கடி அடங்கிய பகுதியாகி, அவர் தம் ஆணைக் கடங்கியவரும் களப்பிரரின் வழிவந்தவருமாய முத்தரைய மன்னர்களால் காக்கப்பட்டு வந்துளதென்பதனை வரலாறுகள் கண்டுள்ளன. முத்தரைய மன்னர்கள் பல்லவர்கள் வெல்லும்படியாக அவர்களுக்குத் துணைபூண்டு பாண்டியனுடைய போர்முனையைக் கெடும்படிச் செய்தார்கள் என்பதை, 'பல்லவன் வெல்லத் தென்னன் முனையைக் கெடச் சென்ற மாறன்' (சுவறன் மாறன்) என்னும் செந்தலைக் கல்வெட்டுத் தொடர் நன்கு உணர்த்துகின்றது. இவ்வாறு பாண்டியருடன் அவர்கள் பகைத்துப் பல போர்களியற்றி வந்த காலத்தில், பழையாறை நகரை

யும் அதனைச் சார்ந்த பகுதிகளையும் வலியிழந்து பல்ல வருக் கடங்கிய நிலையில் காத்துவந்த பண்டைச்சோழ மரபின் வழிவந்தவர்கள், தமக்குரிய சோழ மண்டலத் தைக் கைப்பற்றக் காலங்கருதி யிருந்தனர் என்றும், கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இடைக் காலத்தில் தக்க வாய்ப்பு ஏற்படவே சோழன் விசயாலயன் என் பான் அப்பொழுது தஞ்சையை ஆண்ட முத்தரைய மன்னனைத் தாக்கித் தஞ்சமா நகரைக் கைப்பற்றிக் கொண்டான் என்றும், இக்காலம் கி. பி. 846 என்றும் வரலாறுகள் தெளிவுபடுத்தியுள்ளன. இவ்வாறு குன் றிக்கிடந்த சோழ இராச்சியத்தை மீண்டும் நிறுவி அதனைச் செம்மை செய்தவன் விசயாலய சோழனே என்பது வரலாற்று ஆராய்ச்சியாளர் யாவராலும் கருத்து வேறுபாடின்றி ஒப்புக்கொள்ளும் செய்தி யாகும்.

விசயாலய சோழன் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு முப்பத்தைந்து ஆண்டுகள் ஆட்சி புரிந் திருக்கிறான். இவனது ஆட்சிக் காலத்தில் இவன டைந்த வெற்றிக்குச் சின்னமாகத் தஞ்சையில் நிசும்ப சூதனி என்னும் பெயருடைய துர்க்கைக்குக் கோயி லொன்று எடுத்துள்ளான் என்பதைத் திருவாலங் காட்டுச் செப்பேடுகள் உணர்த்துகின்றன.

வரலாற்றுச் சுவட்டில், கி. பி. எட்டாம் நூற் றாண்டிலிருந்து சிறப்புற்றதாகவும், பெருநகராகவும், தலைநகராகவும் இருந்துவரும் தஞ்சைமா நகரில் விச யாலயனால் எடுக்கப்பட்டுள்ள துர்க்கைக் கோயில் யாண்டுளது என்பதனை இதுகாறும் குறித்தறிதற் கிடனின்றி வந்துளது.

இவ் வையத்தினைப் போக்க முயன்ற வரலாற்றறி ஞருள் முதலாவதாக முயன்றவர் திரு. ஜே. எம். சோம சுந்தரம் பிள்ளை பி. ஏ., பி. எல்., அவர்களேயாவர். இவர், தஞ்சை அரசர் திருக்கோயில் கண்காணிப்



பாளராக இருந்த ஞான்று, தஞ்சை இராசராசேசுவரத் தின் பெருமையினைத் தமிழ் மக்களும் பிறநாட்டவரும் அறிய எடுத்துக் கொண்ட முயற்சிகளுள் ஒன்றாக இராசராச சோழன் சதயவிழா வெளியீடாக 2-11-1938-இல் வெளியிட்ட "இராசராசேசுவரமும் பிற சோழர் கோயில்களும்" என்னும் சிறந்த நூலுள், விச யாலயன் எடுத்த துர்க்கையின் கோயில் பற்றிய தமது ஆய்வுரையினைக் குறித்துள்ளார். அதில் "தஞ் சாவூரில் சோழ அரசை நிலைநாட்டிய விசயாலயன், அங்கே துர்க்கைக்கு நிசும்பசூதனி என்ற பெயரால் கோயில் சமைத்தான். அஃது இன்னதெனக் குறிப்பிட முடியாதிருப்பினும் தற்போதைய தஞ்சை விண்ணாற் றங்கரைப் பாதையில் உள்ள கோடியம்மன் கோயிலா கவோ, தஞ்சைக் கீழ்வாயில் கோட்டத்துப் பூமாலை ராவுத்தன் கோயிலுக்கு அணித்தாயுள்ள காளியம்மன் கோயிலாகவோ அமையலாம்" என்று கூறியுள்ளார். இக்கருத்தினையே இவர் பின்னர் வெளியிட்ட "சோழர் கோயிற் பணிகள்" என்ற நூலுள்ளும் வெளியிட்டுள் ளார்.

'பிற்காலச் சோழர் சரித்திரம்' என்ற தலைப்பில் சோழர்களது வரலாற்றைத் தெளிவாக எழுதிய, காலஞ்சென்ற, வரலாற்றாசிரியர் T. V. சதாசிவ பண் டாரத்தாரவர்களும், 'விசயாலயன் சற்றேறக் குறைய முப்பத்தைந்து ஆண்டுகள் ஆட்சிபுரிந்திருத்தல் வேண்டும். இவனது இத்தகைய நீண்ட ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த செய்திகளை நன்கு அறிதற்குரிய கருவிகள் இக்காலத்தில் கிடைத்தில. இவன் தஞ் சைமாநகரில் துர்க்கைக்கு ஒரு கோயில் எடுப்பித்தான் என்று திருவாலங்காட்டுச் செப்பேடுகள் உணர்த்து கின்றன. நிசும்பசூதனி என்பது அவ்வம்மையின் பெய ராம். இந்நாளில் அக்கோயில் யாண்டுளது என்பது தெரியவில்லை. ஒருகால் அது தஞ்சைமா நகரிலுள்ள

காளிகோயில்களுள் ஒன்ருக இருத்தல் கூடும்' என்றே கூறியுள்ளார்.

மற்றும் சோழர் வரலாற்றினை வரைந்துள்ள ஆசிரியர்கள், 'விசயாலயன் முத்தரையரை வென்று தஞ்சாவூரைக் கைக்கொண்டான். அங்கு, துர்க்கைக் குக் கோயில் ஒன்றைக் கட்டினுன் என்று திருவாலங் காட்டுச் செப்பேடுகள் செப்புகின்றன. (S. I. I. Vol. 3, No. 205, Verse 46.) என்ற அளவில் கூறியுள்ளனர்.

இவ்வாருக, சோழன் விசயாலயன் தஞ்சையில் எடுத்த துர்க்கைக் கோயில் எதுவென்று கண்டறிதற் கியலாது இருந்து வந்துளது. தஞ்சையில் பழமை யுடன் அரசர்களால் உண்டாக்கப் பட்டதாகக் கூறப் பெறும் காளி கோயில்கள் எனக்குத் தெரிந்த அளவில் ஒன்பது உள்ளன அவற்றுள் எழுந்தருளியுள்ள தெய் வங்கள் முறையே நந்திமாகாளி அம்மன், கோடியம் மன், குந்தாளம்மன், சம்வர்த்தனி அம்மன், செல்லி அம்மன், வடபத்திர காளி அம்மன், வாஞ்சி அம்மன், உக்கிரகாளி அம்மன், மாரி அம்மன் என்ற பெயர்களு டன் இப்பொழுது விளங்குகின்றன. சென்ற சில ஆண் டுகளாக ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் மேற்குறித்த காளி கோயில்கட்கெல்லாம் சென்று, அம்மையின் திரு மேனி அமைந்துள்ள சிற்பச் சிறப்பு, கோயில மைப்பு, கருவறை அமைப்பு, சூழ்நிலை, தொன்மை, ஆகியவற்றைக் கண்டறிந்ததுடன், அவ்வக் கோயிலுக்குத் தொடர்புடைய பெரு மக்களையும், பூசாரியரையும் கண்டு கோயிலின் வரலாறுகளையும் கேட்டறிந்து வந்தேன். அதுபோது, விசயாலயன் எடுத்த துர்க்கைக்கோயில் ஒருகால் கிடைப்பதாயி னும், அதனுல் வரலாற்றுப் பயனென்னவென்று என்னை வினவியவரும் உண்டு. செல்லாத காசிலிருந்து இடிந்த சுவரும், சிதைந்த சிற்பமும் வரலாற்றுண் மைக்கு இலக்காகி அக்கலையை வளர்க்கும்போது, விச



யாலயன் எடுத்த துர்க்கைக் 'கோயிலைக் கண்டறிவ தும் வரலாற்றுள் தொடர்ந்துவரும் ஐயமொன்றினைப் போக்கும் அளவுடையதென்னும் அமைதியுடன், மேலும் முயன்று அதன் பயனுக யான் கண்ட உண்மையினையே இக்கட்டுரையின் வழியாக வெளி யிடவும் துணிந்தேன். முதலாவதாக,

திரு. ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளையவர்கள் கரு திக் கூறியுள்ள இரண்டு காளி கோயில்களைப் பற்றிய ஆய்வுரையினைக் கூறுவதே பொருந்துமென நினைக் கிறேன். தஞ்சைக்கு வடக்கு எல்லையாக வுள்ள விண் ணாற்றங்கரைக்கு வடக்கு நோக்கிச் செல்லும் நேர்ச் சாலையின் இடையே இரண்டு ஊர்ப்பகுதிகள் உள்ளன. முதலில் உள்ளது வடவாற்றின் வடகரையிலுள்ள கருந்திட்டைக்குடி, "தஞ்சைப் புறம்படி கருந்திட் டைக்குடி, கருந்திட்டைக்குடியான குலோத்துங்க சோழநல்லூர்" என்று கல்வெட்டுகளிற் கூறப்பெறுவ தும் இன்று கருந்தட்டாங்குடி என்று முறைதவறி அழைக்கப்படுவதுமாகிய கருந்திட்டைக்குடி யாகும். அடுத்து வடக்கே உள்ளது கருந்திட்டைக்குடியான சுங்கந் தவிர்த்த சோழநல்லூரென்று கல்வெட்டுகள் புகலுகின்றதும் சுங்கந்திடல் என்று இப்போது குறைத்து அழைக்கப்படுவதுமாய பகுதியாகும். இரண்டாவதாகக் குறிக்கப்படும் சுங்கந்திடலை, மேற் குறித்த நேர்ச்சாலை மேற்கு எல்லையாகக் கடக்கும் இடத்தில், சாலையின் மேற்புறம் அமைந்துள்ள பழமையான கோயிலே ஆய்வாளர் முதற்கண் குறித் துள்ள கோடியம்மன் கோயிலாகும். இக்கோயில் இயல்பான தரைமட்ட அளவில் ஆதியில் எழுப்பப் பட்டதாயினும், அருகிலுள்ள வெண்ணாற்றின் வெள் ளப் பெருக்கினுல் ஏற்பட்ட தாக்குதல்களுக்கு அடிக்கடி உள்ளாக்கியதால், சாலையின் உயர்வையொட்டிக் கோயிலைத் திருப்பணி செய்துள்ளனர். இக்கோயிலில்

எழுந்தருளியுள்ள அம்மையின் திருமேனி அமர்ந்த பாங்கிலுள்ள சுதைவேலைப்பாடுடையதாகும்.

இக்கோயில் அமைந்துள்ள பகுதியாகிய சுங்கந் தவிர்த்த சோழநல்லூரர், திரிபுவனச் சக்கரவர்த்திகள் கோனேரின்மைகொண்டான் என்னும் அரசனுடைய காலத்தில் (கி. பி. 12-ஆம் நூற்றுண்டளவில்) பிர்ம தேயமாகவும் திருவிடையாட்டமாகவும் பங்குசெய்து கொடுக்கப்பட்டதாகக் கூறும் தென்னிந்தியக் கல் வெட்டுத் தொகுதி பகுதி-I பிரிவு-Iலும், பகுதி-II பிரிவு-Iலும் முறையே கூறப்பெறும் கல்வெட்டுகளில் மேற்குறித்த சிற்றூர்க்கு எல்லை குறிக்கப்படுகிறது. அதன் மேற்கு எல்லையைக் குறிக்கும்பொழுது "சுங்கந் தவிர்த்த சோழநல்லூர்க்கு...மேல்பாற்கெல்லை கொடி வனமுடையாள் பெருவழிக்குக் கிழக்கும்" என்று திட்டமாகக் குறிக்கப்படுகிறது.

இன்றும் கல்வெட்டிற் கூறப்பெறும் எல்லைக ளோடு கூறப்படும் நிலப்பரப்பு உள்ளவாறு அமைந் திருப்பதால், எல்லையாகச் சொல்லப்பட்ட கொடிவன முடையாள் பெருவீதி, சிலவாண்டுகட்கு முன்வரை யில் இராசவீதி என்று அழைக்கபட்டமையால், அவ் வீதியில் எழுந்தருளியிருக்கும் அம்மையின் பெயரால் முன்னர், கொடிவனமுடையாள் பெருவீதி என்ற பெய ரைப் பெற்றிருந்ததென்பது இயல்பேயாம். எனவே கொடிவனமுடையாள் என்னும் கோடியம்மன் கோட் டம் விசயாலயனுல் எடுக்கப்பட்டதன்று வென்பது போதரும்.

இரண்டாவதாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்வது தஞ்சைக் கீழ்வாயிலை அடுத்துக் கிழக்கேயுள்ள பூமாலை ராவுத்தன் கோயிலைச் சார்ந்துள்ள காளி கோயி லாகும். இக்கோயிலில் எழுந்தருளியுள்ள காளியின் திருவுருவம் எழுந்த நிலையில், இன்று வங்காள மக்கள் வணங்குவதும், விசயநகரப் பேரரசர்கள் ஆங்காங்கு



பிரதிட்டை செய்திருப்பதுமாகிய மாகாளியின் தோற் றத்தில் மிக்க பெருமிதக் காட்சியோடு விளங்குகிறது. சிற்பச் சுவட்டில் பழமை காணக்கிடைப்பினும் இடம், சூழ்நிலை, கோயிலமைப்பு ஆகியவற்றில் எத்தகைய பழமையான சின்னத்தினையும் காணுதற்கில்லை. தஞ்சையை ஆண்ட மகாராட்டிய மன்னர்கள் சிறிய தாகவும் குறிப்பிட்ட கதை வேலைப்பாடுகளுடனும் தஞ்சை மாவட்டத்தில் ஆங்காங்குச் செங்கற்றிருப் பணியாக எடுத்துள்ள நூற்றுக்கணக்கான காளி கோயில்களின் அளவையொத்து, கருவறையும், விமானமும் காட்சியளிக்கின்றன.

கோனாட்டிலுள்ள நாரத்த மலையின் ஒரு பகுதி யாகிய மேலை மலையின்மீதும், பனங்குடி, காளியாப் பட்டி ஆகிய இடங்களிலும் விசயாலயன் தம் பெய ராலும், பொதுவாகவும் சிவபெருமானுக்கு எழுப்பி யுள்ள கற்றளிகள் இன்றும் பழமையுடன் ஆங்காங்கே நின்று விளங்குகின்றன என்பதை அறுதியிட்டுக் கூறும் வரலாறுகள் வெளிவந்தபின்னர், விசயாலயன் தனது தலைநகரில் தான் கொண்ட வெற்றிக்குச் சின்னமாகவோ, அன்றித் தனது குலத்தெய்வமாக வழி வழி வந்த துர்க்கை வெற்றிக்குரிய தெய்வமாத லினுல், அவ்வம்மையின் திருவருளினுற்றான் தான் வெற்றியடைய முடிந்ததென்னும் குறிப்பினுலோ எடுத்த நிசும்பசூதனியின் கோயிலும் கற்றளியாகவே அமைந்திருக்க வேண்டுமென்னும் கருத்தும் வலியுறு கின்றது. அன்றியும் தஞ்சையில் நாயக்க மன்னரின் காலத்தில் கட்டப்பட்ட இராசகோபாலசுவாமி கோயி லின் திருச்சுற்றிடத்தில் அவர்களது ஆட்சிக் காலத் தில் தொடங்கி நடந்ததாக அறிஞர்கள் கூறும் சிற்ப சாலையில் எஞ்சியதாக நிற்கும் பலதிறப்பட்ட காளி உருவங்களும் இவ்வம்மையின் திருவுருவையொத்த பாங்கில் உள்ளன என்பர்.

அடுத்து மூன்றாவதாக ஆய்வாளர்கள் கூறும் காளி கோயில், தஞ்சையின் தெற்கு எல்லை வரம்பில், வல்லம் செல்லும் சாலையில் அமைந்துள்ள செங்க ளாச்சி அம்மன் கோயிலாகும். இவ்வம்மையின் திருந் திய பெயர் சிங்கள நாச்சியார் என்பதாகும். இவ்வம் மையின் வரலாறு முதல் இராசராசனின் வாழ்க்கை வரலாற்றுள் இடம் பெற்றுள்ளமையால் அதனைப் பிறிதொரு கட்டுரையிற் கூற விழைந்து, ஈண்டு இவ் வம்மையின் பெயர், கோயில், சூழ்நிலை இவற்றால் விசயாலயன் எடுத்த துர்க்கைக் கோயிலன்று என்ற அளவில் கூறுதல் நன்றாம்.

இவ்வாறாக அறிஞர் கருதிய மூன்று கோயில் களும் விசயாலயன் எடுத்தற்குரியதாகக் காணுதற் கியலாவண்ணம் ஒவ்வொன்றும் உரிய பெயருடனும் அமைப்புடனும் விளங்கி வரும்போது, நிசும்பசூதனிக் குரிய கோயில் யாதாயிருக்குமென்று காணும் அவா மிகுவதாயிற்று.

தஞ்சையின் வரலாற்றினுக்கு இலக்காகக் கூறப் பெறும் இடங்களை இயன்றபோது யான் நேரிற் கண்டுவருங்கால், தஞ்சைக்குக் கீழ்ப்பகுதியாகவும் எல்லையாகவும் கல்வெட்டுகளில் கூறப்படும், தஞ்சா வூர் நந்தவனப் பற்று, மும்முடிச் சோழன் திருமதில், தஞ்சாவூர் பலதளிப் பற்று ஆகியவைகளை இன்றும் காணமுடிந்தது. இப்பகுதிகள் தஞ்சையின் வடக்குப் பகுதியில் ஓடும் வடவாற்றின் இருமருங்கும் இடத்திற் கேற்ப அமைந்துள்ளன. வரலாற்று நோக்குடன் இப் பகுதியைத் துருவிக்காணும்போது, இவ்வாற்றின் தென்கரையில் இடத்திற்கு ஏற்ற அமைப்பில் நெடி தாக நெளிந்து செல்லும்படியான புறமதில் ஒன்று காட்டரணைச் சார்ந்து இருந்ததென்பது புலனாகிறது. இம்மதிலின் கிழக்குப் பகுதியே மும்முடிச்சோழன் திரு மதில் என்று பெயர் பெற்றிருக்க வேண்டுமென்பதை



அப்பகுதியில் தஞ்சாவூர் நந்தவனப் பற்று அமைந் திருப்பதைக் கொண்டு உறுதிகொள்ளற் கியலுகின் றது. இப்பகுதியே, கருவக்காடு, கரம்பை, அம்மா தோட்டம் என்றுஇப்பொழுது அழைக்கப்படுவதாகும். இப்பகுதியைச் சார்ந்த குலாலர் தெருவின் மேற்குப் பகுதியாகவும், வடவாற்றின் தென்கரையாகவும் உள்ள, மேலேகண்ட பூமரத்தான் கோயிலுக்கு நேர் கிழக்காகவும் அண்மையிலும் உள்ள உக்கிரகாளி அம் மன் கோயிலைக் காணலானேன்.

இக்கோயிலின் பழமை பலமுறை மாற்றப்பட்டுள் ளது. மூலத் தெய்வமாக விளங்கிய காளியின் திருவுரு வத்துடன் பல பழமையான திருவுருவங்கள் செம்மை யில்லாத நிலையில் கோயில் சுவரில் ஆங்காங்கு, சார்த்தி வைக்கப்பட்டிருந்தன. பல்லவர்காலச் சிற்பச் சுவடுகள் தெள்ளத்தெளிய அச்சிற்பங்களில் விளங்கு கின்றன. கோயில், தஞ்சை அரசர் கோயிற் கண் காணிப்புக்குட்பட்டு இருந்து வருகிறது. கண்காணிப் பாளரிடம் இச்சிற்பங்களைப் பற்றி யான் வினவிய போது, இன்றுள்ள காளி கோயிலுக்கு முன்னருள்ள வடவாற்றின் படுகையில் குலாலர் மண் எடுத்தபோது, அடியில் பெரியதொரு கற்றளியின் அடிப்படை இருந்த தென்றும், அப்பகுதியில் புதைபொருளாகக் கிடைத்த சிற்பங்களே இவைகளென்றும், இவற்றுள் செம்மை யாக இருந்த நாரிபாகர், உமையம்மை ஆகிய அழ கிய சிற்பங்கள் தஞ்சைக் கலைக்கூடத்தில் இடம் பெற்று விட்டன வென்றும் கூறினர்.

இவ்வாறு புதைந்து கிடக்கும் கற்றளியினைக் கொண்டும், காளிகோயிலின் அடிப்படையினைக் கொண்டும், வடவாற்றின் வெள்ளத்தால் ஒரு பெரிய சிவன் கோயிலும், காளி கோயிலும் ஒரு காலத்தில் சிதைந்திருக்க வேண்டுமென்பதும், காளிகோயில் மட்

டும் இயன்ற அளவில் ஊர்ப் பொதுமக்களால் சீர்திருத்தப்பட்டிருக்கிற தென்பதும் புலனுகின்றன.

புதைபொருளாகக் கிடைத்துள்ள சிலைகளுள் துர்க்கையின் சிலையுடன் வேறுபட்ட பெண் தெய்வங்களின் சிலைகளும், விநாயகர் திருமேனியும் இருக்கின்றன. இவைகளைக் கொண்டு நோக்குமிடத்து சிதைந்து மறைந்துள்ள கற்றளியின் ஒரு பகுதியாக மிக உயர்ந்த நிலையில் உக்கிரகாளி அம்மன்கோயில் அமைக்கப்பட்டிருக்கிற தென்பதும் நன்கு புலனுகிறது. மற்றும் இக்கோயிலைச் சார்ந்து, ஒரு கோயிலுக்கு அங்கமாக விளங்கும் திருக்குளமும் அமைந்து இன்றளவும் நிற்பது குறிப்பிடத் தக்கது.

உக்கிரகாளியம்மன் திருவுருவம் ஒரு காலத்தில் கோயில் சிதைவடைந்தபோது சிதைவு பெற்றதால், அதனை முற்பகுதியில் அமைத்து வைத்து, வேருெரு காளியம்மையின் திருவுருவத்தைக் கருவறையுள் ஏற்படுத்தியுள்ளனர். பழமையும் சிற்பத்திறனும் மிக்கு விளங்கும் காளியின் திருவுருவம் மிக்க மேன்மையுடன் விளங்குகின்றது. ஐந்தடிக்கு மேலான உயர அளவில் அமர்ந்த பாங்கில் விரித்த சடைமுடியுடன் வெகுளியுடன் வெறித்து நோக்கும் பாங்கில், நான்கு திருக்கரங்களுடன், அழகிய மார்பில் தலைமாலை அழகிட, உடுக்கையொத்த இடையில் உதரபந்தனம் இருந்து அழகை மேலும் விளக்க, தமது இரண்டு பாதங்களுள் தூக்கி மிதிக்கும் பாங்கிலுள்ள வலப் பாதத்தின் கீழ் ஒரு வீரனும், ஊன்றி மிதிக்கும் இடப் பாதத்தின் கீழ் ஒரு வீரனும் நசுக்கப்படும் மாட்சியுடன் வலக் கைகளுள் எடுத்த கரத்தில் திரிசூலம் நின்று இலங்க, அம்மை எழிலோடு விளங்கும் சிற்பத் திறனின் காட்சி காணற்கினியது.

வடமொழியிலுள்ள பிரமாண்ட புராணத்திலிருந்து மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டதாகக் கி.பி.



1893-இல் அச்சியற்றப்பட்டிருக்கும் தஞ்சைப் புராணத்தில் உக்கிரமாகாளி வடிவில், உமாதேவி தஞ்சன், தாரகன் என்னும் இரண்டு வீரர்களைக் கொன்று, பராசர முனிவன் விருப்பத்தை நிறைவேற்றியதாகக் கூறப்பட்டுள்ளது. புராணச் செய்தியாயினும் அதனுள் வரலாற்றுக் குறிப்பு இல்லாமலும் இல்லை.

மிக்க புகழோடு வழிவழி வந்த சோழ மரபினை மங்கும்படிச்செய்த பல்லவர்களையும், அவருக்கு உட்பட்ட முத்தரைய மன்னர்களையும் விசயாலயன் உள்ளிட்ட சோழர்கள் பகைவராகக் கருதி யிருந்ததுஇயல்பேயாம். அக்காலத்தில், தஞ்சையை ஆண்ட முத்தரையரை விசயாலயன் வென்றது வெற்றிக்குரிய தெய்வத்தின் திருவருட்டுணை யென்று கொண்டிருக்கலாம் என்று முன்னரும் கூறினும். எனவே, அவன் கொண்ட வெற்றிக்குச் சின்னமாகவே துர்க்கையின் உருவமும் செய்யப்பட்டுள்ளது என்பதை மேற்குறித்த அம்மையின் திருவுருவ அமைப்பினுல் அறியலாம்.

துர்க்கை மிக்க கோபத்துடன் தன் பாதங்களில் இருவரை மிதித்து அழித்து நிற்பதாக முன்னர்க் கூறினேம். அவருள் ஒரு வீரன் அரசமுடி தரித்துள்ளான். மற்ருெருவன் விரித்த தலையுடன் வீழ்ந்துள்ளான். இந்நிலையைக் கூர்ந்து நோக்கின், விசயாலயன் வென்ற காலத்தில் தஞ்சையையும், அதன் பகுதிகளையும் முடிதரித்து ஆண்ட முத்தரைய மன்னன் ஒருவனே என்பதும், அவனுக்குத் துணையாக மற்ருெரு பெருவீரனும் இருந்திருக்கிறனென்பதும் தெரிகிறது. இவ்விருவரையும் தனது துணிவினுல் வென்றதற்குரிய சின்னமாகவே துர்க்கையின் சிலையமைப்பு ஏற்பட்டுள்ளது. மற்றும் நிசும்பசூதனி என்னும் பெயரும் கொல்லுதலில் தந்திரவெற்றியுடையளென்னும் சிறப்புடன் இருப்பதால் அப்பெயர் உக்கிரகாளி என்று வழங்கி வருதற்கு இயல்பாகியது போலும்! இவ் வுக்

கிரகாளியம்மன் கோயிலும் தஞ்சையின் எல்லைக்கு மேற்பட்ட இடத்திலிராமல், வடமேற்கு எல்லைக் குட்பட்ட புறமதிலின் வாயிலருகே அமைந்திருந்திருக்கிற தென்பது தெளிவாம். இப்பகுதியைச் சார்ந்த கருவக் காடு என்னும் படுகையைச் சார்ந்து அரசர்களின் நினைவுச் சின்னங்களோடு கூடிய அம்பலமொன்று இருந்து அழிந்திருக்கிறது. இது பற்றிய விளக்கத் தினைப் பின்னர் கூறுதும்.

எனவே விசயாலயன் எடுத்த துர்க்கைக் கோயில், தஞ்சை பலதளிப் பற்று, நந்தவனப் பற்று ஆகியவற் றைச் சார்ந்த இடத்தில் அமைந்துள்ளதும், இன்று உக்கிரகாளி என்று பெயர் கூறப்படுவதுமாகிய துர்க்கைக் கோயிலேயாகும். இங்குச் சிதலமடைந்த நிலையில் வெளியில் வைத்துள்ளதும், மேலே விளக் கிய சிற்பத்திறன் உள்ளதுமான காளிதேவியின் சிலையை விரைந்து புதைபொருள் ஆராய்ச்சியாளர் கண்டு கண்காணித்தல் நலமாம்.

தஞ்சை, குலாலர் தெருவை அடுத்துள்ள உக்கிர காளியம்மையின் திருவுருவமும், கோயிலும் விச யாலயன் எடுத்தவை என்பதற்கு யான் தரும் சான்று கள் :—

1. உக்கிரகாளி யென்று பெயர் கூறப்பெறும் துர்க் கையின் திருவுருவ அமைப்பு, பல்லவர் காலச் சுவட்டுடன் கூடிய, பழைய சோழர் காலச் சிற்ப முறையுடன் இலங்குகின்றது.
2. இப்பொழுதுள்ள கோயில் செங்கல் திருப்பணி யாகக் காணப் படினும், அடியில் அகழ்ந்து பார்க் கும்போது சிறந்த கற்றளியின் அடிப்படை இருக் கிறது.
3. ஒரு காலத்தில் இக்கோயில் கற்றளியாக இருந்த தென்பதைச் சிறந்த முறையில் பழமையான பலி பீடமட்டும் எஞ்சியுள்ளதைக் கொண்டு அறிய முடிகிறது.



4. இக்கோயிலைச் சார்ந்த பகுதியில் பெரிய அளவில் கற்றளி யொன்று இருந்து, வடவாற்றின் அழி வால் தரையினுள் மறைந்து கிடக்கின்றது. அதில் விளங்கிய சிற்பங்கள் புதை பொருளாகக் கிடைத்திருக்கின்றன.
5. கல்வெட்டுக்களில் தஞ்சையின் எல்லைப்புற மதில் கூறப்பட்டுள்ள இடத்திற்கு இலக்காகவே இக் கோயில் நந்தவனங்கள் சூழ அமைந்திருக் கின்றன.
6. விசயாலயன் இரண்டு அரசர்களை அழித்தபின் னரே தஞ்சையின் வெற்றியைக் காண முடிந்த தென்பதற்கு அறிகுறியாக அம்மையின் திருக் கோலம் உளது.
7. தஞ்சையில் ஒன்பது காளியம்மன் கோயில்கள் இருப்பினும் தஞ்சைப் புராணம் அசுரர்களை வென்று தஞ்சையைக் காத்துத் தஞ்சாபுரி என்று பெயர் தந்த தெய்வம் உக்கிரகாளி யென்றே கூறுகிறது.
8. நிசும்பசூதனி என்னும் பெயர்ப் பொருளுக்கு இலக்காக உக்கிரகாளி என்னும் பெயர் அமைந் துள்ளது.
9. இக்கோயில் தஞ்சை அரசர் கோயில்களுள் ஒன் ருக இருந்து வருவதும், இக்கோயிலின் பழமையை நன்கு உணர்த்துவதாகும்.

மேற்குறித்துள்ள சான்றுகளினுல் சோழன் விச யாலயன் கி.பி.ஒன்பதாம் நூற்ருண்டின் பிற்பகுதியில் எடுத்த நிசும்பசூதனி என்னும் துர்க்கைக் கோயில் இன்று சிதைந்த நிலையில் இருக்கும் தஞ்சைக் குலாலர் தெருவைச் சார்ந்து வடவாற்றின் தென்கரையிலுள்ள உக்கிரகாளியின் கோயிலேயாம் என்பது விளக்கம்.

## 2. தஞ்சாவூர் - புறம்படி
## கருந்திட்டைக்குடி

தஞ்சை அல்லது தஞ்சாவூர் என்னும் ஊர்ப் பெயருக்கு உரியதாக இதுவரையில் பலவாறான விளக்கங்கள் வெளிவந்துள்ளன. அவற்றுள் :—

(1) ஆவூர் என்பதே தஞ்சையின் பழமையான பெயர். முன்னொருகால் தஞ்சன் என்னும் அரக்கனொருவன் இவ்வூரை ஆண்டு வந்தான். அவன் கொடுமைக்கு ஆற்றாத பராசரர் முதலிய தவத்தோரின் விருப்பப்படி உமாதேவி அவனைப் போரிட்டுக் கொன்றாள். அவன் இறக்கும்போது தன் பெயராலேயே இவ்வூர் அழைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டான். அதனால், தஞ்சன்+ஆ+ஊர் = தஞ்சாவூர் என்று வழங்கி வருகிறது என்பது ஒன்றாகும். இக்கதை தஞ்சாவூர்ப் புராணத்தின் அடிப்படையில் தோன்றியதாகும்.

(2) 'சோழநாடு சோறுடைத்து' என்னும் சிறப்பால் நல்ல வளமுடைய நாடு என்பது தெளிவு. வளமுடைய நாட்டை மக்கள் வாழ்வின் பொருட்டு நாடி வருதல் இயல்பு. வருவார்க் கெல்லாம் வஞ்சமின்றித்



தஞ்சம் அளித்துப் புகழ் பெற்றமையால் தஞ்சம்+ஆ+ஊர் = தஞ்சாவூர் என்றழைக்கப்பட்டது; என்று கூறப்படுவது மற்றொன்றாகும். இன்னும் சில உளவேனும், அவற்றுள் புனைந்துரை மிகுந்தமையால் விடுத்து மேற்செல்லுதும்.

தமிழகத்தில் விளங்கிய மூன்று நாடுகளையும், சேர நாடு வேழமுடைத்து, பாண்டிய நாடு முத்துடைத்து, சோழ நாடு சோறுடைத்து என்று அவ்வவற்றின் சிறப்பான இயற்கைப் பயனையே இலக்காகக் கொண்டு சிறப்பித்துள்ளனர். சோழ நாட்டின் தலைமையாக என்றும் மாறாமல் விளங்கிய பகுதி இன்றுள்ள தஞ்சை மாவட்டம் உறையூரளவில் பரந்து நின்றதேயாம். வானிலை பிறழினும் தானிலை திரியாத் தண்டமிழ்க் காவிரி, பல கால்கொடு புக்கு, கழனி பல்லாயிரம் அளாவி, இப்பகுதியை மிக்க வளமுடையதாக்கியுள்ளது. காவிரி, தான் தோன்றிய குடகுநாடு முதல் நெடிய தொலைவு வழிக்கொண்டு பல நாடுகளை ஊடுருவி இழிந்தும் இவற்றிற்கெல்லாம் பெரும் பயன் நல்காது, பெயர்ந்தோடிவந்து, கடலை யடுத்த சோழ நாட்டிலேயே மெல்லென வூர்ந்து பல்வளம் கண்டுளது. இத்தகு இயல்பினாலேயே காவிரி புரக்கும் நாடென்றும், புனல் நாடென்றும், புகழ் பெற்றுளது இச்சோணாடு. எனவே, நீருயர நெற்பயிருயர்ந்து தண்ணெனும் காட்சி நாடெங்கும் பருவ காலங்களில் மாட்சியுடன் இலங்குதல் இயல்பன்றோ? அத்தகு காட்சி மிகு செயல்கள் எண்ணிலவாய், நிலமகள் போர்த்துள்ள பச்சைப் பட்டாடையென யாண்டும் மருதநிலப் பாங்கே செறிந்து நின்று காண்டற்கு இனியவாய்த் திகழ்ந்தமை கொண்டே தண்மை+செய் = தண்செய் என்று இப்பகுதியை ஆன்றோர் பெயரிட்டு அழைத்தனர்போலும்! அப் பண்புள்ள பெயர் காலப்போக்கில் ஒலியளவில் மாற்றமடைந்து, நன்செய் என்பன

நஞ்சை புஞ்சை என வழக்காற்றில் வந்துளமைபோல தண்செய்-தஞ்சை என வந்துளது எனலாம்.

தஞ்சை என்னும் பெயர் எப்பொழுது ஏற்பட்டது என்பதை அறுதியிட்டுக் கூறுதற்கியலவில்லை. ஆயினும், கி. பி. ஏழாவது நூற்றாண்டின் முற்பகுதியிலிலிருந்து வழக்கில் இருந்து வந்துளது என்பதைத் தெளிய ஏது உளது? இக் காலத்தில் வாழ்ந்தவராக வரலாறுகள் கூறுகின்ற திருநாவுக்கரசு நாயனார், சிவனுறையும் திருத்தலங்களைத் தொகுத்துக் கூறுமுகத்தானுரைத்துள்ள தமது தாண்டகத்தினுள் "தஞ்சை, வழுவூர், வீரட்டம், மாதானம்" என்றும் 'தஞ்சைத் தளிக்குளத்தார்' என்றும் தஞ்சையைக் குறித்துள்ளார்.

கி. பி. எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் விளங்கிய பல்லவப் பேரரசன் இரண்டாம் நந்திவர்மனின் கீழிருந்து தஞ்சைப் பகுதியை அரசாண்ட குறுநில மன்னனாகிய சுவரன் மாறன் என்னும் முத்தரைய மன்னனைப் பற்றி, பாச்சில்வேள் நம்பன் என்னும் புலவர் பாடிய, செந்தலை சுந்தரேசுவரர் கோயில் மண்டபத்திலுள்ள நியமத்துப் பிடாரியார் கோயில் தூண்களில் காணப்படும் பழமையான கல்வெட்டுப் பாடல்களில் "வாகைப் பூக்தஞ்சிக் கமழ்கண்ணிக் கோமாறன்—தஞ்சைகோன்" என்றும், "கள்வர் கள்வன் தஞ்சை நற்புகழான்" என்றும் கூறப்பட்டுள்ளன. அடுத்து, அந்நூற்றாண்டிலேயே வாழ்ந்தவராகக் கருதப்படும் திருமங்கையாழ்வாரும், "வாடினேன்" என்று தொடங்கும் தமது திருமொழியின்கண் ஆறுவது பாடலில், வம்புலாம்சோலை மாமதில்தஞ்சை மாமணிக் கோயிலே வணங்கி" என்றும், ஐந்தாம் திருமொழி மூன்றாம் பாடலில், 'வரைமீகானில் தடம்பருகு கருமுகிலைத் தஞ்சைக் கோயில் தவநெறிக்கோர் பெருநெறியை" என்றும் கூறியுள்ளார். மற்றும் முதலாழ்



வார் மூவருள் ஒருவரான பூதத்தாழ்வாரும், "தமருள்ளம் தஞ்சை தலையரங்கம் தண்கால் தமருள்ளுந் தண்பொருப்பு வேலை" என்றும், திருமால் அமரும் இடங்களைக் கூறுமுகத்தான் தஞ்சை என்றே கூறியுள்ளார். இவ்வாறு கி. பி. ஏழாவது நூற்றாண்டிலிருந்து தஞ்சை என்ற பெயரே வழக்கிலிருந்ததென்பது புலனாகிறது. எனவே, தஞ்சை என்பது மரூஉ வென்று கொண்டு நோக்குதற்கு மேற்கூறியுள்ள சான்றுகட்குரிய காலங்களில் தஞ்சாவூர் என்று வழங்கியதாகத் தெரியவில்லை; பின்னர், பத்தாவது நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து தோன்றிய சோழர் காலக் கல்வெட்டுக்களிலும், செப்பேடுகளிலும் தஞ்சாவூர் என்றும் தஞ்சை என்றும் விரவி வழங்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, முதல் இராசராசனுடைய தஞ்சைப் பெரியகோயில் கல்வெட்டில், "தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர் நாம் எடுப்பிச்ச திருக்கற்றளி" என்று கூறப்பெற்றுளது.

எனவே, நன்னிலம், காழி, வல்லம், திட்டை, அரங்கம் என்னும் இயற்கையின் சுவட்டாலெழுந்த பெயர்கள் எவ்வாறு ஊர்களை உணர்த்தி நிற்கின்றனவோ அதைப் போலவே தண்செய் என்னும் செம்மையான பெயரின் திரிபாக வழக்கிலுள்ள தஞ்சை என்னும் பெயர் ஊரை உணர்த்தி நின்றதென்பதும், பின்னர் விரிவுபெற்றுத் தஞ்சாவூர் என்றுள்ளதென்பதும் கொள்ளத் தகுதியாகவுளது. மற்றும், முதல் இராசராசன் காலத்தில் தோன்றிய கல்வெட்டுகளில், 'தஞ்சாவூர் சயபீமதளி', 'தஞ்சாவூர் பிரமகுட்டம்', 'தஞ்சாவூர் தஞ்சை மாமணிக்கோயில்' என்னும் பகுதிகள் இக்கருத்தினைக்கொண்டு சிந்திப்பதற்குரியன.

தஞ்சை மாநகர் சோழநாட்டிற்குத் தலைநகராக அமைந்ததற்குரிய ஏதுவினை ஆராய்தல் நன்றாம், பண்டைச் சோழப் பேரர்சுகட்கு, ஆரூர், உறையூர்,

புகார் முதலிய இடங்கள் அவ்வக் காலங்களில் தலைமை யெய்தி யிருந்தமையைச் சங்க இலக்கியங்களும், வரலாறுகளும் நன்கு பகரும். ஆரூரும் உறையூரும் ஆறூர்ந்து அழிவு பெற்றுவிட்டன என்பதை, இன்று கிடைக்கின்ற புதை பொருள் ஆராய்ச்சியின் பயனாய் அறியமுடிகிறது. புகார் கடல் புகுந்து அழிவுற்றது என்பதைச் சங்க இலக்கியங்கள் நன்கு உணர்த்திவிட்டன. எனவே அடுத்துச் சோழநாட்டை அரசாளத் தொடங்கியவர்கள் மேற்குறித்த இயற்கையழிவுகட்கு இலக்காகாத இடத்தினைத் தேர்ந்தெடுத்தனர். அதற்குத் தக்க நிலப்பாங்கும் ஆட்சிக்கு ஏற்புடையதுமாகவுள்ள பகுதியே ஏற்றதாகும். எனவே, நாட்டின் நடுவேயுள்ளதும், வலிய மண்ணும், பாறைத் தளமும் கூடிய மேட்டுப்பாங்கின் (பீடபூமி) தொடக்கமாக உள்ளதும், இயற்கைச் சூழலில் நீர்வள மிக்கதுமான இடத்தைத் தேர்ந்தெடுத்தனர். அதற்குப் பெருநிலப் பரப்பிற்கிருந்த பொதுப் பெயரைச் சிறப்புடையதாக்கித் தஞ்சை எனப் பெயரிட்டனர். தஞ்சை தலைநகரமாகியது. மாளிகையும், பூங்காவும், கோட்டை கொத்தளங்களும் எழுந்தன. 'மாமதிள் தஞ்சை' என்று திருமங்கை மன்னனும், 'இஞ்சிசூழ் தஞ்சை' என்று கருவூராரும் ஏற்புடன் சிறப்பிக்கும் அளவிற்குத் தஞ்சைமா நகரம் தழைத்தோங்கியது.

தஞ்சைமா நகரின் வடபால் எல்லையிட்டதைப் போன்று கிழக்கு மேற்காக ஓடும் ஆறு வடவாறென்றே பெயர் பெற்றுள்ளது. இவ்வாற்றை வீர சோழ வடவாறென்று பிற்காலக் கல்வெட்டுகள் சுட்டுகின்றன. இவ்வாற்றின் வடகரையில் அமைந்துள்ள பகுதி கருந்திட்டைக்குடியாகும். இது தஞ்சையின் புறம்படி என்று கல்வெட்டுகளில் வழங்கப்பெற்றுள்ளமையால், தஞ்சையின் புறநகர் என்பது தெளிவாகின்றது. இவ்வூரினை, கி. பி. 1002இல் எழுந்துள்ள முதல் இராசராசன் கல்வெட்டில், "தஞ்சாவூர் கூற்றத்து தஞ்சாவூர் புறம்படி வடவாற்றின் வடகரை கருந்திட்டைக்குடி" என்றும், கி. பி. 1015, 22 ஆகிய ஆண்டுகளில் உண்டான முதல் இராசேந்திரன் கல்வெட்டுகளில் முறையே "தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர்க் கருந்திட்டைக்குடி", "தஞ்சாவூர் புறம்படி கருந்திட்டைக்குடி" என்றும் கூறப்பட்டுள்ளன. மற்றும் திருநாவுக்கரசு நாயனூர் தமது திருத்தாண்டகப் பாடலுள் "நற்கொடிமேல் விடையுயர்த்த நம்பன் செம்பங்குடி, நல்லக்குடி நளி நாட்டியத்தான்குடி, கற்குடி. தென்களக்குடி, செங்காட்டாங்குடி, கருந்திட்டைக்குடி கடையக்குடி" என்றும் சிவத்தலங்களை அடைவுபடுத்திக் கூறியுள்ளவற்றில் குறித்துள்ளார். இதனுல் கி. பி. ஏழாம் நூற்றுண்டளவிலேயே தெளிவாக, கருந்திட்டைக்குடி என்று அழைக்கப்பட்டுள்ளமை தெளிவாம்.



இத்தகைய கருந்திட்டைக்குடியின் தெற்கு எல்லையாக வடவாறும், வடக்கு எல்லையாக வெண்ணாறும், குறுகிய தொலைவில் அமைந்து இடையே திட்டென விளங்கும் பான்மையினுல் திட்டை என்றும், மக்கட் செறிவில்லாத அக்காலத்தில் வளமுள்ள இப்பகுதியில் மரங்கள் செறிந்து தோற்றத்திற்குக் கருங்காடாய் விளங்கியமை குறித்து அடையடுத்துக் கருந்திட்டையென்றும், பின்னர் மக்கள் இப்பகுதியில் வாழ்க்கை மேற்கொள்ளப் புகுந்தகாலை, அதன் சுவடாகக் கருந்திட்டைக்குடி என்று விரிந்தும் பெயர் பெற்றுள்ளது போலும்!

செம்மை நிறைந்து நின்ற கருந்திட்டைக்குடி பிற்காலத்தில் கருந்தட்டாங்குடி என்று ஆகிநின்ற அவலத்தை, எண்ணித் துணிந்து மாற்றிய பெருமை, கரந்தைத் தமிழ்ச் சங்கம் என்று பெயரிட்டுத் தோற்றுவித்தாரின் ஆற்றலேயாகும். கருந்தட்டாங்குடி

என்று கூற அஞ்சி, கரந்தை எனும் மரூஉவினைக் கண்ட எமது கரந்தைத் தமிழ்ச் சங்கம் இனி தன் பொன் விழாவின் சின்னமாகவும், 'மீட்டல் கரந்தை' எனும் மேலுரையின் பயனாகவும், கருந்தட்டாங்குடி எனும் பிழை பொருந்திய பெயர் மாறி கருந்திட்டைக் குடி என்றே மீண்டும் விளங்க வேண்டும் என்பது எனது பேரவாவாகும்.

இக் கருந்திட்டைக்குடியின் பழமைக்குரிய சின்னங்கள் பலவுளவேனும், அவற்றுள் மிக்க தொன்மையானது இன்று கருவேலநாதர், வசிட்டேசுவரர் என்றெல்லாம் அழைக்கப்படும் சிவனுக்குரிய கோட்டமாகும் இக்கோயில், தஞ்சைப் பெரிய கோயில் தோன்றுவதற்கு முன்னரேயே நன்னிலையில் சிறப்புற்றிருந்ததாகும். மற்றும், முதற் கரிகாலச் சோழன் இக்கோயிலைத் தோற்றுவித்தான் என்ற செய்தியும் நிலவி வருகிறது. இப்பகுதி காடாக இருந்தமையை, கருவேற்கானம், பற்பூரகானம், வன்னியஞ்சோலை என்றெல்லாம் தஞ்சைப் புராணம்கூறுகின்றது. இக்கோயிலின் கருவறையில், முதல் இராசராசன், முதல் இராசேந்திரன் ஆகியோரால் தோற்றுவிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகள் பத்துக்கு மேல் உள்ளன. சில கல்வெட்டுகள், திருச்சுற்றின் தளவரிசை உயர்த்தப்பட்டிருப்பதன் காரணமாகப் புதையுண்டு நிற்கும் கருவறையின் அடிப்படையில் மறைந்துள்ளன. இவற்றுள் பத்துக் கல்வெட்டுக்களை அரசியலார் தென்னிந்திய கல்வெட்டுத் தொகுதி 5இல் வெளியிட்டுள்ளனர். இக்கல்வெட்டுகளுள் முதல் இராசராசனின் ஆட்சியாண்டு 17-ல் எழுந்ததும், குந்தவை பிராட்டியாரால் இக்கோயில் நந்தாவிளக்கு எரிப்பதற்குரிய நிபந்தமாக, ஊர்ச்சபையாரிடம் நிலம் விலைக்குப் பெற்ற நிகழ்ச்சியைக் கூறுவதுமான கல்வெட்டே பெரிய அளவுடையதாகும்.



இக்கோயிலில் இன்றுள்ள துவாரபாலகர்களைச் செய்தமைத்தது, செம்பொற் கோட்டத்து, பட்டின நாட்டுப் பழம்பட்டினத்து இருக்கும் வெள்ளாட்டி அருணிமிமலைப் பிராட்டி என்பவளாகு மென்பதைக் கருவறையின் கிழக்குப் புறச்சுவரிலுள்ள கல்வெட்டு உணர்த்துகின்றது.

கருவறையின் புறமாக அமைக்கப்பெறும் சிற்ப மாடங்களுள் (கோஷ்ட பஞ்சரம்) சிற்ப இலக்கணத்தால் சிறந்த தெய்வத் திருமேனிகள் உயிர்ப்புடன் விளங்குகின்றன. மேற்குப் புறமுள்ள பிச்சதேவர், வடக்குப்புறமுள்ள துர்க்கை தெற்குப் புறமுள்ள ஆடவல்லானின் எஞ்சிய திருமேனி ஆகியவைகள் அழகுக் கலைக்கோரிருப்பிட மாகவும், கருத்துக்கு இலக்காகவும் அமைந்து ஆயிரம் ஆண்டுகட்கு முன்னர் தமிழகத்தில் வளர்ந்த சிற்பக்கலைக்கோர் எடுத்துக்காட்டாக இலங்குகின்றன. இவற்றுடன், கருவறையின் தென்புறத்திலேயே வலப்புறமாகவுள்ள திருநாவுக்கரசர், ஞானசம்பந்தர் ஆகிய சமய குரவர்களின் படிமங்கள் கண்டு களிக்கத்தக்கவை. அப்பர்பெருமான் சமண்சார்ந்து சூலை நோயுற்றுப் பின்னர், சிவபெருமானருளால் நோய் நீங்கப்பெற்றாரென்பதைச் சைவ வுலகம் நன்கறியும். சூலை நோயுடன் துன்புற்ற அப்பரின் நிலையைச் சிற்பி அப்படியே உருவாக்கியுள்ளார். வலக் கையால் வயிற்றைத் தடவிக்கொண்டு, நோயின் கொடுமையைக் காட்டும் முகக்குறியுடன் அடியார் நிற்கும் காட்சி வரலாற்றுண்மைக்கு இலக்காகிறது. மற்றும், கருவறையின் மேற்புறம் பிச்சதேவரைச் சார்ந்துள்ள உமையொருபாக மூர்த்தம் இடப்பாகத்தில் பெண்மைக் குறிகள் அமையாது வலப்பக்கம் அமைந்து புதுமையுடன் விளங்குகிறது. இச்சிவன் கோயிலின் வடக்குத் திருச்சுற்றில் இணைந்தபாங்கில் அமைந்துள்ள செல்வி அம்மன் கோயில் பழமை பொருந்தியதாகும்.

# 3. இஞ்சியில் எஞ்சிய சிற்பங்கள்

திருமங்கை ஆழ்வார், கருவூரார் ஆகிய இரண்டு பெரியார்களும் தாம் பாடியுள்ள பாடல்களுள் முறையே ‘மாமதிள் தஞ்சை’ ‘இஞ்சி சூழ் தஞ்சை’ என்றே தஞ்சை மாநகரைப் பற்றிச் சிறப்பித்துள்ளனர். எனவே ஆயிரம் ஆண்டுகட்கு முன்னமேயே தஞ்சை மாநகரைச் சூழ்ந்து எடுக்கப்பட்டிருந்த இஞ்சி மிக்க மேன்மை வாய்ந்ததாக இருந்திருக்கிறது என்பது புலனாகின்றது.

இத்தகைய தொன்மையான மதிற் பகுதியினைப் போர் புரிதற்குரிய நுண்மைகள் பொருந்திய அங்கங்களுடன் திண்மையாகச் செய்தவர், தஞ்சையை அரசாண்ட நாயக்க மன்னவருள் முதல்வரான சேவப்ப நாயக்கரென்று வரலாறுகள் கூறுகின்றன. இவர் கி. பி. 1549-இல் விசய நகரப்பேரரசுக்கு உட்பட்ட நிலையில் தஞ்சையைக் கண்காணித்து வந்துள்ளார். பின்னர் கி. பி. 1565-இல் நிகழ்ந்த தலைக்கோட்டைப்போரின் பயனாகத் தலைமையான விசயநகரப் பேரரசு சிதைவுற்றது. அதன் காரணமாக அப் பேரரசுக்கு உட்பட்டிருந்த தஞ்சை, மதுரை ஆகிய அரசுகள் தனித்து



இயங்கத் தொடங்கியுள்ளன. அக்காலத்திற்றான் சேவப்ப நாயக்கர் தஞ்சையைத் தனியரசாக்கி ஆற்றலுடன் ஆளத் தொடங்கியதோடு நகரின் காவலுக்குரிய கோட்டையையும் சீர்திருத்தித் திண்மையாகக் கட்டியுள்ளார். அவ்வாறு கட்டியவற்றுள் இன்றும் சிதைவுறாமல் நிற்கும் பகுதிகளில் ஒன்றாக, சிவகங்கைக் குளத்திற்கு மேற்குப் புறமுள்ள அகழியைச் சார்ந்து தெற்கு வடக்காக அமைக்கப்பட்டுள்ள கோட்டையின் திண்மையான மதிலைப் பற்றியதே இக்கட்டுரையாகும்.

இம்மதிலமைப்பு அடிப்படையிலிருந்து நாற்பதடி உயர அளவில் உள்ளது. சுவர் மேலே உயர்ந்து செல்லுமளவில் முக்காற்பங்கு கருங்கற்களால் கட்டப்பட்டு எஞ்சிய பகுதி செங்கற்களைக் கொண்டு சாந்திட்டுக் கட்டப்பட்டுள்ளது. கருங்கற் பகுதிகளில் திருமால் கோட்டத்திலிருந்த சிற்பங்களோடு கூடிய கற்களும், கல்வெட்டுப் பகுதிகளைக் கொண்ட கற்களும் ஆங்காங்கு இடம் பெற்றுள்ளன. தெற்கு வடக்காகவுள்ள அகழிக்கு, கிழக்கு வரம்பாக அமைக்கப்பட்டுள்ள இம்மதில் அகழியினுள் ஆங்காங்கு நீண்டு வளர்ந்து செல்லும் ஏழு கொத்தளங்களுடன் கூடியதாக வுள்ளது.

தென்கோடியிலிருந்து எண்ணுங்கால், இரண்டாவது கொத்தளத்தை அடுத்துத் தொடரும் மதிலில் வட்டமாகச் செதுக்கப்பட்டுள்ள சிற்ப வேலைப்பாடுடைய கல்லொன்றும், இளமையோடு கூடிய கண்ணன் திருவுருவமைந்த சிற்பக் கல்லொன்றும், தேவைக்கு ஏற்பப் படுக்கை நிலையில் வைத்துக் கட்டப்பட்டுள்ளன. மூன்றாவது தளத்தின் வடபுறம் இரண்டு யாளிகள் போரிடும் பாங்கிலுள்ள கல்லொன்றும், நான்கு ஐந்தாம் தளங்களுக்கிடைப்பட்ட மதிலில்

அனுமன் சிலையுள்ள கல்லொன்றும்; ஐந்தாம் தளத்தின் இடையே நடனக் கண்ணனும், வடபுறமாக, கோயில்களின் தோரண வாயில் நிலைச் சட்டங்களில் அமைக்கப் பெறும் யாளிப் பெண்ணின் சிற்பம் பொருந்திய கற்களும், ஆறும் தளத்தின் தென்புறம், தனது கூந்தற் பின்னலை ஒரு கையாற்றூங்கி ஒரு காலை மாறிட்டு ஊன்றி நிற்கும் அழகிய நிலையில் செதுக்கப்பட்டுள்ள மங்கையின் சிற்பக் கல்லொன்றும் உள்ளன. மற்றும் இவ்வாறும் தளத்தின் தென்புறத்திலேயே அனுமன்-இராவணன் போரிடும் காட்சியுள்ள சிற்பக் கல்லும், கண்ணன், யசோதை உள்ள சிற்பக் கல்லும் காணற்கினியவாய் இடம் பெற்றுள்ளன. ஆறும் ஏழாம் தளத்திற்கு இடைப்பட்ட மதிலில், கோயில்களின் துலாநிலைகளிலோ அன்றி உபான வரிசைகளிலோ சித்திர வரிகளாக வைத்துக் கட்டப்பட்டிருந்த தொடர் சிற்பங்களுள்ள மூன்று கற்கள் ஆங்காங்கு இடம் பெற்றுள்ளன. ஒரு கல்லில் திருமால், யாளி, கோலாட்டமடிக்கும் இரு பெண்ணுருவங்கள் உள்ளன. மற்றொன்றில் மங்கையிருவர் கோலாட்டமடிக்க மற்றொருத்தி நிருத்தம் செய்கிறாள். மூன்றாவதில் அறுவர் வரிசையாக நின்று பல்வேறு வகையில் நடனமாடுகின்றனர். இக்கற்கள் மூன்றும் மதிலில் இருபதடி உயர அளவில் வைத்துக் கட்டப்பட்டுள்ளன. எண்ணூறடி அளவில் ஏழு கொத்தளங்களுடன் நெடிதாக அமைந்துள்ள இம்மதிலின் இடையிடையே இத்தகைய சிற்பக் கற்களும், கல்வெட்டுள்ள கற்களும் மதிலமைப்புக்கேற்ப வைத்துக் கட்டப்பட்டுள்ளன. கல்வெட்டுள்ள கற்கள் மிகுதியாக இருப்பினும் என்னுடைய முயற்சிக்கு எட்டாத உயரத்தில் அவை இடம் பெற்றுள்ளமையால் இயன்றவற்றையே படியெடுக்க முடிந்தது.

இத்தீயில் எஞ்சிய சிற்பம்



கூந்தலழகி



யாளிப்பெண்

இஞ்சியில் எஞ்சிய சிற்பம்



கடனக் கண்ணன்



**கல்வெட்டுள்ள கல்—1**

...... வய்முடையவன் கிடந்தே ......
...... வில்லவன் வளுவன் சென் ......
...... குத்துவான் புகுந்து பொய்த் ......
...... த்தை இயம்புமளவி லெயே ......
...... டடங்தெய் ஒட்டத் திறைவீ ......
...... டதாண்டெய் தெவர்க்கு ......

**கல்—2**

...... வாமலர் வஞ்சி ஒ ......
...... கள் வில்லிகள் வீழ ......
...... சான்ற வெழத்தை ......
...... ல் வெதி ரெ திரமர் ......
...... ன் இறையுங் மூகீற்று ......
...... த்தளவெய் இடை ......

எழுத்துக்கள் பத்து பதினொன்றும் நூற்றாண்டில் எழுந்த சோழர் காலத்தைச் சார்ந்துள்ளன. உடற் பகுதியாகக் கிடைக்கும் மேற்காணும் தொடர்களே வரலாற்றின் சிதறல்களாக வுள்ள செய்திகளைத் தருகின்றனவாதலின், எல்லாவற்றையும் படியெடுத்துச் செய்தியறிந்து பொருத்திவிடின், புதிய வரலாற்றுச் செய்திகள் திண்ணமாகக் கிடைக்குமென நம்புகிறேன்.

இவற்றையெல்லாம் ஒருங்கே கண்டு சிந்திப்போமாயின் இம்மதில் திருமால் கோயிலின் பகுதிகளைக் கொண்டு கட்டப்பட்டுள்ளதென்பது நன்கு புலனாகின்றது. எனவே, சிதைவுற்ற திருமால் கோயில் எங்கிருந்தது ? சிதைவுறக் காரணம் யாது ? என்பன போன்ற வினாக்கள் நமது சிந்தையைத் தூண்டுவதாகின்றன. இதுபற்றி யான் கொண்ட கருத்தினை, வரலாற்றின் இயல்பு பெறுதற்குரியதென்னும் குறிப்புடனேயே எழுதுகிறேன்..

கி. பி. எட்டாம் நூற்றுண்டளவிலேயே தஞ்சை மாநகரில் சிறந்த முறையில் திருமால் கோட்டங்கள் பல இருந்திருக்கின்றன. அவற்றுள், வானளாவி எழுந்து நிற்கும் இராசராசேசுவரத்தின் வடமேற்குப் பகுதி வம்புலாஞ்சோலையெனப் பெயர்பெற அதனிடையே 'மாமணிக்கோயில்' என்னும் கட்டிட அமைப்புடைய பெரியதொரு திருமால் கோட்டமும் அதனைச் சார்ந்து தஞ்சை யாளிநகர் என்ற விண்ணகரமும் இருந்திருக்கின்றன. இப்பகுதி இன்று சீனிவாசபுரம் என்ற பெயருடன் புதிதாக அமைக்கப் பட்டுள்ள குடியிருப்பைச் சார்ந்து வடமேற்காக உள்ளதாம். தஞ்சையின் புறமதில் இவ்வெல்லையெல்லாம் வளர்ந்து வணைந்து அமைந்திருந்த மாண்பினுலேயே "வம்புலாஞ்சோலை மாமதிள் தஞ்சை மாமணிக் கோயில்" என்று திருமங்கை ஆழ்வார் தமது பாடலில் சிறப்பித்துப் பாடுவாராயினர். திருமங்கை மன்னருடைய காலம் கி. பி. எட்டாம் நூற்றுண்டென்று வரலாறு கூறும். எனவே அக்காலத்தில் தஞ்சை மாமணிக்கோயில் வம்புலாஞ்சோலையில் நன்முறையில் இருந்திருக்கின்றது. அடுத்து, முதல் இராசராசன் ஆட்சிக் காலத்திலும் இக்கோயில் இருந்திருக்கிறது என்பதற்குத் தக்க சான்றுகள் கிடைக்கின்றன. அவற்றுள், இராசராசன் "ஸ்ரீ இராஜராஜீஸ்வரம் உடையார் தளிச்சேரிப் பெண்டுகளாகச் சோழமண்டலத்துத் தளிச்சேரிகளில் நின்றுங் கொண்டுவந்து ஏற்றின" தளிச்சேரிப் பெண்டுகளைப்பற்றித் தெளிவாக எடுத்துக் கூறும் கல்வெட்டுள், தளிச்சேரி வடசிறகு "இருபத்தைந்தாம் வீடு தஞ்சாவூர் தஞ்சை மாமணிக் கோயில் நக்கன் மாதேவிக்கு பங்கு ஒன்று" என்றும், "அறுபத்து மூன்றும் வீடு தஞ்சாவூர் தஞ்சை மாமணிக் கோயில் நக்கன் வழுவாநிலைக்கு பங்கு ஒன்று" என்றும், "தொண்ணூற்று மூன்றும் வீடு



தஞ்சாவூர் தஞ்சை மாமணிக்கோயில் நக்கன் திருவழிக்கு பங்கு ஒன்று" என்றும் குறிக்கப்பட்டுள்ளது. இதனால், தஞ்சை மாமணிக்கோயிலென்னும் திருமால் கோயிலுக்குரிய தளிச்சேரிப் பெண்டிருள் மூவர் இராசராசேசுவரத்திற் குரியராகக் குடியேற்றப் பெற்றுள்ளமை தெளிவாம். எனவே, பதினோராம் நூற்றுண்டின் பிற்பகுதிவரை தஞ்சை மாமணிக்கோயில் செம்மையாக இருந்தமை புலனாகின்றது.

இவ்வாறு கி. பி. எட்டாம் நூற்றுண்டிற்கு முன்னரே தோன்றிப் பதினோராம் நூற்றுண்டின் முற்பகுதியிலும் தஞ்சையிற் றிகழ்ந்த திருமால் கோயில், இன்று மருங்கறச் சிதைந்து அழிந்திருக்கக் காரணம் யாதென்பதை அறியவேண்டியது இன்றியமையாததாகின்றது.

கோயில் இருந்ததாகக் கூறப்பெறும் இடத்தில், கோயிலின் அங்கங்களைக் காணுவதற் கியலவில்லையாயினும், கோயிலுக்கு உரியதாக இருந்த 'சிங்கப் பெருமாள் குளம்' என்னும் பெயருடன் இன்றும் நிலைத்து நிற்கும் பெரிய அளவுடைய திருக்குளமும், அதைச் சார்ந்து வடவாற்றின் தென்கரை வரையில் பரவி நிற்கும் வம்புலாஞ்சோலை என்னும் சோலையுடன் கூடிய நீரரிடு துறையும் இன்றும் இருக்கின்றன. மற்றும், திருமால் கோயிலுக்குரிய நிலவெல்லைகளைக் குறிக்கும் திருவாழிக்கல்லொன்றும், இப்பகுதியினூடே களிமேடு என்னும் சிற்றூருக்குச் செல்லும் சாலையின் தென்புறம் நிற்கின்றது. இச் சின்னங்களைக் கொண்டே இப்பகுதியில் திருமால்கோயில்கள் இருந்திருக்கின்றன என்பதை உறுதி செய்ய இயலுகின்றது. அவை தஞ்சை மாமணிக்கோயிலுடன் விளங்கிய தஞ்சை யாளிநகர் கோயிலுமாகும்.

இக் கோயில்கள் பன்னிரண்டாம் நூற்றுண்டின் தொடக்கம் வரையில் எத்தகைய பழுதும் பெற்றில

தென்றே கருதவேண்டியுளது. செம்மையாகவும் சிறப்பாகவும் இருந்த கோயில்கள் தம் நிலையில் மாற்ற மடைந்ததற்குரிய நிகழ்ச்சி இயற்கையாலோ அன்றி நாட்டு மக்களாலோ நிகழ்ந்திருக்குமென்பதற் கில்லை. இத்தகைய அரிய நிகழ்ச்சிகள் அரசியற்றுணை யாலோ, ஆணையாலோ வன்றி நிகழ்வதற்கில்லை. எனவே, தமிழக வரலாற்றுள் இத்தகைய நிலை ஏற் பட்ட காலத்தை நோக்குவோமாயின் பன்னிரண்டாம் நூற்றுண்டின் முற்பகுதியே நமது குறிப்புக்கு இலக் காகின்றது. கி. பி. 1135 முதல் 1150 வரை சோழ நாட்டை மிக்க திறமையுடன் பெருக்கி ஆண்டவன் இரண்டாம் குலோத்துங்கன் என்று வரலாறுகள் கூறு கின்றன. தில்லைத் திருப்பணியைச் செவ்விதின் முடிக்கக் கருதிய இம்மன்னன், சிற்றம்பலத்துக்கு முற்றம் போதா திருந்தமையால், அதனைப் பெருக்க வேண்டி, கோயிலினுள் கி. பி. எட்டாம் நூற் ருண்டில் நந்திவர்மப் பல்லவனுல் நிறுவப்புட்டு நிலைத் திருந்த திருமால் மூர்த்தத்தைக் கடலில் இட்டுக் கோயிலையும் அகற்றினுனென்று வரலாறு கண்டு ளது. இந்நிகழ்ச்சியை நுண்மையாகவும் தெளிவாக வும் குலோத்துங்க சோழனுலாவினுள் பாடவிரும்பிய ஒட்டக்கூத்தர், "தில்லைத் திருமன்றின் முன்றிற் சிறு தெய்வத் தொல்லைக் குறும்பு தொலைத்தெடுத்து" என்று கூறியுள்ளார். சோழமன்னர்கட்குரிய தலை சிறந்த பதியாக விளங்கியதோடு, அரசர்களுக்குரிய மாளிகைகளும் கொட்டகாரங்களும் இருந்ததுமாகிய தில்லையிலேயே, வைணவம் சமயத்துறையிலோ அன் றிப் பிறவாருே துணிந்த செயலைத் தொடர்ந்து செய் துளது என்பதைத் 'தொல்லைக் குறும்பு' என்னும் சொற்ருெடர் சுட்டுவதும், பன்னிரண்டாம் நூற்ருண் டில் இரண்டாம் குலோத்துங்கனுடைய ஆட்சியில் வைணவம் அரசியற்றுறையில் ஓரளவு ஆதரவு பெற



வில்லை என்பதை, அம்மன்னன்மீது, அவன் காலத்தி லேயே வாழ்ந்த கூத்தரால் பாடப்பட்டுள்ள உலா வினுள் 'சிறு தெய்வம்' என்று திருமால் கூறப்பட் டிருப்பதும் சிந்தனைக்கு இடனுகின்றன. இத்தகைய நிகழ்ச்சி, கி. பி. ஏழாம் நூற்ருண்டின் முற்பகுதியில் மிக்க மேம்பாடுடன் தமிழகத்தில் விளங்கிய சமண சமயம் அக்காலத்திலேயே அரசியல் வழியில் தாழ் வடைந்து, திருப்பதிகங்களுள்ளும் இழிக்கப்படும் நிலையை அடைந்திருப்பது நோக்கத் தக்கது.

எனவே, குலோத்துங்கனுல் தில்லையில் சிறு தெய் வத் தொல்லைக் குறும்பு தொலைக்கப்பட்ட நிகழ்ச்சி சோழ நாட்டில் பிறவிடங்களில் நிகழாதிருந்திருக்கு மென்று கூறுவதற்கு ஏதுவில்லை. இன்றியமையாத இடங்களில் இந்நிகழ்ச்சியை அரசியல் சார்பில் ஆங் காங்கிருந்த மண்டலத் தலைவர்கள் காலத்தை நெகிழ விடாமல் ஆற்றியிருக்கக் கூடும். இராசராசேசுவரத் தைச் சார்ந்து சிறந்திருந்த தஞ்சை மாமணிக்கோயி லும், தஞ்சை யாளிநகர் கோயிலும் அத்தகைய செய லுக்கு உள்ளாகி, அதிலிருந்த திருமேனிகள் கடலிலிட வாய்ப்பு இன்மையால், அருகிலோடும் வெண்ணியாற் றில் (வெண்ணுறு) இடப்பட்டன போலும் !

இக்கருத்துக்கு ஒத்த பாங்கில், 'தஞ்சைக் கோட் டையினுள் இருந்த திருமால் கோயில்கள் தஞ்சையை ஆண்ட மன்னனொருவனுல் இடம் பெயர்த்தெடுக்கப் பட்டு வெண்ணியாற்றின்கரையில் அமைக்கப்பட்டன' என்னும் செவிவழிச் செய்தியும் ஒருவாறு சான்று பகருகின்றது.

மற்றும், தஞ்சைப் புறநகரின் வடகோடியாக வுள்ள வெண்ணியாற்றின் கரையில் இதுபோது கோயில் கொண்டுள்ள திருமேனிகளை நகரின் உட்பகு தியில் ஓடும் வடவாற்றின் தென்கரையிலுள்ள, பிரம குட்டம் என்று கல்வெட்டுகள் கூறுகின்ற இராசா

கோரிப் படித்துறைக் குளத்தின் கரையில் தமக்குரிய தாகவுள்ள மண்டபத்தில் எழுந்தருளச் செய்து நன்னீர் விழா நிகழ்த்தப் பெறுவது, ஆண்டுக்கொரு நாள் இன்றும் நிகழ்ந்து வருகின்றது. இந்நிகழ்ச்சி, மாமணிக் கோயிலுடன் கூடிய திருமால் கோட்டங்களின் பழைய இடத்தொடர்பைக் காட்டுவதாகவே அமைந்துள்ளது.

எனவே, கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தஞ்சை மாமணிக் கோயில் தஞ்சை யாளிநகர் ஆகியவற்றில் இருந்த திருமால் திருமேனிகள் வெண்ணியாற்றில் இடம்பெற்ற பின்னர், காப்பற்ற நிலையில் சில நூற்றாண்டுகள் செல்லக் கோயில்களும் கட்டழிந்து சிதைந்திருக்க வேண்டும். அவ்வாறு சிதைந்த கோயிலின் எஞ்சிய பகுதிகளைக் கொண்டே சேவப்ப நாயக்கர் காலத்தில் கட்டப்பட்ட திண்மையான கோட்டையும் மதிலும் உருவாகி இருக்கின்றன. இப்பகுதிக்கு மிக அண்மையில் கோயில்கள் இருந்ததாகத் தெரிவதால் கட்டழிந்த கோயில்களின் கற்களைக் கொண்டு சிற்பியர் கோட்டைச் சுவர்களை அமைத்துவிட்டனர். எனவே, தஞ்சை மாமணிக் கோயில், தஞ்சை யாளிநகர் ஆகியவற்றுள் அங்கங்களாகத் திகழ்ந்திருந்த வைணவச் சார்புடைய சிற்பக் கற்கள் இஞ்சியில் இடம் பெற்றுள்ளன.

இன்று வெண்ணியாற்றங்கரையில் கோயில் கொண்டுள்ள நீலமேகப் பெருமாள், மணிகுன்றப் பெருமாள், நரசிங்கப் பெருமாள் ஆகிய மூன்று திருமேனிகளுள் நீலமேகப் பெருமாளே தஞ்சை மாமணிக் கோயிலில் விளங்கிய மூலவர் என்று வைணவச் சார்புடைய பெருமக்கள் கூறுகின்றனர். இக்கோயில்கள் நாயக்க மன்னர்களுடைய கட்டிடக் கலையமைப்புடன் விளங்குவதால், பதினாறும் நூற்றாண்டில் திகழ்ந்த நாயக்க



மன்னரொருவரால் இவை அமைக்கப்பட்டுள்ளன என்பது புலனாகின்றது.

இக்கோயில்களில் ஏதாவது பழமைச் சுவடுகள் உள்ளனவா வென்று யான் ஆராய்ந்தபோது, நீலமேகப் பெருமாள்கோயிற் கருவறையின் தென்புறமுள்ள அடிப்படையில் இடம் பெற்றுள்ள கல்லொன்றில் எழுத்துக்கள் தேய்ந்த நிலையில் இருப்பதைக் கண்டேன்.

### கல்வெட்டு

வரி 1. ஸ்வஸ்திஸ்ரீ மதுரையும் ஈழமும் கொண்ட குலோத்
2. துங்க சொழ தெவற்கு யாண்டு ஒம்ப...செயசிங்ககு
3 லகால வளநாட்டு வடசிறுவாயினல் ... பாண...
4 குடியிலாண்டானிடையது கைக் ... டையார் ... தெங்கெ
5 யார் எழுமுடிச் சொழ எல்லாமுடைய நாயனை...

இக்கல்வெட்டினைக் கொண்டு எத்தகைய செய்தியும் தஞ்சை மாமணிக் கோயிலைப் பற்றி யறிதற்கு இல்லையாயினும் கல்வெட்டு குலோத்துங்க சோழனுடைய காலத்தில் உண்டானது என்பது தெளிவாம்.

இக் கட்டுரையினுள், தஞ்சை நகரின் வடமேற்குப் பகுதியில் தஞ்சை மாமணிக்கோயிலெனும் திருமால் கோயிலும் அதைச் சார்ந்தே தஞ்சை யாளிநகர் என்னும் திருமால் கோயிலும் இருந்திருக்கின்றன என்பதும், கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் அக்கோயிலி லிருந்த திருமேனிகள் மட்டும் வெண்ணியாற்றில் அகற்றப்பட்டிருக்க வேண்டுமென்பதும், பின்னர் 16-ஆம் நூற்றாண்டில் தஞ்சையை யாண்ட நாயக்க மன்னரொருவரால் கோயில்களமைக்கப்பட்டு அதில் திருமேனிகள் அமைக்கப்பட்டுள்ளன வென்பதும், இஞ்சியில் இடம் பெற்ற எஞ்சிய சிற்பங்கள் சிதைவடைந்த தஞ்சை மாமணிக்கோயிலுடன் கூடிய திருமால் கோட்டங்களின் பகுதிகளே என்பதும் புலனாகும்.

# 4. இராசராசேசுவரம் — உள்ளூர்ப்பண்டாரம்

முதல் இராசராசனுடைய சிறப்பியல்புக்கோர் சின்னமாகத் தஞ்சையில் எழுந்து நிற்கும் இராசராசேச்சுவரத்தைப் பற்றிய செய்திகள் தமிழக வரலாறுகளிலும், பிற்காலச் சோழர்களின் வரலாறுகளிலும் வெளிவந்துள்ளன. அவற்றையே புதிய தொடர்களில் அழகுபெற யாத்த செய்திகளும் பலவாகும். ஆயினும், கோயிலின் அமைப்பளவில் இதுகாறும் வெளிவந்துள்ள செய்திகள் மேலும் தெளிவுபெற வேண்டிய நிலையில் உள்ளனவென்றே கொள்ள வேண்டியுளது.

இராசராசேசுவரம் கி. பி. 1009இல் கடவுண்மங்கலம் பெற்றதாக ஆராய்ச்சியாளர் உறுதி செய்துள்ளனர். அங்ஙனமாயின், அக்காலை கோயிற்றிருப்பணி எந்த அளவில் முடிவு பெற்றிருந்த தென்பதை ஆராய்தல் அமைவுடையதாகும். இதற்குச் சான்றாக இதுவரையில் எடுத்துக் காட்டப் பட்டுள்ள கல்வெட்டுச் சான்றுகள் ஸ்ரீவிமானம், திருவாயில்கள், திருச்சுற்றுமாளிகை, சண்டேசர் கோயில் ஆகியவற்றைப் பற்றிய செய்திகளைக் கூறுவனவாக அமைந்துள்ளனவே தவிர, ஸ்ரீவிமானத்தின் அடிப்படையாகவும் ஒரே பாங்குள்ள சிற்ப வரிகளுடையதாகவும் கல்வெட்டுகள் வெட்டுவதற்கென்றே அமைக்கப்பட்ட நெடிய முகப்புடையதாகவும் உள்ள உயர்ந்த தளத்திலுள்ளதும் ஸ்ரீவிமானத்தின் முகப்பாகத் தொடர்ந்துள்ளதுமாகிய மண்டபங்களைப் பற்றிய செய்தியினைக் கூறுவனவாக இல்லை. எனவே, இப்பகுதியின் அமைப்பினையும் சிற்பத் திறத்தினையும் நேரிற் காண்போமாயின் சில உண்மைகள் புலனும்.

நிலப்பரப்புக்கு மேல் உயர்ந்துள்ள சித்திர வரிசைகளோடு கூடிய கற்றளத்திலே ஸ்ரீ விமானமும் அதனைச் சார்ந்த மண்டபங்களும் எழுப்பப்பட்டுள்ளன வென்று முன்னர்க் கூறினேம். ஸ்ரீவிமானத்தினைத் தாங்கும் காலாக அமைக்கப்பட்டுள்ள திருச்சுற்றுக் கல்லூரியுடன் கூடிய திண்மையான சுவர்ப் பகுதியின் மேலேயே விமானம் எழுப்பப்பட்டுள்ளது. இக்கல்லூரியின் அமைப்பினை உலகில் உயர்ந்துள்ள பொறியியற் கலை வல்லுநர் கண்டு வியக்கின்றனர். இச்சுற்றுக் கல்லூரியின் சுவர்ப் பகுதிகளிலேயே சோழர்கால ஓவியங்கள் உள்ளன. கருவறைக்கு மேலாகக் கீழேயுள்ளதைப் போன்று ஒத்த அளவுடையதாகத் திருமாளிகைச் சுற்றிடம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மேனிலை உட்கூட்டின் அமைப்பு தமிழகக் கட்டிடக் கலைக்கோர் சிகரமாக நின்று கண்டார் வியக்கும் வண்ணம் விமானப் பளுவை இலகுவாகத் தாங்கி நிற்கிறது. இங்குள்ள சுவர்ப்பகுதியிலேயே தொடர்ச்சியாகச் சிவபெருமானின் தாண்டவக் கோலங்கள் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு சிறந்த முறையில் எழுந்துள்ள ஸ்ரீ விமானமும் அதனோடு சார்ந்த முக மண்டபமும் தாபந மண்டபமும் ஆகிய பகுதிகள் அமைந்துள்ளன.

பெரும்படியாக அமைக்கப்பெறும் கற்பணிகளில் கட்டிட அமைப்பு முடிந்த பின்னர் முதலில் எழுப்பும்

பொழுதே இடம் வகுக்கப்பட்டுள்ள புடைப்புக் கற்களின் தரத்திற்கேற்ப இயன்ற முறையில் சிற்பங்களை உருவாக்குதல் சிற்பத்தொழிலின் ஒரு பகுதியாகும். அம்முறையில் ஆசிடப்பட்ட கற்களுள் சில புடைப்பாகவே நிற்பதும், அவற்றுள் ஒருசில உருவாக்கப்பட்டிருப்பதும் தாபந மண்டபத்தின் வெளிப்புறச் சுவர்களில் காணப்படுகின்றன. எனவே, தாபந மண்டபம் கட்டிட அளவில் முடிந்துள்ளதே தவிர, அதன் வெளிப்புறத்தே அழகு செய்யக் கருதியிட்ட பணி முடிவடைய வில்லை.

இத் தாபந மண்டபத்தை அடுத்துத் தொடர்ந்ததாக உள்ளபகுதியேநமது ஆய்வுக்கு இலக்கான நிருத்த வாத்திய மண்டபமாகும். இப்பகுதியின் தலைவாயிலும் துவாரபாலகருடன் தொடர்ந்துள்ள தெய்வக் கோட்டங்களோடு கூடிய பக்கமும், அடிப்படையும் பழமையாக உளவே தவிர மற்றைய உட்பகுதிகள் இராசராசன் காலத்தில் கட்டப்பட்டனவாக இல்லை. சுவரடைப்பு மேற்கூரை ஆகியவைகளில்லாத நிலையில் ஒரு பெரிய கூடமாகவே இருந்திருக்கின்றன. மற்றும் விமானத்தைச் சூழ்ந்ததாகத் தாபந மண்டபம் அளவில் தொடர்ந்தோடிவரும் கபோதவரிசை என்னும் பெயர்பெறும் அழகிய விளிம்புப் பகுதி மேலும் தொடராது குறையாக நிற்பதும் இக்கருத்தை வலியுறுத்துவதாகும்.

ஆயினும், இப்பகுதியை மண்டபமாக்குதற்குரிய முயற்சி கோயில் கட்டிய காலத்திலேயே இருந்திருக்கிற தென்பதை இராசராசேச்சுவரத்திற்குரியதாகும் பட்டப் போதிகைகளோடு கூடிய சதுரப்பட்டமாகத் திகழும் தூண்களுள் ஒருசில மண்டபத்தின் இருபுறங்களிலேயும் இடம் பெற்றுள்ளதைக் கொண்டு அறியலாகும். ஆயின், இம்மண்டபம் எப்பொழுது கட்டப்பட்ட தென்பதைக் கட்டிட அமைப்பிலே உள்ள வேறு



பாட்டினைக் கொண்டு ஆராய்தல் எளிதாம். இம்மண்டபத்தினைத் தாங்கும் தூண்கள் அணிவெட்டிக்கால்களோடு கூடிய தடுப்புப் பட்டைகளாக இருப்பதுடன் போதிகைகள் மலர்ப்போதிகைகளாக விளங்குகின்றன. இத்தகைய சிற்ப வேலைப்பாடுகள் நாயக்க மன்னரின் காலத்தில் திகழ்ந்த வகைகளுள் ஒன்றும். எனவே இத்திருப்பணி தஞ்சை நாயக்க மன்னரொருவரின் காலத்தில் நிறைவு பெற்றிருக்க வேண்டுமென்பது நன்கு புலனாகிறது.

இம் மண்டபத்தின் தென்மேற்கு மூலையில் விமானத்தின் மேல்தளத்திற்குச் செல்லும் வாயிலமைப்புளது. இவ் வாயிலமைப்பினைச் சார்ந்து மண்டபத்தினுள் இருபுறமும் மஞ்சமாக உயர்ந்துள்ள தளத்தில் நிற்கும் தூண்களுள் ஒன்றாக வலப்புறமுள்ள அழகிய சிற்ப வேலைப்பாட்டுடன் கூடிய தூண் சிந்தனைக்கு விருந்தானதாகும். சிங்கம் சுமந்த பாங்கில் திரணைகளுடன் விளங்கும் இத்தூண், கி. பி. ஏழாம் நூற்றாண்டில் தமிழகத்தில் புகழ்பெற்ற முதல் நரசிம்மவர்ம பல்லவனின் காலத்தில் உண்டானதாகும். மண்டபத் திருப்பணியை முடிக்கக் கருதிய நாயக்க மன்னர், தஞ்சையிலோ அன்றிச் சார்ந்த பகுதிகளிலோ பழுதடைந்திருந்த பல்லவர் காலக் கோயிலின் எஞ்சிய பகுதிகளைக் கொண்டும் பிறவாறும் கட்டியுள்ளாரென்பதை, இத்தூண் இடம் பெற்றுள்ளதால் அறிய முடிகிறது. இம்மண்டபம் கட்டப்பெற்ற காலத்திலேயே, நந்தி மண்டபமும், அம்மன் கோயிலுக்கு அணியாகவுள்ள மண்டபமும், சுதை வேலைப்பாடுகளும் செய்யப்பட்டுக் குடமுழுக்கு விழாவும் நிகழ்த்தப்பட் டிருக்கிறதென்பதை ஊகித்தறிய முடிகிறது.

எனவே, இராசராசேச்சுவரம் கி. பி. 1009-இல் கடவுண் மங்கலம் பெற்றபோது, ஸ்ரீவிமானத்தைச் சார்ந்துள்ள நிருத்த வாத்தியமண்டபம் உருப்பெறாமலேயே

இருந்திருக்கிறது எனலாம். இவ்வாறு முதல் இராச ராசனுடைய கோயில் திருப்பணி ஒருவாறு முடிக்கப் பெற்றுள்ள தென்பதற்கு மற்றொரு சான்று முண்டு. விமானத்தின் மேல்தளத்திலுள்ள திருமாளிகைச் சுற்றில் உயர்ந்த வேலைப்பாடுடன் விளங்கும் நடன வகைகளைச் சிறப்பிக்கும் சிற்பங்கள் நூற்றெட்டி னுக்கு இடம் வகுக்கப் பட்டிருந்தும், எண்பத்தாறு முடிவுபெற எஞ்சியவை சிற்பத்திறன் பெருது புடைப் புக் கற்களாகவே காட்சி தருகின்றன. இதுபற்றி ஆராய்ச்சியாளர் தெளிந்த முடிபுக்கு வருதல் வேண் டியே யான் நுண்ணிதின் கண்ட இவற்றை எடுத் துரைக்கலானேன்.

**உள்ளூர்ப் பண்டாரம்:—**

ஓர் அரசியலுக்கு உரிய அங்கங்களுள், ஆட் சிக்கு அடிப்படையான உணவுப் பொருள்களைச் சேமித்து வைக்கப்பெறும் பண்டாரமும் ஒன்ருகும். பிற்காலச் சோழர்கள் தங்களாட்சியில் பஞ்சமோ படையெடுப்போ நிகழும் காலங்களில் தம் நாட்டில் உணவுத்தட்டு ஏற்படாவண்ணம் இருக்கவும், அரசிய லுக்குட்பட்ட நிலவருமானங்களாகும் இறை, கடமை, அந்தராயம் ஆகிய வரி வகைகளிற் சேரும் நெல், வரகு முதலிய தானிய வகைகளைச் சேமித்து வைப்பதற்கா கவும், மிகப் பெரிய களஞ்சியங்களைத் தலைநகராகிய தஞ்சையில் ஏற்படுத்தி இருந்திருக்கின்றனர். மற்றும், முதல் இராசராசன் தான் எழுப்பிய இராசராசேசுவரத் திற்கு நிபந்தப்படுத்திய நிலவருவாய்களாக ஆண்டு தோறும் வந்த நெல்லை அதற்கெனத் தனித்திருந்த களஞ்சியத்தில் (பண்டாரத்தில்) சேமிக்கச் செய்து தேவைகட் கேற்பச் செலவு செய்யவும் ஏற்பாடு செய் திருந்ததாகக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. இக்



களஞ்சியம் உள்ளூர்ப் பண்டாரங்களுள் ஒன்ருகவே இருந்திருக்கிறது.

இவ்வாறு, உள்ளூர்ப் பண்டாரம் முதல் இராச ராசன் காலத்திலிருந்து விக்கிரம சோழனுடைய ஆட் சிக் காலம் வரையிலும் தஞ்சையில் இருந்ததாகத்தெரி கிறது.

இக் கருத்தினை, தஞ்சை இராசராசேச்சுவரத் தில் திருப்பதியம் விண்ணப்பம் செய்ய முதல் இராசராசனுல் நியமிக்கப் பெற்ற பிடாரர்கள் (ஓதுவார்கள்) நாற்பத்தெண்மரும் உடுக்கை, கொட்டி மத்தளம் வாசிப்பார் இருவரும் ஆக ஐம்பதின்மருக்கு உரிய நிபந்தமாக, அளவு செய்யப்பட்ட நெல்லை, இராச கேசரி என்னும் பெயருடன் அரசியலில் புழக்கத்தி லிருந்த மரக்காலோடு ஒத்த அளவுடையதும், தஞ்சைப் பெரிய கோயிலில் இருந்ததுமான ஆடவல்லான் என் னும் மரக்காலால் உடையார் உள்ளூர்ப் பண்டாரத்தே பெறுமாறு ஆணையிடப்பட்டிருப்பதும் (S. I. I. Vol. II, P. III, No 65)

முதல் இராசேந்திரன் தஞ்சை இராசராசேசுவரத் தில் ஆசார்யபோகம் பெற்றிருந்த சர்வசிவபண்டித ரும் அவருடைய மாணுக்கரும் ஆண்டுதோறும் கோயி லில் உள்ள ஆடவல்லான் என்னும் மரக்காலால் உள் ளூர்ப் பண்டாரத்தே நிறைச்சலனவாக இரண்டாயிரம் கலம் நெல் பெறுவதாக நிபந்தம் செய்திருப்பதும், (S. I.I. Vol. II, Part I No. 20.)

விக்கிரமசோழன், தஞ்சை இராசராசேச்சுவரத் துக்கு உரியதாக வெளியூர்களில் உள்ள நிலங்களிலி ருந்து வரும் நெல்லை விகிதப்படி அளந்து பெற்று, தேவர் பண்டாரத்திலிடும் காணிக்காரளவுத் தொழிலை வாரிசு முறையுள்ளவருக்கு உரிமை செய்துள்ளதும், (S. I. I. Vol. II, Part III, No. 68.) ஆகிய சாசனப் பகுதிகளைக்கொண்டு உறுதி செய்ய இயலுகின்றது.

இவ்வாறு தஞ்சையில் பெரிய அளவில் அமைககப்பட்டிருந்த தானியக் களஞ்சியங்கள், அதாவது உள்ளூர்ப் பண்டாரங்கள் நகரில் எங்கு அமைக்கப்பட்டிருந்தன என்பதை ஆராய்ந்தறிய வேண்டுமென்ற எண்ணம் எனக்கு நீண்ட நாட்களாகவே இருந்து வந்தது.

நெல் முதலிய தானியங்களைச் சேமித்து வைப்பதற்குரியதாக அமைக்கப்படும் களஞ்சியங்கள் நகரின் நடுவே பாதுகாவல் மிகுந்த இடத்தில் உறுதியான அமைப்புடைய கட்டிடங்களில் தானியங்கள் தட்பவெப்ப நிலையானும் பூச்சிகளினாலும் கெடுதலடையாத முறையில் இருக்கவேண்டுமென்பது பொதுப்படையான கருத்தாகும். இத்தகைய அமைப்புக்களைப் பெரும்பாலும் பெற்றுள்ளதும், தஞ்சைக் கோட்டையினுள் நடுநாயகமாக அமைந்த பகுதியிலுள்ள கலியாண சுந்தரம் உயர்நிலைப்பள்ளி விளையாட்டுத் திடலின் மேலைப்புறமுள்ளதும், தூங்கானை மாடம்போன்ற அமைப்பில் மேல்நிலை துலங்க ஏழு கலசங்களுடன் விளங்குவதும், நூறடி நீளமும், அறுபதடி உயரமும், நாற்பதடி அகலமும் கொண்டு பெருமிதத் தோற்றமுடன் நிற்கின்றதுமான பழைய செங்கற் கட்டிடக் களஞ்சியத்தினைப் பலர் சுட்டி வந்தனர்.

இக் களஞ்சியம் பார்வைக்குப் பழமையானதாக, மிக நுட்பமான அமைப்பில் இருப்பினும், தஞ்சை நாயக்கர் காலக் கட்டிடக் கலையின் சின்னங்கள் சிறந்திருப்பதனால், நாயக்கர் காலத்தில் கட்டப்பட்ட நெற் களஞ்சியமாகுமென்பதை முடிவு செய்ய வேண்டியதாயிற்று. ஆயின், சோழர் காலத்தில் தஞ்சை நகரில் திகழ்ந்த பண்டாரங்கள் எங்கிருந்தனவெனும் ஆர்வம் விட்டபாடில்லை. இந்நிலையில் கி. பி. 1957-இல் மேற்குறித்த நாயக்கர் காலக் களஞ்சியத்தின் முன்புறமாகப் படர்ந்துள்ள திடலில் மேடிட்டிருந்த பகுதி



யினைச் சமன் செய்ய முற்பட்டனர். அப்பொழுது புதைந்த நிலையில் செப்பம் செய்யப்பட்ட பெரிய அளவுடைய உருக்குப் பாறைகளால் தளமிடப்பட்ட பழைய கட்டிடங்களின் அடிப்படைகள் புலப்பட்டன. அடிப்படைப் பகுதி மிகுதியாகச் சிதைவடையாமல் தளத்துடன் செம்மையாகவே புலப்பட்டன. அவை முழு வடிவில் நிற்கும் நாயக்கர் காலக் களஞ்சியத்தின் அடிப்படைச் சுற்றளவைக் காட்டிலும் சற்றுப் பெரிய அளவில் இரண்டு பகுதிகளாக இருந்தன. கற்களின் இடுக்குகளில் பற்றாசாகவும் தளத்தின் அடிப்படையாகவும் சுண்ணக் கலவை இடப்பட்டிருந்தது. தளத்திலுள்ள சுண்ணக் கலவைப் படலத்தின்மேல் தனிச் சுண்ணப் படலமொன்று அரையங்குல தடிப்புடன் தளம் முழுவதும் இடப்பட்டிருந்தது. அதன்மேல் சராசரி ஓர் அங்குலத் தடிப்புள்ளதாகக் கருமையான நிறத்துடன் கூடிய ஒருவகை அரக்கினை வார்த்துச் சமன் செய்யப் பட்டிருந்தது. இக்கலவை அரக்கினைக் கொண்டும், கட்டிட அடிப்படையின் பழமையினைக் கொண்டும் இவை பிற்காலச் சோழர் ஆட்சியில் விளங்கிய உள்ளூர்ப் பண்டாரங்களின் அடிப்படைகளாகவே இருக்கவேண்டுமென்று கருதலானேன்.

காலத்தால் நிலைகுலைந்து மண்ணுள் மறைந்து கிடந்த இக் களஞ்சியங்களின் தளப்பரப்பாக அமைக்கப்பட்டுள்ள அரக்குக் கலவையில், கரி, சுண்ணாம்பு ஆகிய பொருள்களுடன் மெழுகு போன்ற இன்னும் பல பொருள்களைக் கலந்து உருக்கி வார்க்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. மேலே நிறைத்திருக்கும் நெல் போன்ற தானியங்கள் ஈரங்கொள்ளாமலும், செல்லரிக்காமலும், உலுக்காமலும் இருப்பதற்குரிய தடுப்பு முறைகளுள் சிறந்ததொன்றாகவே இவ்வரக்குப்படலம் அடியில் இடப்பட்டுள்ளது. அரக்கின் உண்மையான கலவைப் பொருள்கள் புலனாகவில்லை. அதனை விஞ்

ஞான முறையில் ஆராய்ந்து கண்டுபிடிக்கின், இன்று அரசியலார் தானியச் சேமிப்பு அறைகளில் தானியப் பாதுகாப்புக்காக நச்சு மருந்துகளையும், நச்சுப் புகையினையும் பயன்படுத்தும் நிலையினின்றும் உணவுப் பொருள்களை நச்சுத் தன்மையுறாமல் தடுக்கலாம்.

மற்றும், அடிப்படையளவில் காணக்கிடைத்த இப்பழைய பண்டாரங்களோடு நின்ற எஞ்சியவைகளும் இப்பகுதியிலேயே இருந்திருக்கவேண்டும். இப்பகுதியில் ஆங்காங்கு அகழ்ந்தபோது அடியில் சிதைந்த கட்டிடங்கள் புலப்படுவதாகத் தக்கார் கூற வறிந்தேன். அன்றியும் இப்பகுதியைச் சுற்றிலும் திண்மையான மதிலமைப்பு இருந்திருக்க வேண்டுமென்பதை ஒருவாறு அறிய முடிகின்றது.

எனவே, உள்ளூர்ப் பண்டாரங்கள் என்று கல்வெட்டுகளில் கூறப்பட்டுள்ள தானிய சேமிப்புக் களஞ்சியங்கள், தஞ்சையில் இன்றுள்ள கலியாணசுந்தரம் உயர்நிலைப் பள்ளிக்குரிய தான விளையாடுமிடத்தில், அழிந்து மண்ணடியில் கிடந்தவைகளும் எஞ்சியதாகப் புதைந்து கிடைப்பவைகளுமேயாகுமென்று கருத இடனுளது. இவை பிற்காலச் சோழரின் அரசியலுக்குரியதாகவும், இராசராசேச்சுரத்திற் குரியதாகவும், பஞ்சகாலச் சேமிப்புக்குரியதாகவும், தனித்தனியே இருந்திருக்கின்றன வென்பதைச் சிதைந்து கிடந்த பண்டாரங்கள் பலவாக இருந்ததைக்கொண்டு துணியலாகும்.

மற்றும், பழமையுடன் முழு வடிவில் நிற்பதாயினும் இன்றைய தேவைகட்கேற்ப நாளடைவில் உருக்குலைந்து வரும் நாயக்கர் காலக் கட்டிடக் களஞ்சியம், சிதைவுபட்டிருந்த சோழர் காலப் பண்டாரங்களைப் பின்பற்றிய கட்டிட அமைப்பில் எழுப்பப்பட்டிருக்கலாம். இக் களஞ்சியத்தின் அமைப்பு யாவரும் கண்டு வியக்கும் வண்ணமாக உளது. உயர்ந்து அடைவாக நிற்கும் சுவரணைப்பின் இடையே பரந்த இடமாகவுள்ள இக் களஞ்சியத்திற்கு, மேல் நிலைகளிலிருந்து சந்துச் சாளரங்கள் அமைத்துக் காற்றோட்டமும் குளிர்ச்சியும் அளவாக இருக்கும்படி அமைத்துள்ள கட்டிட நுட்பத்தினையும், நெல்லை மேன்மாடத்திற்குக் கொண்டு சென்று அங்கு அமைக்கப்பட்டுள்ள வாயில்களின் வழியே உள்ளே கொட்டி நிறைப்பதற்குரிய வழியமைப்பினையும் பாங்கினையும் கட்டிடக்கலை வல்லுநரும், பொறியியற்கலை வல்லுநரும், விஞ்ஞானத் துறையினரும் கண்டு ஆராய்தற்குரித்தாம். பண்டைக் காலமக்கள் தானியங்களைப் பாதுகாக்கமேற்கொண்ட சிறந்த முறையினை நாம் பின்பற்ற இக் களஞ்சியம் ஓர் எடுத்துக்காட்டாகும்.

# 5. மாமதில் தஞ்சை

மட்டிலா வளமுடன் திகழ்ந்ததாகப் பட்டினப் பாலை கூறும் காவிரிப்பூம்பட்டினமும், 'ஊரெனப்படுவது உறையூர்' என்று இலக்கண மேற்கோளிடத்தும் உரையாசிரியரால் உரைக்கப்பட்ட பெருநகராம் உறையூரும், காடுமேடுமே யன்றிக் கண்டுணர் தற்கொன்றுமிலாது புதைபொருளாய்க் கிடக்கும் பிற்காலச் சோழரின் பெருமாளிகை நின்ற பழையாறை நகரும் கால வெள்ளத்தால் கரைந்தொழிந்தன. இத்தகுதி பெறாமல், முத்தரைய மன்னர்களுடைய காலத்திலிருந்து பிற்காலச் சோழ மன்னரின் ஆட்சிக்காலம் முழுவதும் சிறந்து விளங்கியதோடு, பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலம் வரையிலும் முறையே நாயக்க, மகாராட்டிர அரசுகளால் ஆளப்பட்டுவந்த தஞ்சைமாநகரின் பழைய சின்னங்கள், இயற்கைக்கும் பகைக்கும் ஈடு செய்தது போக எஞ்சி நின்றும் மக்களின் வாழ்க்கைக்கு நாள்தோறும் இரையாகி மறைந்து வருகின்றன. எனவே, எஞ்சியுள்ள சின்னங்கள் மருங்கற மறையுமுன்னர் அவற்றைப் பற்றிய நிலையினையும் ஆய்வுரையினையும் வெளியிடுதல், ஓரளவு தஞ்சையின் வரலாற்றினை அறிஞர் மேலும் சிந்திப்பதற்கு உதவியாகும் என்னும் குறிப்புடனேயே 'தஞ்சையின்



எஞ்சிய வரலாறு' என்னும் குறிப்புடன் கட்டுரைகளாக எழுதலானேன். அவற்றுள் ஐந்தாவதாகிய இக் கட்டுரை, 1200 ஆண்டுகட்கு முன்னரே தஞ்சை நகரைச் சூழ்ந்து நின்ற அரண்வகைகளைப் பற்றியதாகும்.

தஞ்சையின் வரலாறு, தென்னாட்டின் வரலாற்றுக் காலந் தொட்டுத் தெளிவு பெற்றதாகவே இருக்கின்றது. அன்றும் இந்நகர் தக்க அரண் வகைகளாற் பாதுகாக்கப்பட்டிருந்த உண்மையைப் பழைய பாடல்களாலும், கல்வெட்டுகளாலும், எஞ்சி நிற்கும் அருகிய சின்னங்களாலும் தெளிய இயலுகின்றது.

கி. பி. 9-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில், முத்தரைய மன்னரிடமிருந்து சோழன் விசயாலயன் தஞ்சையைக் கைப்பற்றும்போது நகர் சிறந்த மதிலரணால் பாதுகாக்கப்பட்டிருந்தது. இதனை, கி. பி. எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவராக ஆராய்ச்சியாளர் தெளிவுகொள்ளும் திருமங்கையாழ்வார், தஞ்சை நகரின் வடமேற்குப் பகுதியில் அமைந்திருந்த மாமணிக் கோயிலில் எழுந்தருளிய திருமாலைப் பற்றிப் பாடிய 'எம்பிரான் எந்தை' என்று தொடங்கும் பாடற் பகுதியினுள் 'வம்புலாம் சோலை மாமதில் தஞ்சை' என்று தஞ்சைநகர் மாமதிலினால் சிறப்புற்றிருந்தமையை நோக்கிப் பாடிய உண்மையால் தெளிய ஏதுவாகின்றது.

இவ்வாறு, அடியாரொருவரின் பக்திப் பாடலை வரலாற்றுச் சான்றாக முற்றிலும் கொள்ளற்கு மலைவு ஏற்படா வண்ணம், கி. பி. 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவரான சேக்கிழாரவர்கள் தாம் யாத்த திருத்தொண்டர் புராணத்துள், திருநாவுக்கரசர் காஞ்சி நகரை அடைந்தமையைக் கூறுமிடத்து, 'தையல் தழுவக் குழைந்த பிரான் தங்கும் தெய்வப் பதியென்று வையம் முழுதும் தொழுதேத்தும் மதில் சூழ்

காஞ்சி மருங்கணைந்தார்'' என்றும், மதில் கொண்டு அணிந்த காஞ்சிநகர் என்றும், காஞ்சி நகர் மதில் சூழ நின்ற பெருமையினை இலக்காகக் கொண்டு அந்நகரினைச் சிறப்பிக்கின்றார். எனவே, தஞ்சை நகரை ஆழ்வார் சிறப்பித்தற்குத் திண்மையான மதிலே இலக்கானமை தெளிவாம்.

இரண்டாவதாகக் கி. பி. 11-ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை வாழ்ந்தவராகக் கருதப்பெற்றவரும் சித்தராகத் திகழ்ந்தவரும், தஞ்சை இராசராசேசுவரத்தில் சிவலிங்கப் பிரதிட்டை செய்ய முயன்றபோது இயலாது போகவே, அதனை அமைத்துக் கொடுத்தவருமாகிய கருவூர்த் தேவர் தஞ்சை இராசராசேச்சரத்தைப் பற்றித் தாம் அருளிய திருவிசைப்பாவின் ஒவ்வொரு பாடலின் கடையடையடியாக ''இஞ்சி சூழ் தஞ்சை இராசராசேச்சுரத்திவர்க்கே'' என்று தஞ்சை இஞ்சியால் சூழப்பட்டிருந்த சிறப்பினை எடுத்துக் கூறுகின்றார். இஞ்சி என்பது தொடர்ந்து செல்லும் திண்மையான மதிலரணைக் குறிக்கும் சொல்லாகும். தேவர் தஞ்சையைச் சிறப்பித்தற்கு வேறு பல சின்னங்களிருந்தும் அவற்றைக் குறிப்பிடாது இஞ்சியை மட்டும் தஞ்சைக்கு அணியாக எடுத்துக் கொண்டுள்ளார். அதனால் தஞ்சை நகருக்குரிய சிறப்பு மதிலமைப்பினாலேயே நின்றது என்பது தெளிவாகின்றது. இல்லையெனில், இஞ்சி சூழ் தஞ்சை என்று தேவர் சிறப்பித்துக் கூறுதற்கு ஏது இல்லையன்றோ! எனவே, திருமங்கை மன்னர் கூறிய கருத்தினைத் தொடர்ந்தே கருவூராரின் கருத்தும் ஒத்திருத்தல்கொண்டு, தஞ்சை சிறந்த பழமையான மதிலரணால் காக்கப்பட்டிருந்த உண்மை மேலும் வலியுறுகின்றதாம்.

மூன்றாவதாக, 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த 'கோனேரின்மை கொண்டான்' என்னும் சிறப்புப்



பெயரையுடைய சோழ மன்னனொருவனால், தஞ்சைப் பெரியகோயிற் கருவறையில் வெட்டப்பட்டுள்ள கல்வெட்டொன்றனுள், தேவதானமாக விடப்பட்டுள்ள பகுதியும், தஞ்சை நகரின் வடபுறம் சார்ந்துள்ள நகரமாகிய கருந்திட்டைக் குடியான சுங்கந்தவிர்த்த சோழநல்லூருக்கு எல்லை கூறுமிடத்து,

''கீழ்பாற் கெல்லை தஞ்சாவூர் நந்தவனப் பற்று எல்லைக்கு மேற்கும், தென்பாற் கெல்லை மும்முடிச் சோழன் மதிலுக்குக் கிழக்கும் நந்தவனப் பற்று எல்லைக்கும் வடக்கும் மதிளுக்கு மேற்கும்''(S.I.I. Vol. I Part I Page 113) என்று கூறப்பட்டுள்ளது.

இக் கல்வெட்டினுள் தஞ்சைக்கு வடக்கேயுள்ள நகரத்திற்குத் தென் எல்லையாக மும்முடிச் சோழன் மதில் கூறப்பட்டுள்ளது. எனவே, தஞ்சை நகர்க்கு வடக்கு எல்லை கோலியதாகத் தொடர்ந்து நின்ற மதிலின் பகுதியே ''மும்முடிச் சோழன் மதில்'' என்று பெயர் பெற்றிருந்ததென்பது நன்கு புலனாகின்றது. இம்மதிற் பகுதியைப் பற்றிய ஆய்வுரையினை முதற் கட்டுரையில் விளங்கக் கூறியுள்ளேன்.

இவ்வாறு, நகரின் பாதுகாவலுக்குரியதாகவும் நெடிதாகவும் வளர்ந்து நின்ற அரண், 13-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாண்டிய நாட்டை ஆண்ட சுந்தரபாண்டியன் மெய்க்கீர்த்தியாலும் அறிய முடிகின்றது. இவனுடைய காலத்தில் சோழ நாட்டை யாண்ட மூன்றாம் இராசராசனையும் சோழ நாட்டையும் ஒழிக்கும் கொடுமையுடன் படையெடுத்து வந்த இப்பாண்டியன் உறையூரையும் தஞ்சையையும் தாக்கிப் பழைய சின்னங்களை இயன்ற அளவு அழிவு செய்துள்ளமையை,

''தஞ்சையும் உறந்தையும் செந்தழல் கொளுத்திக் காவியும் நீலமும் நின்று கவினிழப்ப ஆவியு மாறு மணிநீர் நலனழித்துக் கூடமும் மாமதிலும்

கோபுரமும் மாடரங்கும் மாடமும் மாளிகையும் மண்டபமும் பல இடித்து.....சோணுடு கொண்டு முடிகொண்ட சோழபுரத்து வீராபிஷேகம் பண்ணி அருளிய ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர்க்கு (S.I.I. Vol. VI. Ins 372). என்று கூறும் இவனது மெய்க்கீர்த்திப் பகுதியால் நன்கு அறிய முடிகின்றது.

இவ்வாறு, மதிலரணுல் சிறப்புற்றிருந்த தஞ்சைக்கு அணியாக, அரண்வகைகளுள் சிறந்த தொன்ருன அகழும் மதிலைச் சார்ந்த முறையில் பழமையாகவே இருந்திருக்கின்ற தென்பதனையும் அறிய இயலுகின்றது. இராசராசேச்சுரத்தைப் பற்றிப் பாடிய கருவூர்த் தேவரின் மற்ருெரு பாடலுள், "மறிதிரை வடவாற்றிடு புனல் மதகில் வாழ் முதலை எற்று நீர்க்கிடங்கில் இஞ்சி சூழ் தஞ்சை" என்று கூறப்பட்டுள்ளது. இத்தொடரின் கருத்திஞல், இன்றும் வளம் குன்ருது தஞ்சைக்கு வடக்கு எல்லையாக ஓடும் வடவாற்றிலிருந்து நகரைச் சூழ அகழப்பட்டிருந்த அகழிக்கு நீர் நிரப்பும் மதகு இருந்ததென்பதும் அங்கு வாழும் முதலை அகழியிலும் சென்று உலாவும் இயல்புடையது என்பதும் விளங்குகின்றன. புணர்துரையின்றித் தாம் கண்ட அகழியின் இயல்பினைத் தேவர் பாடியதிலிருந்து, தஞ்சை நகரைச் சூழ நின்ற மதிலரணைச் சார்ந்து வெளிப்புறமாக அகழ் இருந்திருக்கின்ற உண்மையும் புலனுகின்றது. மதிலைச் சார்ந்தே அகழ் அமைக்கப்பட்டிருக்குமென்பதனை, "தடமதில் பொதியப் புல்லுங் தண்கிடங்கு" என்று காஞ்சிப் புராணத்துள் வரும் தொடராலும் அறியலாகும்.

இவற்ருல். கி. பி. எட்டாம் நூற்றுண்டுக்கு முன்னரே தோன்றி, தஞ்சை நகருக்குத் தக்க பாதுகாவலாகவும் அணியாகவும் நின்ற மதிலரண், கி. பி. பதின்மூன்ரும் நூற்றுண்டில் எழுந்த சுந்தரபாண்டியனுடைய படையெடுப்பால் ஓரளவு அழிவுற்ற பின்னர்ச் சில நூற்றுண்டளவு வரையில் செம்மையான அரசு தஞ்சையில் ஏற்படாத காரணத்திஞல் சீர்திருத்தப் பெருமல் இயற்கைக்கும் மக்கள் தேவைக்கும் இரையாகி அழிந்தொழிந்தது என்பது ஆராய்ந்தறிய முடிகின்றது.



108744

இப்பழைய மதிலரணையும் அகழையும் பற்றிப் பல ஆண்டுகளாகவே ஆராய்ந்து வந்ததின் முடிபாகச் சில உண்மைச் சுவடுகள் புலனுயின. அவற்றுள் தஞ்சை இராசராசேச்சரத்திற்குத் தென்மேற்கில் உள்ள இளைஞர் சிறைச்சாலைக்கு அண்மையில் உள்ள பள்ளத்தாக்கும் அதைச் சார்ந்து அங்குமிங்கும் அடிப்படை அளவில் காணப்படும் மதிலமைப்புச் சுவடுகளும் கிடைப்பதாயின. அவற்றுடன் தஞ்சையின் வடபால் வடவாற்றைச் சார்ந்த பகுதியில் உள்ள அழிந்த அகழின் சுவடுகளுடன், சிரேயசு அறச்சாலையின் பின்புறமாகத் தொடரும் பாழடைந்த பகுதிகளுள் பழைய மதிற் சுவடுகள் ஆங்காங்கு எஞ்சிய வடிவில் நிற்பதைத் தஞ்சையில் வழிவழியாக வாழும் முதியவரொருவரின் குறிப்பால் அறிந்து, ஆங்குச் சென்று கண்டுணர்ந்தேன். செங்கற்களைக்கொண்டே கட்டியுள்ளதாகத் தெரியும் இம்மதிற் பகுதிகள் பழமையுடையனவாகவே காணப்படுகின்றன.

இவ்வாறு, நகரின் வடகிழக்கு எல்லையாகத் தொடர்ந்திருந்த மும்முடிச் சோழன் மதில், வடமேற்கில் காணப்படும் பழைய மதிற் சுவடுகள், அவற்றைச் சார்ந்து உட்பகுதியாக இருந்த மாமணிக் கோயில், தென்மேற்கில் மதில் இருந்ததாகக் காணப்படும் பள்ளத்தாக்கோடு கூடிய சுவடுகள் ஆகியவற்றைக் கொண்டு தஞ்சை நகரைப் பண்டை மதிலும் அகழும் சூழநின்ற நிலையை வரைந்து எல்லைப் படுத்துவோமாயின், நகர் இன்றுள்ள அளவினும் விரிந்து

மேற்கிலும், தெற்கிலும் பரந்து நின்ற நிலை நன்கு விளங்குவதாகும். இத்தகைய பெருநகரில் முதல் இராசராசன் எடுத்த திருக்கோயில் இன்று நகரின் தென்மேற்கு மூலையில் தனித்து இருப்பதாகக் காணப் படினும், பண்டை நகரின் நடுவே அமைக்கப்பட்ட தாகவே காணப்படுகின்றது.

எனவே, இதுகாறும் கூறியவற்ருல் தஞ்சை நக ருக்கு அணியாகவும், காப்பாகவும் கி. பி. 7-ஆம் நூற் ருண்டளவிலேயே தக்க மதிலரணும் அகழும் இருந் திருக்கின்றன என்பதும் அவை, கி. பி. 13-ஆம் நூற் ருண்டில் நிகழ்ந்த சுந்தர பாண்டியனது படையெடுப் பாலும் பிறவாற்ருலும் அழிவுற்றன என்பதும், பழைய மதிலரண் சூழ்ந்திருந்த தகுதியை அளவிட்டு நகரை எல்லைப்படுத்துவோமாயின் இராசராசேச்சரம் நகரின் நடுவே எழுப்பப்பட்டுள்ள உண்மைப் புல ருகு மென்பதும் போதரும்.

(இன்று, சிறிய அளவில் நகரைச் சூழ்ந்துள்ள அரண் வகைகள் கி. பி. 16-ஆம் நூற்ருண்டில் ஏற் பட்டவை).



ஐயனார்
(நாகத் தீவு)

## 6. வரலாறுகொண்ட நாகத்தீ(வு)

பண்டைத் தமிழகத்தின் உண்மை வரலாற்றினைத் தன்னகத்தே மறைத்துவைத்துத் தரிசாகவும், காடு கரம்பாகவும் காட்சியளிக்கும் சிற்றூர்களில் இன்று 'நாகத் தீ' என்று அழைக்கப்படும் நாகத்தீவும் ஒன்றாம்.

இச் சிற்றூர், தஞ்சையிலிருந்து திருவையாற்றுக்குச் செல்லும் நேர் சாலையினின்றும் வெட்டாற்றின் வடகரையாகப் பிரியும் மட்சாலை வழியாக நேர் மேற்கே நான்கு கல் அளவில் அமைந்துள்ளது.

இவ்வூரை நாகத் தீ என்று அழைப்பதற்கு இவ்வூரிலுள்ள முதியவர்கள் கூறும் கதைகள் பலவாகும். அவற்றுள், பன்னூறு ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்த நாகம்மை என்னும் அரசியின் விருப்பப்படி அவ்வம்மை இறந்த பிறகு, அத்தியைத் (ஏலும்பை) தாழியிலிட்டு இச் சிற்றூரில் புதைத்தார்கள் என்றும் அதனால் நாகம்மை அத்தியை உடைய காரணங்கொண்டு நாகம்மை அத்தியூர் என்பது மருவி நாகத்தியாயிற்றென்று கூறும் கதையும் ஒன்றாம்.

நமது தமிழகத்தின் பழைய உண்மை வரலாறுகள் மறைந்ததற்குரிய காரணங்களுள் ஒன்றாய புராணச் சுவையில் மயங்கியவர்கள் கூறும் கதைகளே

இவைபோல்வன வென்பதை யாவரும் அறிவர். ஆயி னும் இப் புனேந்துரையுள்ளும் மறைந்துகிடக்கும் உண்மை வரலாற்றுச் சுவடுகள் உண்டு.

வரலாறு என்பது சென்ற காலத்தின் திறவுகவும் வருங்காலத்திற்கு முளேயாகவும் அமைகிறது. எனவே தமிழகத்தின் உண்மை வரலாறுகளேக் காண ஆர்வம் பிறந்துள்ள இக் காலத்தில் மிகுதியாகவும், புனேந் துரையாகவும், இடைக்கால மாசாகவும் எழுந்தன வனைத்தும் அறிவகத்தினின்றும் பெயர்ந்தெழ, உண்மை வரலாறுகளும், சின்னங்களும் நிலேபெற்று வருகின்றன.

'செந்தலே' என்று இப்பொழுது வழங்கப்படும் சந்திரலேகைச் சதுர்வேதிமங்கலத்திற்குத் தென் கிழக்கே அமைந்துள்ள இச்சிற்றூரினே (நாகத்தி) நன்கு ஆய்ந்து அறிய விரும்பிய யான் பன்முறை சென்று நன்கு அப்பகுதியைத் துருவி ஆய்ந்து வரலா னேன். அம்முயற்சியில் கிடைத்த உண்மைச் சுவடு களேயே ஈண்டுக் குறிக்க விழைந்தேன்.

இவ்வூரின் அமைப்பு மிகவும் வியக்கத் தக்கதாக அமைந்துள்ளது. கிழக்கு மேற்காக நீண்டு நாற் புறமும் ஆறுகளால் சூழப்பட்டுள்ள இந் நிலப்பகுதி ஒரு தீவாகவே காட்சி யளிக்கின்றது. இத் தீவிற் குத் தென்புற வெல்லேயாக அமைந்திருப்பது வெண்ணாற்றிலிருந்து பிரியும் வெட்டாறேயாம். இவ்வெட்டாறு நாகத்தியின் மேற்புறத்தில் இரண்டாகப் பிரிந்துள்ளது. ஒரு பகுதி மேலெல்லே யாக வடக்கு நோக்கி ஒரு கல் அளவு ஓடிய பின் வளேந்த பாங்கில் கிழக்கு நோக்குகிறது. இங்கு, மிகப் பழமையுடையதும், வரலாறு கொண்டதுமாய 'கடுங்கால்' என்னும் பெருவாய்க்கால் கூடுகிறது. கடுங்காலின் நீர்ப் பெருக்கும் கிளே வெட்டாற்றின்



பெருக்கும் கலந்து ஊரின் வடவெல்லேயாக. நிலப்பாங் கிற்கேற்ப வளேவுகள் பலகொண்டு ஓடுகின்றது. இவ் வாறமைந்துள்ள கிளே வெட்டாறும், எதிரிட்டு ஊரின் தென்னெல்லேயாக ஓடிவரும் நேர் வெட்டாறும், கிழக்கு நோக்கி ஓடுங்கால் ஒன்றை ஒன்று குறுகிச் சரியாக இரண்டு கல்லளவில் ஒன்றுகூடுகின்றன. இவ்வாறு மேற்புறம் அகன்றும், கீழ்ப்புறம் நெளிந் தோடிக் குறுகி முடிந்தும் அமைந்திருக்கும் இச் சிற்றூ ரின் அமைப்பு, படம் விரித்துப்படுத்த நாகமொன்றின் தோற்றத்தோடு விளங்கும் ஆற்றிடைக் குறை யாகவே அமைந்துளது. இன்று இவ்வூருக்குச் செல லக் கிளேவெட்டாற்றில் அண்மையிற் கட்டப்பட் டுள்ள பாலம் இல்லேயெனில், எத்திசை வழிக்கொளி னும் ஆறுகளேக் கடந்தே செல்லுதல் வேண்டும்.

இவ்வாறு படநாகத்தின் படிந்த நிலேயொத்த நில வடிவும் தீவாக அமைந்துள்ள பாங்கும் ஒன்றிய சிறப் பினுனே, இவ்வூரின் பெயர் "நாகத் தீவு" (நாகம் + தீவு) என்று அழைக்கப்பட்டிருக்க வேண்டுமென்பதை முடிபு செய்யலானேன். எண்ண முடிபாகக் கூறுவது இயல் பாகாதென்று மயங்கிய பின்னர், மேலும் ஆய்ந்த போது இவ்வூரில் இரண்டு கல்வெட்டுக்கள் இருப்ப தைக் கண்டேன். அவற்றுள் ஒன்று சென்ற நூற் ருண்டினதாக இருந்தும் எனது எண்ணத்திற்குப் பற்றுக்கோடாக அமைந்துளது.

இச்சிற்றூரின் பெரும்பகுதி தரிசாக உள்ளது. ஒரு சில பகுதிகள் குடியிருப்பு நன்செய் புன்செயாக வும் இப்பொழுது காட்சியளிக்கின்றன. தீவின் மேற்கு வரம்பின் இடைப்பகுதியிலேயே ஊரமைந்துள்ளது. இப்பகுதிக்குத் தென் கிழக்கே தரிசாகவும், புதராக வும் பரந்து கிடக்கும் இடத்தில் சிதைந்த தோற்றத் தில் காட்சியளிப்பதே ஐயன் கோயிலென்று ஊரார் கூறும் கோட்டமாகும். இக்கோட்டம் மிகப் பழமை

உடையதென்பதற்குத் தக்க இலச்சினைகள் உள்ளன. கோயில் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. திருச்சுற்றின் பெரிய மதில் சுவர் சிதைந்து, சுற்குவியலும், புதருமாகக் காட்சியளிக்கின்றது. ஆயினும், திருச்சுற்றின் தலைவாயிலும், பரிவாரத் தெய்வங்களின் சிறு கோயில்களும், வெண்சுதையால் எழுந்து நிற்கும் யானையும் கிழக்குப் புறத்திலேயே அமைக்கப்பட்டுள்ளன. ஐயனின் திருவுருவமும் கோயிலும் மேற்கு நோக்கி அமைந்திருக்க, மற்றவை கிழக்கே அமைக்கப்பட்டுள்ள நிலையை அறியவியலவில்லை.

ஐயனின் திருவுருவம் மிகவும் தொன்மையான சிற்ப இலக்கணமுடையதாக வுளது. அமர்ந்த பாங்கிலுள்ள ஐயனின் திருவுருவத்திற்கு இடப்புறமாகத் தேவியின் திருவுருவம் நின்ற கோலத்தில் காட்சியளிக்கின்றது.* இவ்விரு சிற்பவுருவங்களும், ஐந்தடி உயரமும் நான்கடி அகலமும் உள்ள ஒரே கல்லில் செதுக்கப்பட்டுள்ளன. இருக்கையில் அமர்ந்துள்ள ஐயன் வலக் காலை இருக்கையில் மடக்கி ஊன்றியும், இடக் காலைத் தாழ அமைத்தும், வலக் கையைப் பெருமிதத்தோடு ஊன்றிய முழந்தாளின் மேல் பொருத்தி நீட்டியும், இடக் கையைத் தேவிக்கு அருகே இருக்கையில் ஊன்றியும் இருக்கும் தோற்றம், வலியாலும், திருவாலும், வள்ளன்மையாலும் பெருமிதங்கொண்டு விளங்கும் பேரரச னொருவனின் தோற்றமாகவே மிளிருகின்றது. அழகு சுமந்திளைத்த வடிவோடு தேவியின் நிலையும் ஒளிருகின்றது. இருக்கையின் வலப்புறம் ஞமலியின் சிற்பமொன்றும் இணைந்து காணப்படுகின்றது. ஐயன், தேவி ஆகிய திருவுருவங்கட்கு முடிமேல் புனைந்து அழகு செய்யும்

* இவ்வுருவங்களின் புகைப்படத்தினை இந்நூலின் கடைசிப் பகுதியில் வெளியிட்டுள்ளோம்.



திருமுடிகள் இல்லை. இயற்கையான நிலையில் ஐயனின் தலைமுடி சுருண்டு பின்புறம் விரிந்து செறிந்து நிற்கிறது. தேவியின் கூந்தல் இயற்கையாகவே நேர் வகிடிடப்பட்டுப் பின்புறம் கொண்டையாக அமைக்கப்பட்டுள்ளது. நெற்றியில் சுட்டிக்கு ஈடாகக் காசுப் பட்டம் கட்டப்பட்டுள்ளது. இச் சிற்ப அமைப்பு மாமல்லபுரத்திலுள்ள மகேந்திரவர்மன் சிம்மவிட்டுணு ஆகியவரின் மனைவியரென்று ஆய்வாளர் கூறும்சிற்பங்களின் பாங்கினை ஒத்து உள்ளது. இவ்விரு வடிவங்களையும் பல்லவர் காலப் படிமங்களின் சிற்ப அமைப்புக்களோடு ஒப்பிடின், அவற்றோடு ஒத்த நிலையில் விளங்குவது தெளிவாம். மற்றும், இன்று தெய்வமெனக் கூறப்படும் இச் சிலைகள் ஒரு பேரரசன், அரசி ஆகியோரின் படிமங்களாக இருக்கலாம் என்று கூறுவதற்கும் சிற்ப முறையும் தோற்றமும் இடந் தருகின்றன.

இச் சிற்றூரைச் சார்ந்தும் சூழ்ந்தும் உள்ள ஊர்கள், இராசேந்திரம், செந்தலை, திருக்கருப்பூர், வெள்ளான்பெரம்பூர் ஆகியவைகளேயாம். இப்பகுதிகளெல்லாம் முத்தரைய மன்னர் காலமாகிய கி.பி. எட்டாம் நூற்றுண்டிலிருந்தே ஆர்க்காட்டுக் கூற்றத்துள் அடங்கிய ஊர்களாக இருந்தமையைச் செந்தலைச் சிவன் கோயிலிலுள்ள கல்வெட்டுகளால் அறியமுடிகிறது. எனவே இடையே உள்ள இத் தீவும் அப்பகுதியைச் சார்ந்தே இருந்திருக்கவேண்டும். மற்றும் இந் நிலத் திட்டை அகழிகள் போல் ஆறுகள் வளைத்து நிற்க, அதற்கடுத்தாற்போல் காட்டரண்களும் இருந்திருக்கின்றன. இவ்வாறு இயற்கையான பாதுகாவலுடைமையால் முத்தரைய மன்னர்கள் காலத்தில் இப் பகுதி தக்கதொரு தலைமையிடமாக அமைக்கப்பட்டுச் சிறந்ததொரு வீரனாலும் காக்கப்பட்டிருக்கவேண்டும். இக்கருத்தை, சிறந்த முறையில் இருந்து அழிந்ததற்

குரிய சின்னங்களோடு விளங்கும் இராசாமேடு, கோட்டைக்கரை, கீழக்காவலூர் என்ற பெயர்களோடு விளங்கும் தரிசுப் பகுதிகளால் அறிய வியலுகின்றது. இன்றுள்ள ஊரைச் சார்ந்துள்ளதும், புன்செய் நிலமாக்கப்பட்டுள்ளதுமாய் இராசாமேட்டுப் பகுதியை அகழ்ந்தபோது பத்தடிக்குக் கீழே நல்ல திண்மையான செங்கற் சுவர்களும், கிணறுகளும் காணப்படுகின்றனவாம். அவற்றினின்றும் பெயர்த்தெடுக்கப்பட்ட செங்கற்கள் ஒன்றரை அடி நீளமும், முக்காலடி அகலமும், நான்கு அங்குலம் தடிப்பும் உடைய அளவுள்ளனவாக இருக்கின்றன. இத்தகைய வடிவுள்ள செங்கற்கள் இன்று மணல் மேடாகக் கிடக்கும் பூம்புகாரின் எஞ்சிய பகுதியினுள் கிடைக்கின்றன என்பதை ஆய்வாளர் நன்கறிவர்.

தமிழகத்தின் தொன்மையை விளக்கிக் காட்டும் சின்னங்களுள் முதுமக்கள் தாழியும் ஒன்றும். இவ்வூரின் மேற்கு எல்லையாகப் பிரிந்துவரும் கிளை வெட்டாற்றின் கீழ்க் கரையிலும், தென் எல்லையாக ஓடும் நேர் வெட்டாற்றின் வட கரையிலும், முதுமக்கள் தாழிகள் பல கிடைக்கின்றன. மற்றும் இப்பொழுதுள்ள ஊரின் ஒரு புறத்தில் மனைகோல அடிப்படை அகழ்ந்தபோது ஆங்குப் பல தாழிகளும் நன்னிலையில் உள்ளதொரு உறைக்கிணறும் பதினைந்தடிகட்குக் கீழிருக்கக் கண்டுள்ளனர். இத் தாழிகளுக்குள் சிதைந்து நீருகக் கிடக்கும் எலும்புகளோடு சிறு கலயமொன்றும் இருந்ததாக எடுத்தவர்கள் கூறக் கேட்டறிந்தேன். இத்தகைய தாழிகள் நமது தமிழக வரலாற்றுராய்ச்சிக்குப் பெரிதும் பயன்படுவனவாகும்.

## புதிய கல்வெட்டுகள்

இப்பொழுது மக்கள் வாழும் பகுதிக்குக் கிழக்கு எல்லையாக அமைந்துள்ளது சிவன் கோயிலாகும். இக்



கோயிலும் மேற்கு முகமாகவே அமைந்துளது. கோயிலின் ஒரு பகுதியாகத் தெற்கு நோக்கி அமைந்துள்ள உமையின் திருக்கோயில் நுழைவாயில் நிலையாகவுள்ள கருங்கற் சட்டங்களுள், கிழக்குப்புறமுள்ள கல்லில், சென்ற நூற்றுண்டில் எழுந்ததும் சிறியதொரு செய்தியைத் தன்னகத்தே கொண்டதுமாய்த் தமிழ்க் கல்வெட்டொன்று உளது. இக் கல்வெட்டினுலேயே இவ்வூர் 'நாகத் தீவு' என்று அழைக்கப்பட்டிருக்கிறது என்பதை உறுதிசெய்ய முடிந்தது. இக் கல்வெட்டில், "நந்த ஸ்ரீ, பங்குனி மீ ருகூவ இன்னுக தீவின் பங்காக...ஊறார் பண பத்து" என்னும் செய்தியும், நாகத்தீவு என்னும் பெயரும் வந்துளது. கல்வெட்டு மிகப் பிற்பட்ட காலத்ததாயினும் இயற்கைச் சூழலின் காரணமாக உண்டான இவ்வூரின் உண்மைப் பெயர் கூறப்பட்டுளது. இப்பொழுது அப்பெயரின் முழு வடிவு குறைந்து 'நாகத்தீ' (வு) என்ற அளவில் கூறப்படுகிறது என்பதும் இதனுல் தெளிவாம்.

மற்றொரு செய்தியும் ஈண்டுக் கூற விழைகின்றேன். 21-12-58-இல் யான் இக்கோயிலுக்குச் சென்றபோது ஐந்தடி உயரமுள்ள உமையின் திருமேனியிலுள்ள சிற்ப நுட்பங்களைக் காண நேர்ந்தது. அத் திருமேனி திருமகளுடையதாக இருப்பதைக் கண்டு, இச்சிலை புதியதென்றும், ஆதியில் கோயிலில் அமைக்கப்பட்ட உமையின் சிலை ஏதாவது பின்னமடைந்ததின் காரணமாக மறைக்கப்பட்டிருக்கலாமென்றும் கூறினேன். காகதாலியமாக என் சொற்படி மூன்றும் நாள் 23—12—58-இல் கோயிலுக்கு அருகே புதையுண்டிருந்த உமையின் திருவுருவம் கிடைத்திருக்கிறது. நான்கடிக்குமேல் உயரமுள்ளதாக, நின்ற கோலத்தில் உள்ள இச் சிலை 'நாராயணி' என்று பெயரிடப்பெறும் சிற்ப இலக்கணமுடையதாக இருக்கிறது. அதன் முகத்தில் சில சித

லங்கள் ஏற்பட்டதன் காரணமாகவே இச்சிலை எழுந்தருளி நின்ற இடத்தில் வேறு திருவுருவம் அமைத்திருக்கிறார்கள்.

மற்றொரு கல்வெட்டு தஞ்சை நாயக்கரது வரலாற்றுச் சுவடுகளோடு கூடிய தெலுங்கு மொழியில் உள்ள கல்வெட்டாகும். இது, ஐயனார் கோயில் கருவறை வாயிலின் மேல்தளத்தில் உள்ள இரண்டு கற்சட்டங்களுள் உள்ளடங்கிய சட்டத்திலுள்ளதாகும். இருளடைந்த இடத்திலுள்ள இக்கல்வெட்டை மிக முயன்றே கண்டேன். நான்கு பட்டையாக நான்கடி நீளமுள்ள இக் கல்லின் மூன்று முகப்புக்களில் எழுத்துக்கள் வரி வரியாக வெட்டப்பட்டுள்ளனவாயினும் எழுத்துள்ள ஒரு பகுதி சுவருள் பொருத்தப்பட்டதாகச் சாந்திடப் பட்டுள்ளது. இவ்வாறு கல்வெட்டுள்ள கல், பயன் படுத்தப்பட்டுள்ளதி லிருந்து இக்கோயில் அடிப்படை தவிர மேல் நிலைகளும், விமானமும் பிற்காலத்தில் புதிதாக எடுக்கப்பட்டுள வென்பது நன்கு விளங்குகிறது.

இக் கோயில், மகாமண்டபம், முகமண்டபம், கருவறை என்ற அங்கங்களோடு அறுபதடியளவில் நீண்டு அமைந்துளது. முன்னுள்ள மகா மண்டபத்திற்கு மூன்று புறமும் வாயில்கள் உள்ளன. இம் மண்டபமும், மற்றைய பகுதிகளும் சிதைவுபட்டும் புதரடைந்தும் காணப்படுகின்றன. கருவறை மட்டும் இருட்டறையாகவே காட்சி யளிக்கிறது.

ஐயன்கோயிலில் கல்வெட்டுள்ள செய்தி அவ்வூரிலுள்ள முதியவருக்கும் வியப்பாகவே இருந்தது. பின்னர் மும்முறை முயன்று அக் கல்வெட்டை மைப்படியெடுத்தும் கைப்படி யெடுத்தும் படித்தறிந்தபோது, தஞ்சை நாயக்கர் கால வரலாற்றுச் செய்திகள் கிடைத்தன. கல்வெட்டு முழுவதையும் பின்னர் வெளியிட



வேண்டியிருப்பதால் குறித்த பகுதியை மட்டும் ஈண்டு குறிப்பிடுகிறேன்.

> “பூதான தர்ம சாஸநம்”...புத்ருடு...சினசேவப்ப நயனிங்கார்லு, பாரத்வாஜ கோத்ரம், ஆச்வலாயன சூத்ரம்...”

சின்ன சேவப்பநாயகர் என்பவரால் இவ் வையன் கோயிலுக்குச் சில நிலங்கள் இறையிலி செய்யப்பெற்றமையே இச்சாசனம் கூறுகின்றது.

இவ்வாறு இன்று நாகத்தி என்று குறைத்து அழைக்கப்படும் நாகத் தீவானது முத்தரையர்கள் காலத்தில் மிகச் சிறந்த காவற் பகுதியாக இருந்ததென்பதும், இன்றுள்ள ஐயன்கோயில் அக் காலத்தில் எழுந்த நினைவுச் சின்னமாக இருந்திருக்கவேண்டுமென்பதும், இன்று திடலாகக் கிடக்கும் பெரும் பகுதியின் அகட்டில் இவ்வூரின் வரலாறு புதைந்து கிடக்கிறதென்பதும், முதுமக்கள் தாழிகள் கிடைப்பதினாலேயே இப்பகுதி வரலாற்றுண்மை பெற்றுள்ளதென்பதும் போதரும்.

இவ்வாறு புதிய கல்வெட்டுகளுடன், வரலாற்றுச் சுவடுடைய பகுதிகளை யான் முயன்று கண்டபின், அதனை நன்கு ஆயவும், அங்குள்ள திடலையும் மேட்டையும் அகழ்ந்து உண்மை காணவும் அவாவுடையேனெனினும், இதனைப் புதைபொருள் ஆராய்ச்சிக் கழகம் முயன்று ஆராயின் முத்தரையர் காலச் சரித்திர உண்மைகள் பல இப் பகுதியில் கிடைக்குமென்பது திண்ணம்.

# 7. விக்கிரம சோழ விண்ணகரம்

மார்கழித் திங்கள் வளர்மதி அட்டமியும் புதன் கிழமையும் பெற்ற இரேவதி நாளில், விக்கிரம சோழ விண்ணகரத்தின் திருமுற்றத்திலே திரிபுவன வீர புரத்து அரசியலதிகாரிகளும் அறங்கூறுவாரும் பொதுமக்களும் கூட்டம் குறைவறக் கூடியுள்ளனர். ஊர்க்காவலுரிமை பூண்டுவந்த அதிகாரிகளுக்குரிய மகமை முறைமைகள் மாறியதன் காரணமாக எழுந்த குழப்பத்தால், 'வேலியே பயிரை அழித்ததைப்போல்' காவலுரிமை பூண்டவரே ஆத்திரத்தால் அறிவிழந்து ஊரைப் பாழ்செய்ததோடு, திருமால் கோயிலையும் வைணவ மக்களையும் அழிவு செய்து பழிதீர்த்து விட்டனர். இவ்வாறு நிகழ்ந்த புயலுக்குப்பின் அமைதியைப்போல், அறிஞராலும் ஆற்றலுடையாராலும் கூட்டப்பெற்றதே இவ்வூர்க் கூட்டமாகும். எவ்வாற்ருனும், அழிவுகளும் கொடுமைகளும் மீண்டும் நிகழாத வழியினையே அரசியலதிகாரிகள் நோக்குகின்றனர். இந்நிலையில், கலகம் விளைவித்த காவலதிகாரிகளுள் தலைமைகொண்ட ஒருவன், தங்களுக்குரிய மகமை முறைமைகளைப் பற்றிய முடிபான கருத்தினை அவையோரிடம் தெளிவாகக் கூறியதோடு, தங்களுக்குரிய



உரிமைகள் உள்ளவாறு கிடைக்கப்பெறின், 'நாங்கள் எத்தகைய அழிவுகளும் ஊரிற் செய்வதில்லை; அப்படி மீண்டும் செய்யின் எங்கள் தாய்க்கு நாங்கள் மணளுகின்ற இழிவைப் பெறுவோ' மென்ற உறுதிமொழியும் கூறுகிருன்.

இவ்வாருன காவலதிகாரிகளின் கருத்திற்குச் சபை ஒப்பம் செய்ததாகத் தெரிகிறது. ஆயினும், அடுத்த திங்களிலேயே அவர்தம் கோட்பாட்டினை மேலும் உறுதி செய்யவேண்டிய நிலைமை திரிபுவனவீர புர மக்களுக்கு ஏற்படுகிறது. எனவே, தைத்திங்கள் வளர்மதியும் சதுர்த்தசியும் திங்கட்கிழமையும் பெற்ற பூசத்து நாளிலே, விக்கிரம சோழ விண்ணகரத்தின் திருமுற்றத்திலே, மறுமுறையும் ஊர்ச்சபை கூடுவதாயிற்று. இக்கூட்டத்தில் கலகம் விளைவித்த ஊர்க் காவலதிகாரிகள், தங்கள் மகமை உரிமைகளை மேலும் தெளிவுறக் கூறியதுடன், 'இப்படி ஒழிய அடுத்தொரு அனியாயம் செய்தோமாகில் எங்கள் பாண்டியராயர் மக்களுக்குச் சேதப்படுத்திய குற்றத்தைச் செய்தவர்களாவோம்' என்றும் உறுதி கூறியுள்ளனர்.

மேற்குறித்த நிகழ்ச்சிகள் கற்பனைக் கதைகளில் வருவனவல்ல. இற்றைக்கு அறுநூற்றைம்பது ஆண்டுகட்கு முன்னர்ச் சோழ நாட்டின் தென்பகுதியில் நிகழ்ந்த உண்மை நிகழ்ச்சிகளேயாம். மேற்குறித்த நிகழ்ச்சிகளுக்குரிய நகரத்தையும், கல்வெட்டுளையும், அவை பற்றிய ஆராய்ச்சினையும் காண்போம்.

## திரிபுவன வீரபுரம்

இச் சிற்றூர், பாபநாசம் தாலுகாவின் தென்பகுதியில், தஞ்சையிலிருந்து நாகைக்குச் செல்லும் புகை வண்டிப் பாதையிலுள்ள சாலியமங்கலம் என்னும் ஊருக்குத் தெற்கே ஒரு கல் அளவில் அமைந்துளது. இன்று 'திருபுவனம்' என்னும் பெயருடன் சிற்

றாராகக் காட்சியளிக்கும் இவ்வூர் பன்னிரண்டாம் நூற்றுண்டளவில் ஒரு சிறந்த நகரமாக இருந்திருக்கிறது. கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் முதல் இராசேந்திர சோழன் செப்பேடுகளிற் குறிக்கப் பெற்றுள்ள, வெண்ணிக் கூற்றத்துள் அடங்கிய ஊர்களை நேரிற் கண்டு தெளிவதற்கு யான் எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனுய், ஆங்காங்கே புதைந்தும் சிதைந்தும் புதரடைந்தும் கிடந்த வரலாற்றுச் சின்னங்களும் புதிய கல்வெட்டுகளும் எனது அறிவுக்கு விருந்தாயின. அவற்றுள் திரிபுவன வீரபுரமும் ஒன்ருகும்.

இவ்வூருக்கு வடக்கு எல்லையாக வீரசோழ வடவாறும் தெற்கு எல்லையாக பரவை ஏரி என்னும் பகுதியும் அடைவாக அமைந்துள்ளன. இப்பகுதியினுள் எங்குப் பார்த்தாலும் சைவவைணவச் சின்னங்கள் ஆங்காங்கு வரப்பிலும் வாய்க்காலிலும் தரிசிலும் மலிகிக் கிடக்கும் நிலையைக் காணும்போது, சென்ற காலத்திற்குச் சிந்தனையைத் தூண்டுவதாக உளது. இவ்வாருகச் சிதைந்து கிடக்கும் சிற்பங்களுள், பரவை ஏரி என்னும் பகுதியின் வடபாலிலுள்ள பெரியதொரு ஆலின் கீழ் வறிதே நிற்கும் ஐந்தடி உயர அளவில், மிகப் பொலிவுடன், அமர்ந்த பாங்கிலுள்ள திருமால் திருமேனியும், அதனைச் சார்ந்துள்ள திருமகள் திருமேனியும் குறிப்பிடத் தக்கனவாம். இத் திருமேனிகள் ஊரினுள்ளிருக்கும் குளமொன்றிற் கிடந்து எடுக்கப் பெற்றனவாகத் தெரிகின்றன.

இவ்வூரைப் பற்றிய ஒருசில இன்பச்சுவை பொதிந்த நாட்டுப் பாடல்களில் 'திரிபுவனம் எண்பது வீதிகளைக் கொண்டது' என்று கூறப்பெறுவதாலும், கல்வெட்டினுள் 'நகரம் திரிபுவன வீரபுரம்' என்று குறிப்பிடுவதாலும், இவ்வூர் பெருநகரமாக இருந்த உண்மை புலனுகின்றது. இவ்வூர் நகரமாக இருந்த காலத்தில் வீரசோழ வடவாற்றின் கரையில் சிவன் கோயிலும், ஊர் நடுவே திருமால் கோயிலும் தெற்கே ஐயன் கோயிலுடன் பிடாரி கோயிலும் இருந்திருக்கின்றன. இவை இன்று முழுவடிவில் காணக் கிடைக்கவில்லை. சிவன் கோயில் சிதைவுண்ட பின்னர், ஆற்றின் அழிவால் புதைந்து கிடக்கின்றது. திருமால் கோட்டம் இருந்த இடமென்பதற் கறிகுறியாகத் திருச்சுற்றுமதிற் சுவரில் சில பகுதிகளும், கருவறையின் அடித்தளமும் எஞ்சி நின்று காட்சி தருகின்றன. இக்கோயிலே மேற் குறித்த கலகத்திற்கு இலக்காகச் சிதைந்த விக்கிரம சோழ விண்ணகரமாகும். இச் சிதைந்த பகுதி பிற்காலத்தில் ஆற்றின் அழிவுக்கும் உள்ளாகியுள்ள தென்பதைச் சூழ்நிலையால் அறிய வியலுகின்றது. இவ் விண்ணகரத்தினுள் விளங்கிய திருமாலும் திருமகளும் புதைந்து சீர்கெட்டுக் கிடந்ததைக் கண்ட ஊரார், சில ஆண்டுகட்கு முன்னர் முயன்று, அத் திருமேனிகளை எடுத்து, கோயில் திருமுற்றத்திலேயே கீற்றுக் கொட்டகையிட்டு அமைத்துள்ளனர்.



ஒன்பதடி அளவில் நெடிதாக அறிதுயில் கொண்டுள்ள பெருமாள் திருமேனியும், நான்கடி அளவில், அமர்ந்த பாங்கிலுள்ள திருமகள் திருமேனியும் சிற்பத் தாற் சிறந்து உயிர்ப்புடன் விளங்குகின்றன. மற்றும் இச் சிதைந்த கோயிலினுட் கிடந்த நரசிங்கமூர்த்தி, இராமபிரான், பிராட்டியார் ஆகிய தெய்வத் திருமேனிகளுடன், திருமங்கை ஆழ்வார், இராமாநுசர், மற்றுமொரு ஆழ்வார் ஆகிய படிமங்களும் ஒருசேர எடுக்கப்பட்டு மூலவருடனேயே வைக்கப்பட்டுள்ளன. இவ்வளவாக, மூர்த்திகளும் ஆழ்வார்களும் சிறக்க விருந்த இவ் விண்ணகரம் இன்று முடிவடைந்த போர்க்களக் காட்சியைப்போல் தோற்றமளிக்கின்றது.

இச்சிதைந்த விண்ணகரத்தில் எஞ்சிய பகுதியாகவுள்ள கருவறையின் அடிப்படை வரிசை மிக வேலைப் பாடுடையதாக, பூதபந்த அமைப்பில் கற்களை அடுக்கி

வைத்துள்ளதைப்போன்று செறிவின்றிக் கலகலத்தும், இடுக்குகளிலிருந்து முட்செடிகளுடன் புற்றுகள் மல்கியும், வெப்பத்திற் காற்ருது பொரிந்தும் இருக்கின்றது. இக்கருவறைக் கற்களிலேயே மேற்குறித்த கலக நிகழ்ச்சிகளைக் குறிக்கும் கல்வெட்டுகள் உள்ளன. கல்வெட்டுப் பகுதியினுள் பொரிவுகள் மிகுதியாக இருப்பதால், ஒரு சில வரிகள் அழிவு பெற்றுள்ளன. கல்லெழுத்துக்கள் பிற்காலத் தமிழ்க் கல் வெட்டெழுத்துக்களைச் சேர்ந்தவையாகும். இக்கல்வெட்டுகளை யான் படியெடுப்பதற்கு முயன்றபோது, உடன் நின்று புதர், புற்று ஆகியவற்றைக் களைந்து கல்வெட்டுகளைத் தெளிவுபெறச் செய்ததுடன் பல்லாற்றானும் உதவிய தஞ்சை, திரு. T. M. மகாலிங்கம் பிள்ளை, திரு. முத்துக்கிருட்டின நாயுடு ஆகிய நண்பர்களையம், திரிபுவனம் பஞ்சாயத்து போர்டு தலைவர் திரு. குருமூர்த்தி சாம்பலாண்டியார் அவர்களையும் மறத்தற் கரிது.

## 1. சிதைந்துள்ள கருவறையின் தென்புறமுள்ள கல்வெட்டு

ஸ்வஸ்தி ஸ்ரீ கொற்சடபன்மர் திரிபுவனசக்கரவர்த்திகள் ஸ்ரீ பராக்ரம பாண்டியதெவற்கு யாண்டு பத்தாவது தநு நாயற்று பூர்வபக்ஷத்து அஷ்டமியும் புதங் கிழமையும் பெற்ற ரெவதிநாள் நகரம் திருபுவன வீரபுரத்து உள்ளவற்கு இவ்வூர்க் காவலுடைய குளமங்கல நாட்டவராம் எங்கள்(கு) இந்நகரத்து இவ்வூர் நடுவிற் திருமுற்றமான...(ஒரு வரியே சிதைந்துள்ளது) இந்தபடி எங்களுக்கு...காருக்கு ஒரு பணமும் பசானத்துக்கு ஒரு பணமும் வரிசலிலெ | கழித்து பெறக்கடவொமாகவும். கள்ளர் மக்களுக்கு தலைக்கல்லியாணத்துக்கு ஓ ... லே பெறக்கடவொமாகவும், மகண்மை பிள்ளைகட்கும் பெண்ணுக்கும் தலைப ... தண்டக்கடவொமல்லவாகவும்... ... த்திதைக்கு ஐந்து



கலமும் 6 பணமும் அரையர்களுக்கு ஐங் ... ஐஞ்ஞாம்பர்க்கும் ... (ஒருவரியே இல்லை) பாதகம் பெறக்கடவொமாகவும் குட(க்கு) நாட்டுக்குச் சிறப்புச் செய்வன நாத்தனுக்கு ... யித்தபடிகளிலே ... பெறும் து ... பெ ... ப ... டைகளிலும் ... டு ... கடவதல்லவாகவும் | இவ்வூர் பற்றில் விளை நிலம் தெலிங்கன் வயல் முள்ளி வயல் மாதாரத்த நிலங்களுக்கு வச்சி .. களஞ்சேரி எதிர்கொள்யாடயாக விளைந்திட்ட நிலங்களும் வள்ளுக நத்தம் கொல்லை மற்றும் வானவாரி விளைந்த நிலங்களில் தாங்களும் இடையரும் எங்கள் | மகமைப் பிள்ளைகள் அடியார் பயிர் செய்யக் கடவதல்லவாகவும். இவ்வூர் கொயில்களையும் பணிமக்களையும் நலிய ... ல்லவாகவும். இவ்வூர் பற்றில் மரங்களை வெட்டச் ... வாகவும். கலக மொத்தாத ... வும். யரமல்ல செ ... ாமாகவும். இப்படி சம்மதித்து கல்லில் வெட் ... ....

இப்படி ஒழிய அடுத்தொறு அன்னியாயம் செய்யக்கடவொ மல்லவாகவும். இப்படி ஒழிய அழிவு செய்தொமாகில் தங் தாய்க்குத்தான் மிணுளன் உ

## 2. ஷெ வடபுறமுள்ள கல்வெட்டு

ஸ்வஸ்தி ஸ்ரீ கொற்சடபன்மர் திரிபுவனச் சக்கரவர்த்தி ஸ்ரீ பராக்ரம பாண்டிய தெவற்கு யாண்டு பத்தாவது மக்கர நாயிற்று பூர்வ பக்ஷத்து சதுர்த்தெசியும் திங்கள் கிழமையும் பெற்ற புணர் பூசத்துநாள் | நான் இவ்வூரில் எங்கள் பெறுவான முறைமைகளுக்கு உடையார் குலசேகர தெவர்க்கு உபகார்யர் முன்பாக இவ்வூர் நடுவிற்த் திருமுற்றத்து(ள்)ள விக்ரம சோழ விண்ணகர் எம்பெருமான் திருக்கா ... ய... | முதுக்கள் பெற்ற படிகளிலெ பெரும்பாடி காவல் களப்பாடி காவல் காத்து தைச் சிறப்பு நன்மைத்தீமைகள் அவர்கள் பெற்ற படிகளிலே மனை ... வமதும் உரிமையிலே

பெற்றும் நிலத்திற்பெறுமது நிலத்திலெ பெறு(ப)வை முள்ளிவயல் மற்றும் ஊரார்க்கு மிந்தவானவராயுள்ள நிலங்களில் பாடிகாவல் பெறுமது மெய்காணுதல் என்னனுத் ... செய்தல் என அகம்படியாராதல் படி ... யு... க்கடவொமல் ... லக்ரகவ ... கை |

## 3. ஷெ மேற்புறமுள்ள கல்வெட்டு

... வற்த இவ்வூர் காவலுடைய செனைப்பெருமாளான குலொத்துங்க சோழ மூவரையர் ... ல் ... திருக்கொயில் திரு முற்றத்திலுள்ளாரை நலிதல் அரங்கவர் வெட்டுதல் செய்யக் கடவொ மல்லாகவும் | தங்கள் ளுடு தந்தபடிபடி இவ்வூர் பூதிஷித்த நாள் முதல் காவற்பெற்றுக்கு முற்பிலாண்டுகள் எங்கள் தெவரை நொக்க ஒரு அன்னியாயம் அடுத்தெச் செய்யாமல் காவற் சொற்றப் படாமல் சந்திராதித்தவல் குறியுள்ள மனைக்குத் தறியிலெ ( ) இவ்வூர் உள்ளூர் நத்த மனை புன்செய் மாவடை தெலிங்கன் ப ... வ ... நொக்கக் கடவொமானமைக்குச் செனைப் பெருமாளான குலொத்துங்க சோழ மூவரையதந் வாசலிலே பெறவுக படுவொமாக |

இப்படி ஒழிய அடுத்தொறுதரே அன்னியாயம் செய்தோமாகில் பாண்டியராயர் மக்களுக்குச் செதப் படுத்தொமாகக் கடவோம்உ.

### விளக்கம்

முதலாவதாக, மேற்கண்ட கல்வெட்டுகளில் காணப்படும் விக்கிரமசோழ விண்ணகரத்தைப்பற்றிக் கூறுவோம்:—

பிற்காலச் சோழருள், சோழநாட்டை மிக்க சிறப்புடன் ஆட்சி செய்த முதற் குலோத்துங்கனின் மகன் விக்கிரமசோழனுவன். இம்மன்னன் கி.பி. 1118-இல் அரசுரிமை ஏற்று, கி. பி. 1136 வரை ஆட்சி செய்துளான்.



இவன் தில்லையில் சிவபெருமானுக்குத் திருப்பணி பல புரிந்ததோடு, தம் பெயரால் திருவீதியும் அமைத்துளானென்பதை வரலாறுகள் கண்டுள்ளன. மற்றும் இம் மன்னன் தன் பெயரால் திருவரங்கத்தில் இரண்டு திருவீதிகள் கட்டிவைத்துள்ளான் என்பதை ஸ்ரீ வைணவ கிரந்தங்களாய 'கோயிலொழுகு' போன்ற நூல்கள் கூறுவதால், இவன் வைணவ சமயத்திலும் மிக்க ஈடுபாடுடையவன் என்று கூறப்பெறும் வரலாற்றுக் குறிப்புகளும் உண்டு. இவற்றைக்கொண்டு ஆராயின், இவன் தந்தை முதற்குலோத்துங்கன் இராசமன்னூர் கோயிலில் தன் பெயரால் 'குலோத்துங்க சோழ விண்ணகரம்' என்னும் திருமால் கோட்டத்தினைத் தோற்றுவித்ததைப் போலவே, இவனும் திரிபுவன வீரபுரத்தை நிறுவி, அதில் தன் பெயரால் 'விக்கிரம சோழ விண்ணகரம்' என்னும் திருமால் கோட்டத்தினை எழுப்பியுள்ளான் என்று தெளிய இடமிருக்கிறது. இக் கருத்து வரலாற்றுப் புதுமையுடன் வலியுறுகின்றது. மற்றும், பிற்காலச் சோழர் வழியில் விக்கிரம சோழனென்பான் ஒருவனே ஆட்சியில் இருந்துளான். எனவே கல்வெட்டில் கூறப்பெறும் விக்கிரம சோழ விண்ணகரம், பன்னிரண்டாம் நூற்றுண்டின் முற்பகுதியில் சோழ நாட்டை ஆட்சி செய்த முதற் குலோத்துங்கனின் மகனுன விக்கிரமசோழனுல் தோற்றுவிக்கப்பட்டதென்று கொள்ளற்குரியதாம்.

இரண்டாவதாக, கல்வெட்டு தோன்றிய காலத்துக்குரிய பாண்டிய மன்னனைப் பற்றிய வரலாற்றினை நோக்குவாம்.

இம் மன்னன், கோச்சடபன்மர் திரிபுவனச் சக்கரவர்த்திகள் பராக்கிரம பாண்டிய தேவரென்று கல்வெட்டில் கூறப்பெறுகிறுன். இவனுடைய பத்தாவது ஆண்டிலேயே கல்வெட்டுச் செய்தியால் அறியப் பெறும் திரிபுவன வீரபுரக் கலகம் நிகழ்ந்திருக்கிறது.

இப் பாண்டிய மன்னனுடைய அரசியல் அதிகாரிகளும் வீரர்களுமே சோணாட்டில் ஊன்றி இருந்ததாக அவர்களுடைய உரிமைகளைக் கூறும் பகுதியால் நன்கு விளங்குகின்றது. எனவே, ஒரு சில ஆண்டுகளாவது இப் பாண்டிய மன்னரின் அதிகாரத்தின்கீழ், சோழ நாட்டின் தென்பகுதி இருந்திருக்கிறது. இவ்வாறு பாண்டிய நாட்டவர் சோழநாட்டெல்லையுள்ளும் ஆட்சி செலுத்திய காலங்கள் பலவற்றை வரலாறுகள் கணித்துளவாயினும், சடையவர்மன் பராக்கிர பாண்டியன் என்பானுக்குச் சோழ நாட்டின் தென்பாகம் அடங்கியிருந்த காலம் புதிதாகவுளது. எனவே, இக்காலத்தையும் பாண்டியனையும் பற்றி ஆய்வுகொள்ள வேண்டியது இன்றியமையாததாகும்.

இதுவரை, வரலாறு கண்டுள்ள பாண்டியருள் விக்கிரம சோழனுடைய ஆட்சிக்குப் பிறகு,பன்னிரண்டாம் நூற்றுண்டின் இறுதியில் வாழ்ந்த பராக்கிரம பாண்டியனென்பான் ஒருவனைப் பற்றிக் கூறப்பெறுகிறது. இவன் காலத்தில் சோழ நாட்டை இரண்டாம் இராசாதிராசன் ஆண்டுள்ளான். இச் சோழ மன்னன் நாட்டைத் திறம்பெற ஆண்டதோடு மேற் குறித்த பாண்டியனேடு மாறுபட்ட அவனுடையதாயத்தினன் குலசேகர பாண்டியனுக்குப் படை உதவியும் புரிந்துள்ளான். இதன் காரணமாகப் பராக்கிரம பாண்டியனுக்கு உதவியாக வந்த சிங்களப் படைகள் பாண்டிய நாட்டிற் செய்த அழிவுகளைச் சோழநாட்டினர் கேள்வியுற்று அஞ்சினதாகவும் வரலாறு கூறுகின்றது. ஆயினும், இச்சோழ மன்னனுடைய ஆட்சியில் பாண்டியர் சோழ நாட்டில் இடம் பெற்றதாகக் கூறுதற்கு இடனில்லை. மற்றும், பன்னிரண்டாம் நூற்றுண்டில் கோயில்களையும் பொதுமக்களையும் எளிமையாக அழிவு செய்கின்ற தாழ்ந்த நிலையில் அரசியல் நடத்திய சோழனே பாண்டியனே இருந்ததாக வரலாறுகள் கூறிற்றில. எனவே, அரசியலதிகாரிகள் தங்கள் மனப்போக்கிற்கு ஏற்ப அழிவு செய்கின்ற அளவுக்கு ஆட்சி செலுத்திய பாண்டிய மன்னனுடைய காலம் சற்றுப் பிற்பட்டதாகவே இருத்தல் வேண்டும்.



இக் கருத்தை மேற்கொண்டு ஆராயின் கீழ்க் காணும் உண்மைகள் புலனுகின்றன. கி. பி. பதினுன்காம் நூற்றுண்டின் முற்பகுதியில், அதாவது, கி. பி. 1315-க்கு மேல் பாண்டிய நாட்டில் முகம்மதிய வீரனுகிய மாலிக்காபூரின் படையெழுச்சி நிகழ்ந்திருக்கிறது. அதன் காரணமாக, பாண்டிய நாட்டின் பெரும்பகுதியில் ஆட்சி குலைந்ததோடு, மற்றைய நாடுகளிலும் குழப்பங்கள் மிகுந்திருந்தன வென்பதை வரலாறுகள் கூறுகின்றன. இவ்வாறு மத வெறியுடன் நாடு பிடிக்கும் முகம்மதிய ராட்சியால் தமிழகமே சீர் கெட்டுக் கிடப்பதைக் கேள்வியுற்ற, விசயநகர வேந்தனுகிய குமார கம்பண்ணவுடையார் பெரும்படையுடன் தமிழகத்தினுட் புகுந்து, பல போர்க்களங்களிலே முகம்மதியரை வென்று, தமிழக வேந்தர் தம் ஆட்சியைச் செம்மை செய்ய முற்பட்டதாகவும் தெரிகிறது.

இதனுல், தமிழகத்தில் நிகழ்ந்த கொடுமைகளை நீக்க, வேற்று நாட்டிலிருந்து வலியுடைய மன்னனெருவன் வரவேண்டிய நிலைமை பதினுன்காம் நூற்றுண்டின் முற்பகுதியில் ஏற்பட்டிருக்கும் உண்மை புலனுகிறது. எனவே, அக் காலத்தில் சோழ பாண்டிய நாடுகளில் அரசர்கள் பலர் வாழ்ந்திருந்தும், செம்மையான அரசியலை மேற்கொள்ள வியலாமல் இருந்திருக்கின்றனர். இத்தகைய அரசியற்காலத்திற்ருன் அதிகாரிகள் தலைக்குத்தலை நாட்டாண்மை பூண்ட நிலைமையும் ஏற்பட்டிருக்கக்கூடும். எனவே, திரிபுவன வீரபுரக் கலகம் போன்ற நிகழ்ச்சிகள் நிகழ, முகம்மதியர் படையெடுப்பால் ஒற்றுமையும் அரசியலும் செம்மைபெருது

குழப்பங்கள் மிகுந்திருந்த மேற்குறித்த காலமே தமிழக வரலாற்றில் இடம் தருகிறது.

எனவே, இத்தகைய காலத்தில் வாழ்ந்தவனுகக் குறிப்பளவில் பாண்டியர் வரலாற்றுள் கூறப்படுபவனும், கி.பி. 1315 முதல், 1347 வரை பாண்டிய நாட்டின் பகுதியை ஆட்சி செய்தவனுமான சடையவர்மன் பராக்கிரம பாண்டியனே கல்வெட்டிற் கூறப்பெறும் பாண்டியனென்று கொள்ள இடனுளது. இவன் சோழ நாட்டின் தென் பகுதியோடு சேர்ந்த பாண்டிய நாட்டின் பகுதியை ஆண்டவனுதல் வேண்டும். இக் கருத்தை மேற் கொள்ளின், விக்கிரம சோழ விண்ணகரக் கலகமும் கல்வெட்டும் எழுந்த காலம் கி. பி. 1325 ஆகும்

மூன்ருவதாக, திரிபுவன வீரபுரத்தில் உண்டான கலகத்தினைப் பற்றியும் அதற்குரிய அதிகாரிகளைப் பற்றியும் ஆராய்வாம்.

சடையவர்மன் பராக்கிரம பாண்டியனுடைய ஆட்சியிலே, திரிபுவன வீரபுரத்தின் கண்காணிப்பை மேற்கொண்டவராகக் 'கருதப்படும் உடையார்' குலசேகர தேவர்க்குரிய உபகாரியர் முன்பாக, தங்கள் 'பெறுவான' முறைமைகளையும் காவலையும் அவரவர் முன்னர்ப் பெற்றிருந்தபடியே மீண்டும் உரிமையுடன் பெறுவதென்னும் கருத்து கல்வெட்டிற் காணப்படுவதால், திரிபுவன வீரபுரம் பாண்டியராட்சியில் இருந்ததென்பது புலனுகிறது. எனவே, திரிபுவன வீரபுரத்தில் களப்பாடி காவல், பெரும்பாடிக் காவல் போன்ற காவலுரிமைகளைப் பெற்றுவந்த பாண்டியராட்சிக் குரிய குளமங்கல நாட்டவராகிய வீரர்கள் தங்களைப் பொதுமக்கள் மதிப்பிற்குரிய இலச்சினை போன்றதும், சிறு காணிக்கை போன்றதுமாகிய பொருளை 'மகமை' என்னும் பெயரால் பெற்று வந்திருக்கிருர்கள். இந் நிலையில், திரிபுவன வீரபுரத்தில் வாழ்ந்த மக்கள்



புதியவரின் அதிகாரத்தை மதிக்கும் மகமையைக் கொடுக்க ஒருப்படவில்லை. இச் செயலில் ஸ்ரீவைணவர்கள் பெரும்பாலும் கலந்துகொண் டிருந்திருக்கின்றனர். அதன் காரணமாகவே கலகம் மூண்டுள்ளது. கலகக்காரர்களாகிய காவலதிகாரிகள் குடிமக்களையும், வைணவர்களையும், அவர்கள் கோயிலாகிய விக்கிரம சோழ விண்ணகரத்தையும் அழிவு செய்து விட்டனரென்பது கல்வெட்டுச் செய்தியால் நன்கு உணரப் படுகிறது.

இவ்வாறு கலகம் விளைவித்த அதிகாரிகள் பராக்கிரம பாண்டியனுக் குரியவரென்பதை, அவர்கள் கூறியதாகக் கூறப்பெறும் கல்வெட்டுப் பகுதியால் நன்கறியலாம். அவர்கள் தங்கள் முறைமைகளைப் பெறுங்கால் 'எங்கள் பெறுவான முறைமைகளுக்கு உடையார் குலசேகர தேவர்க்கு உபகார்யர் முன்பாக' என்றும், 'எங்கள் தேவரை நோக்க ஒரு அன்னியாயமும் அடுத்துச் செய்யாமல் காவல் கொள்வோம்' என்றும், 'அடுத்தொரு அன்னியாயம் செய்தோமாகில் பாண்டியராயர் மக்களுக்குச் சேதப்படுத்தோமாகக் கடவோம்' என்றும் கூறியுள்ளார்.

சோழ நாட்டில் நிகழ்ந்த நிகழ்ச்சியில் பாண்டியராய மக்களுக்குச் சேதப்படுத்திய குற்றமாகத் தமது வாக்குறுதிக்கு எடுத்துக் காட்டியுள்ளவர்கள் பாண்டியனையும் பாண்டிய நாட்டவரையும் பெரிதும் மதிக்கின்ருர்கள் என்பது புலனுகின்றது. இவ்வாறு உரிமை பேசச் சோழ நாட்டவர்க்கு இடமின்மையால், கலகக்காரர்களாய ஊர்க்காவல், பாடிகாவல் கொண்ட வீரர்களும் அதிகாரிகளும், பாண்டியனுடைய படைவீரர்களும் அதிகாரிகளும் என்பது தெளிவு. இவர்கள், சேனைப் பெருமாளான குலோத்துங்க சோழ மூவரையர் வாசலில் மகமைகளையும் முறைமைகளையும் பெறுவோமென்று கூறியுள்ளனர். இம் மூவரையர்,

சோழராட்சியில் சிறந்த படைத்தலைவராக இருந்தவ ரென்பதை அவருக்குரிய சிறப்புப் பெயரால் நன்கறிய லாம். எனவேதான், தங்கள் உரிமைகளையே குறிப் பாகக் கொண்ட கலகக்காரர்கள், சோழ நாட்டு மக்க ளின் அன்புக்குரியவரும், அப் பகுதிக்குத் தலைவருமா யிருந்த அவருக்கு முன்னர் உரிமைகளைப் பெறுகின்ற வழியினைத் தங்கள் நலன் கருதி மேற்கொண்டதாகத் தெரிகிறது.

இக் கட்டுரையில், முதற் குலோத்துங்கனின் மக னை விக்கிரம சோழன் தன் பெயரால் விண்ணகர மொன்று எடுத்துள்ளனனென்பதும், கி பி. பதினான் காம் நூற்றாண்டின் முற்பகுதியில் சோழநாட்டின் தென் பகுதி சடையவர்மன் பராக்கிரம பாண்டிய னென்பான் அதிகாரத்தின் கீழ் இருந்திருக்கிற தென்ப தும், அவன் படை வீரர்களும் அதிகாரிகளும் பிற நாட்டவராகவும் அழிவு செய்வதற்கு அஞ்சாதவராக வும் இருந்திருக்கிறார்க ளென்பதும், கல்வெட்டிற் கூறப்பெறும் சேனைப் பெருமாளான குலோத்துங்க சோழ மூவரையர் சோழவதிகாரியே என்பதும், திரி புவன வீரபுரத்திலுள்ள விக்கிரம சோழ விண்ண கரக் கல்வெட்டுகள் கி. பி. 1325-ஆம் ஆண்டில் எழுந் தவை என்பதும் போதரும்.

இதுவரையில் வெளி வராததும், புதியதுமான மேற்குறித்த கல்வெட்டுகளைக் கொண்டு, அடிச்சுவட் டைக் கண்டு ஆளை அறிகின்ற பான்மையில் முயன்று விளக்கம் கூறியுள்ளேன். இக்கருத்து வரலாற் றுக்குரிய இயல்பு பெறினும் பெறலாம். ஆயினும் இப் புதிய கல்வெட்டுகளால் சோழருடைய வரலாற்றிலும் பாண்டியருடைய வரலாற்றிலும் புதிய செய்திகள் இணையுறுகின்றன வென்பது மட்டும் ஒருதலை. எனவே, அறிஞர் இதனை ஆய்ந்து மேற்கொள்ள வேண்டுகிறேன்.

## 8. கண் கொடுத்த வனிதம்

தமிழகத்தில் சமயத்துறையில் சிற்பம், ஓவியம், இசை, கூத்து ஆகிய நுண் கலைகள் வளர்க்கப்பட்டு வந்துள்ளன என்பதை, வரலாறுகளும் கால வெள்ளத் துக்கும் சமயவெறிச் சூறாவளிக்கும் இலக்கானவை போக எஞ்சியுள்ள கோயில்களும் அவற்றிலுள்ள கல் வெட்டுக்களும் நன்குணர்த்துகின்றன. எஞ்சிய கோயில்கள் இடைக் காலத்தில் சீர்திருத்தப் பெற்றும் காலப்போக்கில் காப்பவரின்றித் தன்னிலையிழந்து திரிந்தும் அழிந்தும் நாடெங்கும் கிடைக்கின்றன. இவ்வாறு வரலாறு கொண்டு வாழ்விழந்து நிலை குலைந்து வருகின்ற கோயில்களுள் ஒன்றே கண் கொடுத்த வனிதம் என்னும் சிற்றூரில் யான் ஆய்ந்து கண்ட நயனவரதேசுவரர் என்னும் பெயருடைய சிவன் கோயிலாகும். இன்று இக் கோயில் இடிந்தும் சரிந்தும் புதைந்தும் புதரடைந்தும் கிடக்கின்றது.

தஞ்சையிலிருந்து திருவாரூர் செல்லும் புகைவண் டிப் பாதையில், திருமதிக் குன்னம் என்னும் பெயரு டைய புகைவண்டி நிலையத்துக்குத் தெற்கே மூன்று கல் தொலைவில், பாண்டவாய் ஆற்றின் வடகரையில் இச்சிற்றூர் உள்ளது.

கோயில், ஊரின் நடுவே கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. பெரிய அளவில் எழுப்பப்பட்டுள இச் சிவன் கோயிலுக்கு இரண்டு திருவாயில்கள் அமைந்துள்ளன. முதற் கோபுரமாகிய தோரணத் திருவாயில் ஐந்து மாடங்களோடு திகழ எழுப்பப்பட் டிருப்பினும், பல்லாண்டுகளாகக் காப்பவரின்றி நின்றமையான் புதரடைந்து சிதைந்து நிற்கின்றது. இதன் உச்சித் தளத்தில் பறவைகளின் வழியே வித்திடப்பட்ட ஆலொன்று தோன்றிப் பெருமரமாகி வானோக்கி வளர்ந்து நிற்கின்றது. அடுத்துள்ள திருமாளிகைத் திருவாயில் மூன்றடுக்குள்ள நிலையமாகத் திகழ்ந்திருக்க வேண்டும். இன்று அவ்வடுக்குகள் சிதைந்தழியப் பல வெடிப்புக்களும் அவற்றில் பல்வகைச் செடி கொடிகளும் மல்கிப் பசுமையோடு காட்சி தர அதில் பெரிய பாம்புகள் மாட்சியுடன் நிலைத்து வாழ்கின்றன.

இத் திருக்கோயிலுக்கு முன்னர்த் திருக்குளமும் அமைக்கப்பட்டுள்ளது. கோயிலுக்கு இரண்டு பெரிய திருச்சுற்றுக்கள் உயர்ந்த மதில்களுடன் இருந்ததற்குரிய சுவடுகள் தெளிவாகத் தெரிகின்றன. மதிற்சுவரின் மற்றைய பகுதிகள் பல இல்லங்களில் இரண்டறக் கலந்து விட்டன போலும்! இரண்டாவது வாயிலைச் சார்ந்து மகாமண்டபம் உள்ளது. கருங்கற் றிருப்பணியாகவுள்ள இப் பகுதியும் பழுதடைந்து புதரடைந்து கிடக்கின்றது. அடுத்துள்ளது முகமண்டபத்தோடு கூடிய கருவறையாகும். பிற்காலச் சோழர் எழுப்பிய கற்றளிகளின் சிற்பப் பாங்குள்ள கருவறையின் அடிப்படை குலையவில்லையே யன்றிச் சுவரின் மேற்பகுதியாகிய பஞ்சரம், கபோத பட்டிகா, துலாநிலை, கர்ணகூடம் ஆகிய சிற்ப வேலைப்பாடுடைய பகுதிகள் கட்டுவிட்டுப் பிதுக்கமடைந்து வீழ்ந்து வருகின்றன. கருவறை விமானமும் சிதைவுற்றுப் புதரடைந்து வளரும் சில மரங்களுக்கு நிலைக்களனாக உள்ளது. இச்சிவன்



கோயிலில் இப்பொழுது காண்பதற்குரிய பகுதிகளே மேலே கூறப்பட்டவைகளாகும். இவையன்றிக் கோயிலின் அங்கங்களாக விளங்கிய நூற்றுக்கால் மண்டபம், நிருத்த மண்டபம் போன்ற பகுதிகள் இடிந்து புதைந்து மண் மேடாகவே காட்சியளிக்கின்றன.

தோரணத் திருவாயிலின் தென்புறப் பகுதியில் கோயிலின் எல்லைக்கு உட்பட்டதாக மேற்கு நோக்கிய நிலையில் ஒரு குறுகிய கோயில் பழுதடைந்து நிற்கிறது. இதன் கருவறைப் பகுதியாகவுள்ள இடத்தில் ஐந்தடி உயர அளவில் கற்றூண்போல இலிங்கம் மட்டும் அமைக்கப்பட்டுள்ளது. இவ்விலிங்கம் எதன் பொருட்டு உண்டானது? பெயர் என்ன? என்பதொன்றும் தெரிந்திலது.

யான் இக்கோயிலை முதன் முறையாக, 14-11-59-இல் சென்று கண்டேன். இவ்வளவு பழமையான கோயிலில் கல்வெட்டுகள் இல்லாமல் இருப்பதற்கில்லை என்ற நோக்குடன் ஆராய்ந்தேன். முதலில் ஒன்றும் புலனாகவில்லை. அதிலிருந்து ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் சென்று முயன்றேன். மூன்றாவது முறை யான் சென்று கோயிலின் பல பகுதிகளைத் துருவிக்கொண்டிருக்கும் போது, கோயிலின் வடக்குத் திருவீதியில் வாழ்பவரும் இளைஞருமாகிய திரு. சு. நடராசன் என்பவர் எனக்கு உதவ முன்வந்து என் விருப்பப்படி குறிப்பிட்ட இடங்களை அகழ்ந்து பார்க்க உதவினார்கள். சுருங்கக் கூறின் மகா மண்டபத்தின் இருபுறமும் அழிந்து மேடிட்டுக் கிடந்த பகுதிகளை இரண்டடி முதல் நான்கடி வரை அகழ்ந்தபோது அடிப்படை வரிசைகள் புலப்பட்டன. அவற்றில் மிகத் தெளிவான கல்வெட்டுகள் இருக்கக் கண்டேன் [1]. இவ்வாறு யான்

---

1. இச்செய்தி 8—5—60 நாளிதழ்களில் வெளிவந்துள்ளது.

கண்டு பிடித்த கல்வெட்டுகளுள் வடபுறத்தில் கிடைத்த கல்வெட்டு பாண்டிய மன்னன், திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலசேகர தேவருடையதாகும். எழுத்துக்கள் தெளிவாகவும் பழுதடையாமலும் இருக்கின்றன. முப்பத்திரண்டடி நீளமுள்ள வரிகள் பதின்மூன்றுடைய இப்பெரிய கல்வெட்டைச் சுவடு மாறாமல் படியெடுத்துள்ளேன். அடுத்துத் தென்புறத்தில் அகழ்ந்து கண்டுபிடித்த கல்வெட்டு மூன்றாம் குலோத்துங்கனுடையதாகும். இக் கல்வெட்டு இவனது ஆட்சியாண்டு ஏழில், அதாவது கி.பி. 1185-இல் எழுந்ததாகும். இக்கல்வெட்டும் மிகத்தெளிவாக உள்ளது. ஒவ்வொரு வரியும் இருபத்துநான்கடி நீளமுள்ளதாகப் பத்துவரிகளில் இக்கல்வெட்டு அமைந்துள்ளது. இரண்டு கல்வெட்டுகளிலும் பல துண்டு நிலங்களை ஆங்காங்கு விலைக்குப் பெற்று, கோயிலுக்கு இறையிலி தேவதானமாக அளிக்கப்பெற்ற செய்தியே கூறப்பட்டுள்ளது. ஆயினும், பெற்ற நிலங்களுக்குரியாரின் பெயர்களும். பெற்றவர்களின் பெயர்களும் நிலங்களுக்குரிய எல்லைப் பகுதிகளின் பெயர்களும் வரலாற்றுராய்ச்சிக் குரியனவாக அமைந்துள்ளன.

இக் கோயிலின் கருவறைப் பகுதியிலிருந்து பல திருமேனிகளும் படிமங்களும் அண்மையில் கிடைக்கப் பெற்று அவை ஊர்ப் பஞ்சாயத்தாரின் க்ண்காணிப்பிலும் பரம்பரை அர்ச்சகரது பொறுப்பிலும் இருக்கின்றன. அவ்வுலோகச் சிலைகளுள் நான்கடி உயரமுள்ள ஆடவல்லான், மூன்றரை அடி உயரமுள்ள பிச்சதேவர், சோமாசுககந்தர், உமாதேவி ஆகிய திருவுருவங்களும் சிறுத்தொண்டர், திருவெண்காட்டு நங்கை, சீராளதேவர், சந்தனத்தார் ஆகியோரின் அழகிய படிமங்களும் சிற்ப நுட்பம் பொருந்தியவையாம். அழிந்து கிடக்கும் பகுதியி லிருந்து, தமது கழுத்தை அரிவாளால் அரியத் தொடங்கும் பாங்கில் அரிவாட்டாய

கண் கொடுத்த வனிதம்



சிறுத்தொண்டர், திருவெண்காட்டு நங்கை
சீராளதேவர், சந்தனத்தார்
படிமங்கள்

கண் கொடுத்த வனிதம்



பிச்சதேவர்



ஆடவல்லான்

(திருமேனிகள்)



நாயனர் திருவுருவமொன்று புடைப்புச் சிற்பமாகக் கிடைத்துள்ளது. இச் சிற்பம் தற்காலப் பாங்குடைய தாகத் தெரிகிறது.

உலோகச் சிலைகளுள் பிச்சதேவரின் திருமேனி உச்சநிலையில் அழகு பெற்று விளங்குகின்றது. பிறப்பு இறப்பு இல்லாத சிவபெருமானின் அருள் தோற்றத் தினைக் கற்பனைக் கண்ணுல் சிற்பிகள் கண்டு, அவற் றைப் பல்வேறுபட்ட மூர்த்திகரமாக வெளிப்படுத்தி யுள்ளனர். அவற்றுள் தாருகாவனத்திருந்த தவத்தோ ரின் மனைவியர் கொண்ட முனைப்பை (கர்வத்தை) அடக்கச் சிவபெருமான் பிச்சதேவர் உருவில் வந்தார் என்றும் அவர் தம் திருமேனியழகில் மயங்கிய அம் மகளிர் நிறையழிந்தனர் என்றும் புராணக்கதை கூறும். அக் கதைக்கும் கற்பனைக்கும் வடிவு கொடுத் தான் ஒரு சிற்பி. சிற்பத் திறனுல் உருப்பெற்ற பிச்ச தேவர் திருமேனியின் ஒவ்வொரு பகுதியும் காட்சிக்கு விருந்தாகி நம்முடைய கருத்தை ஈர்க்கின்றது. பிச்ச தேவர் திருமேனியின் இலக்கணத்தை,

"அடியில் தொடுத்த பாதுகையும்
அசைந்த நடையும் இசைமிடறும்
வடிவில் சிறப்ப நடந்தருளி
முழை ஏந்தி மருங்கணைந்த
தொடியில் பொலிதோள் முனிமகளிர்
சுரமங் கையுரை மயல்பூட்டி
படியிட்டு எழுதாப் பேரழகால்
பலிதேர் பகவன் திருவுருவம்"

என்னும் பழம்பாடல் விளக்குகின்றது. மற்றும் அப் பர் பெருமான் தமது திருப்பதிகத்தினுள் "விரித்தபல் கதிர்கொள் சூலம் வெடிபடு தமருகங்கை தரித்ததோர் கோல கால பயிரவனுக" என்றும் பிச்சதேவரின் வடிவை விளக்கியுள்ளார். மற்றும் அவரே,

**அருவ ராததோர் வெண்டலை யேந்திவந்**
**திருவ ராயிடு வார்கடை தேடுவார்**
**தெருவெ லாம்உழல் வார்செம்பொன் பள்ளியார்**
**ஒருவர் தாம்பல பேருளர் காண்மினே!**

என்றும் நமக்குப் பிச்சதேவரின் திருமேனிக்கு விளக்கங் கூறி அறிமுகஞ்செய்கிறார். அத்தகைய எழிலோடு கூடியதும் கண் கொடுத்த வனிதம் சிவன் கோயிலில் கிடைத்துள்ளதுமான பிச்சதேவரின் திருமேனி ஒவ்வொருவரும் நேரில் காணத்தகும் சிறப்புடையதாகும். பிச்சதேவருடன் கிடைத்துள்ள ஆடவல்லான் திருமேனியின் அழகைப் பற்றிச் சிறிது கூறுதல் நன்றாம். இறைவனின் ஆற்றலைப் பல்வேறு தோற்றங்களில் அமைத்த சிற்பிகள், சொல்லால் விளக்க முடியாத ஒரு சிறந்த தத்துவத்தையும் உருவாக்கினர். ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லானை ஆடவல்ல பெருமானாகக் கற்பனையில் உருவாக்கி வெற்றி கண்டவர்கள் நம் தமிழகச் சிற்பியரே யாவர். உலோகத்தில் வார்க்கப்பட்டிருக்கும் சிற்பத்தில் எத்தனையோ நுண்மைகளைச் சிற்பி அமைத்திருக்கிறான். ஆனந்தத்தாண்டவம் என்று கூறப்பெறும் இயல்புடையதாக இத்திருமேனி விளங்குகின்றது. சாத்திரம், சமயம், கலை எல்லாம் ஒன்றாய் இணைந்து தத்துவத் தோற்றமாய், குனித்த புருவமும் குமிண் சிரிப்பும் விரித்த சடையும் பவள மேனியும் எடுத்த பொற்பாதமும் கொண்டு இலங்கும் ஆட வல்லானின் அஞ்சலென்னும் கரத்திலே ஒரு குறிப்பையும் அடக்கி வைத்துள்ளான் தமிழகச் சிற்பி. திருவாசி உட்பட நான்கடி உயரமுள்ள இவ்வானந்தத் தாண்டவத் திருமேனியையும் பிச்சதேவர் திருமேனியையும் நேரிற் காண்போர் வியவாமலிரார்.

இத்தகையதாகப் பழமையும் கலை நுட்பமும் சிலைகளும் சிறக்க விளங்கி நின்ற இச்சிவன் கோயில் இன்று தன்னிலை கெட்டுத் தாழ்ந்து கிடக்கின்றது.



கல்வெட்டிலுள்ள செய்திப்படி இக் கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவன், ''சயதுங்கச் சதுர்வேதி மங்கலத்துப் பிடாகை, ஆலத்தாங்குடியில் எழுந்தருளிவித்த புகழாபரணீசுவர முடையார்'' என்று தெரிகின்றது. ஆயினும் இப்பொழுது இப்பகுதி ''கண் கொடுத்த வனிதம்'' என்றும் இறைவனின் திருப்பெயர் நயனவரதேசுவரர் என்றும் கூறப் பெறுகின்றது.

இங்குப் புதைந்து புதரடைந்து கிடந்த பகுதிகளை மிக முயன்று நான்கடி அளவுவரை நிலத்தை அகழ்ந்து யான் புதிதாகக் கண்டு படியெடுத்துள்ள கல்வெட்டுகள் மூன்றாகும். கல்வெட்டுகள் மிகப் பெரிய அளவுடையனவாக இருப்பதால் அவை பற்றிய ஆய்வுரையுடன் கல்வெட்டுகள் அனைத்தையும் முழு வடிவில் அடுத்து வெளியிட விழைந்து இக்கட்டுரையில் இன்றியமையாத பகுதிகளிற் சிலவற்றைமட்டும் சேர்த்துள்ளேன் :—

**மகாமண்டபத்தின் தென்புறம் அகழ்ந்து கண்ட கல்வெட்டின் முதற் பகுதி :—**

## கல்வெட்டு—1

*வரி—1* ஸ்வஸ்திஸ்ரீ புயல்வாய்ப்பவளம் பெருகபொய்யாத நான்மறையின் செயல்வாய்ப்ப திருமகளுஞ் செயமகளுஞ் சிறந்துவாழ வெண்மதி பொற்குடை விளங்க வேல்வேந்தரடி பணிய மண்மடந்தை மனங்களிப்ப மனுநீதி தழைத்தோங்கச் சக்கரமுஞ் செங்கோலுந் திக்கனைத்துஞ் செல நடாத்திக் கற்பகால(ம்) புவிகாப்பப் பொற்புமைந்த முடிபுனைந்து செம்பொன் வீர ஸிம்ஹாஸனத்துப் புவனமுழுதுடையாளொடும் வீற்றிருந்தருளிய கோப்பரகேசரி பற்மரான.

2 திரிபுவனச் சக்கரவர்த்......ஸ்ரீ...ரா...ஜந்திர தேவர்க்கு யாண்டு ஏழாவது மேஷ நாயிற்று அபரபக்ஷத்து துவாதசியும் வெள்ளிக்கிழமையும் பெற்ற சதையத்திநுள் அருள்மொழி தேவ வளநாட்டு மங்கல நாட்டு பிர்ம்மதேயம் ஸ்ரீஜயதுங்கச்சதுர்வேதிமங்கலபுரப்பிடாகை ஆலந்தாங்குடியில்நல்லூருடையான் இராமன் ஸ்ரீ கயிலாசமுடையான் எழுந்தருளுவித்த உடையார் புகழாபரணீஸ்வரமுடையாருக்கு இக் கோயிலில் ஆதி சண்டேசுரதேவர் திருநாமத்தில் இந் நல்லூருடையான்.

3. இராமன் ஸ்ரீ கயிலாஸமுடையான் பலர்பக்கலும் விலைகொண்டு விட்ட நிலத்துக்கு பிரமாணப்படி பார்த்துவாசி திருமாலிருஞ் சோலை திருப்புல்லாணி பட்டனும் இவன் தம்பி திருநாடுடையான்பட்ட............பக்கற் கொண்டு வுட்ட குழி ஐம்பதும்.................

பிற்காலச் சோழர் சரித்திரம் பகுதி II பக்கம் 110, 171 ஆகியவற்றில் திரு. பண்டாரத்தாரவர்கள் கூறியுள்ள ஆராய்ச்சியுரையைக் கொண்டும், தென்னிந்தியக்கல்வெட்டுத்தொகுதிஐந்து,கல்வெட்டுஎண்-162, 1359 ஆகியவற்றிலுள்ள மெய்க்கீர்த்திகளைக் கொண்டும் இக் கல்வெட்டு மூன்றும் குலோத்துங்கனுடையதென்று தெரிகிறது. கல்வெட்டின் எஞ்சிய எட்டு வரிகளில் புகழாபரணீஸ்வர முடையார்க்கு இறையிலி தேவதானமாக நிலப்பகுதிகள் பலரிடம் விலைக்கு வாங்கி விடப்பட்ட செய்திகள் கூறப்பட்டுள்ளன.

**மகாமண்டபத்தின் வடபுறம் அகழ்ந்து கண்ட கல்வெட்டின் முதற் பகுதி :—**



## கல்வெட்டு—2

வரி—1 ஸ்வஸ்தி ஸ்ரீ அருமொழிதேவ வளநாட்டு மங்கல நாட்டு பிர்ம்மதேய மாங்யதரு............ ஜயதுங்க சருப்பேதி மங்கலத்துப் பிடாகை ஆலத்தாங்குடியில் உடையார்.................. ழாபரணீஸ்வரமுடையார் கோயில் ஆதி சண்டேஸ்வர தேவர் கன்மிகளொம் இந்நாயனூர் கோயில் நாச்சியார் தேவத தம்பிராட்டியார்க்குப் பலர் பக்கலும் சண்டேஸ்வரப் பெருவிலை கொண்டும் பட.......ர்களா.........ம் தருநாம........',ணியரன் கொமாற பன்மர் திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீகுலசேகர தேவருக்கு யாண்டு ந.........இவ்வூர் பாரத்துவாசி திருமாணித்தன்.

2 நாராயண பட்டனும் கெசவன் பெரும்புறக் கடல் பட்டனும்.........பக்கல் விலை கொண்ட இவ்வூர் பிடாகை ஆலத்தாங்குடி பாண்டவாய ஆற்றுக்கு வடகரைப்பட்ட கொல்லைகளில் நெல்லைக் கொல்லை என்று பேர் கூவப்பட்ட நிலத்துக்குக் கீழ்பாற் கொல்லை பூதமங்கல வனபிரமதேசத்துக்கு மேற்கு தென்பாற் கெல்லை கொளகன்...இந்நிலத்துக்கு வடக்கு மேல்பாற் கெல்லை.........பட்டன் நிலத்துக்கு கிழக்கு வடபாற்கெல்லை கொளகின்ரூர் நிலத்துக்கு தெற்கு இந்நான்கெல்லைக்கு

(இடையே 3-12 வரை பத்து வரிகள் உள்ளன)

13 வடக்கடைய ரு—ம் ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர்க்கு......விசையாலையபுரத்து பிடவாரி புகுந்த பாணலூர் கிழவன் இராமாண்டானை மருதாண்டான் தந்த நிலனூர் பழநிலம் உ

# 9. திருப்பனையூர்க் கல்வெட்டுகள்

பொழில் வளம்கொண்டு எழில்மிகு சோழ நாட்டில் மழை வளஞ் சுருங்கினும் மாறாது வளம்பெருக்கும் காவிரியாற்றின் இருமருங்கும் எழுந்துள்ள சிவத்தலங்கள் மிகப்பலவாம். இவற்றுள் தென்கரையில் அமைந்துள்ள தலங்கள் நூற்று இருபத்து ஏழென்பர். இத்தொகையுள் எழுபத்து மூன்றாவதாகக் கூறப்பெறும் சிவத்தலமே திருப்பனையூராகும்.

சிற்றூராகக் காட்சிதரும் இப்பதி, நன்னிலம், விசலூர் ஆகிய இரண்டு புகைவண்டி நிலையங்கட்கும் இடையே கிழக்குளதாய் ஒரு கல் தொலைவில் அமைந்துள்ளது. பாடல் பெற்றனவும் புகழ்பெற்றனவுமான திருவிற்குடி, நன்னிலத்துப் பெருங்கோயில், திருப்புகலூர், அம்பர் மாகாளம், திருப்பயற்றங்குடி, திருச்செங்காட்டாங்குடி, திருமருகல் ஆகிய சிவத்தலங்கள் இரண்டு மூன்று கல்லளவில் இத்தலத்தை நாற்புறமும் சூழ்ந்தனவாய் அமைந்துள்ளன. கோயில் முழுவதும் சீர் செய்யப்பட்டு, 21-8-59-இல் குடமுழுக்கு செய்யப் பெற்றுள்ளது.

இப்பதியில் இடங்கொண்டருளும் இறைவனை "அரவச்சடைமேல் மதிமத்தம்" என்று தொடங்கும் பதிகத்தால் சம்பந்தரும் "மாடகாளிகை கோபுரத்



தோடு" என்று தொடங்கும் பதிகத்தால் சுந்தரரும் போற்றியுள்ளனர்.

இவ்வூரினை, "குலோத்துங்க சோழ வளநாட்டுப் பனையூர் நாட்டுப் பனையூர்" என்றும், "இராசேந்திர சோழப் பனையூர் நாட்டுப் பனையூர்" என்றும், 'பனையூர் நாட்டுப் பிர்ம்மதேயம் திருப்பனையூர்', என்றும், கி. பி. 11, 12-ஆம் நூற்றாண்டுகளில் இக்கோயிலில் எழுந்துள்ள கல்வெட்டுகள் கூறுகின்றன.

பிற்காலச் சோழரின் சிற்பக்கலைச் சுவட்டுடன் கற்றளியாக அமைக்கப்பட்டுள்ள கோயில் இன்றுள்ள திருப்பனையூரின் கிழக்கு எல்லையாக அமைந்துள்ளது. கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவன் 'சௌந்தரேஸ்வரர்' என்று இன்று அழைக்கப்பெறினும், சுந்தரரால் 'அழகியர்' என்றே பத்துப்பாடல்களிலும் சுட்டப் பெறுகிறார். இம்முறையிலேயே கல்வெட்டுகளிலும் 'அழகிய நாயனார்', 'அழகிய தேவர்' என்றே குறிக்கப் பெறுகிறார். எனவே, கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டு முதலாகப் பன்னிரண்டாம் நூற்றாண்டளவிலும், அழகியர், (அழகர்) என்று அழகாக அழைக்கப்பட்டவர், பின்னர் வடமொழி பெயர்ப்பாகச் சௌந்தரேஸ்வரர் என்று அழைக்கப்பட்டிருக்கிறார். இத்தகைய முயற்சி தமிழகத்தில் மிகுதியாக ஏற்பட்ட காலமும் இக்காலமாகவே இருக்கின்றது.

திருப்பனையூர், *"சத்திரிய சிகாமணி வளநாட்டுப் பனையூர் நாடு" என்று பிறவூர்க் கல்வெட்டுகளில் காணக் கிடைக்கின்றது.

---

*(S. I. I. Vol. III Part I) சத்திரிய சிகாமணி வளநாடென்பது, தஞ்சை மாவட்டத்தில் அரிசிலாற்றுக்கும் குடமுருட்டியாற்றுக்கும் இடைப்பட்ட நிலப்பரப்பாகும். இதனுள், அளநாடு, இங்கண்நாடு, மருகல்நாடு, பனையூர்நாடு, தேவூர்நாடு போன்ற பதினொரு நாடுகள் அடங்கியுள்ளன.

இக் கோயிலில் யான் கண்ட தமிழ்க் கல்வெட்டுகள் பதினுன்காகும். அவற்றுள், கருவறையின் தென்புறத்திலுள்ள மிகச் சிதைவுடன் கூடிய இரண்டு கல்வெட்டுகளுடன், முகமண்டபத்தின் தென்புறச் சுவரில் சிதைந்துள்ள கல்வெட்டும் நீங்கலாக ஏனையவற்றைப் படியெடுக்க முடிந்தது. அண்மையில் நிகழ்ந்த குடமுழுக்கின்போது, கோபுரம் விமானம் ஆகியவற்றிற்குப் பயன்படுத்தப்பட்ட வண்ணங்களில் எஞ்சியவற்றை ஒன்ருகக் குழப்பி, கருங்கற் சுவர் முழுவதும் பூசப்பட்டுள்ளமையால், கல்வெட்டுகளைக் காண்பதற்கே மிக முயற்சி செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

கருவறையின் தென்புறமாகவுள்ள சிற்பமாடமொன்றில் பராசர முனிவரின் திருவுருவம் அமைக்கப்பட்டுள்ளது. இதனைக் கொண்டு, இத்தலம் பராசர முனிவரால் பூசிக்கப்பட்டது என்ற கருத்தும் கூறப்படுகிறது. செம்மையாகவும், பெரிய அளவிலும் அமைந்துள்ள இக்கோயிலின் திருமுற்றத்துள் இரண்டு பனைமரங்கள் இணையாக வளர்ந்துள்ளன. அரசியல் குழப்பத்தால் அரண்மனையிலிருந்து கருப்பத்துடன் தப்பியோடிய சோழவரசி, இத்தலத்தில் நான்மறையாளரின் பாதுகாப்பில் தங்கியிருந்தபோது இப்பனையடியில் ஆண்மகவொன்றினைப் பொறையுயிர்த்தாளென்றும், அப்பிள்ளை இக் கோயிலிலேயே வளர்ந்த பின்னர்க் கரிகாலன் என்ற பெயருடன் அரியணை ஏறியதாகவும் கதை கூறப்பெறுகின்றது. கதையாகக் கிடைக்கும் இச்செய்தி, ஆதித்த கரிகாலனின் வரலாற்றினை அறிதற்குரியதாக அமைந்துள்ளமை ஆராயத் தக்கது.

இக் கோயிலில் இராசாதிராசன் கல்வெட்டுகள் இரண்டும், திரிபுவனச் சக்கரவர்த்திகள் சுந்தர பாண்டிய தேவர் கல்வெட்டு ஒன்றும், கோமாறபன்மர்



திரிபுவனச் சக்கரவர்த்திகள் பராக்கிரம பாண்டிய தேவர் கல்வெட்டு ஒன்றும், குலோத்துங்கன் காலத்தில் எழுந்த கல்வெட்டுகள் எட்டும், ஊர் மக்களால் 'இசைவுத்தீட்டு' செய்யப்பட்ட கல் வெட்டுகள் இரண்டும் உள்ளன.

எல்லாக் கல்வெட்டுகளும் அழகிய நாயனுர்க்குரிய பலவகை நிபந்தங்கட்கும் உரிமை செய்யப்பட்ட இறையிலி நிலங்களைப் பற்றியனவாகவே பெரும்பாலும் அமைந்துள்ளன. கல்வெட்டுகளுள் எடுத்துக்காட்டாக இரண்டினைக் கொடுத்துள்ளேன்.

## கல்வெட்டு—1

(மகாமண்டபம்—தென்புறச் சுவரில் உள்ளது)

1 ஸ்ரீ திரிபுவ சக்கரவர்த்தி கோநேரின்மை கொண்டான் சுந்தர பாண்டிய தேவர்

2 க்கு யாண்டு ரு...நாயற்று பூர்வபட்சத்து ஏகாதசியும் சனிக்கிழமையும் பெற்ற

3 ......எழுபத்து ஒன்பதில் குலோத்துங்க சோழ வள நாட்டு பனையூர் நா

4 ட்டுப் பனையூர் உடையார் அழகிய நாயனுர் கோயில் தானத்தாக இன்நாயனுற்க்கு நம்பேரால்

5 கட்டின சுந்தரபாண்டியன் சந்திக்கும் திருநாளுக்கும் அமுதுபடி சாத்துபடி உள்ளிட்ட பல விஞ்சனங்

6 களுக்கும் இவ்வூரில் திருப்புரத்தடி நல்லூர் நிலம் ஐவேலியும்மூ

7 ன்ருவது மார்கழி மாதமுதல் முடங்க இறையிலியாக குடுத்தோம்

8 இப்படிக்கு இவ்வேலை பிடிபாடாக கொண்டு சந்திராதித்த

9 வரை...செல்வக் கல்லிலுஞ் செம்பிலும் வெட்டிக் கொள்
10 க இவை மருதத்தூருடையான் எழுத்து வ இவை மனு மீகண்ட கோபா
11 லன் எழுதது வ துல்யம் வ

### கல்வெட்டு—2

(மகாமண்டபம் தென்புறம்)

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கோராஜாதிராஜ தேவர்க்கு யாண்டு ......குலோத்துங்கசோழ வளநாட்டுப் பனையூர் நாட்டு திரு
2 ப்பனையூர் உடையார் அழகியதேவ நாயனார்க்கு பனையூருடையாந்......
3 கங்கைகொண்ட சோழ பனையூர் நாட்டு கொங்காழ்......
உள்ளிட்ட ஊரவர் ஊராக்கி இறை இலிவிட்ட நிலத்தில்
4 படுதூர்வை இல் நிலம் ஒரு மாவிளை நிலம் ஒருமாவும் இராரா மங்கலத்து இருக்கும் செய் பங்குடையாந்
5 மொண்ணை செறுத் தொண்டதேவர் பதினைஞ்சு காசு ஒடுக்கி சந்தி விளக்கு மூன்றுக்கும் ப
6 ளவத்தூர் உடையாந் திருச்சிற்றம் பல முடையான் ஆனகுலோத்துங்க சோழ பிச்சன் வசம் உ
7 பையம் விட்ட நிலம் ஒருமா விளை நிலம் இநிலம் மாவும் உபயக்காணியாக கைக்கொண்டு
8 பிச்சன் ஆண்டைக்கு அளக்கும் எரை ஏழுக்கும் முனுழி உழக்காழாக்கும் கோயிலில்
9 ...னது தாவு கொள்ள கடவன்னாக சம்மதித் தமைக்கு மத்யத்தம் மனக்குடையன் சுந்தர சோழன் (சந்திராதித்......)
10 ஆடவல்லான் எழுத்து வ நீக்கி திருமந்திரரெந் திருவம்பல நம்பி உள்ளிட்டார் கணியாய...
11 நிலம் ஒருமாமுக்காணி வ.

## 10. செப்பேட்டு வளைய முகப்பு

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் முதலாம் இராசேந்திர சோழன் செப்பேடுகள் ஐந்தடி ஒன்றரை அங்குலம் நீளமுள்ள வளையத்திற் கோக்கப்பெற்றுள்ளன. இவ்வளையம் தராவென்னும் கலப்பு உலோகத்தால் வார்த்தெடுக்கப்பட்டது. இவ்வளையத்தின் முகப்பிற் காணும் இலச்சினையே இந்நூலில் வெளிவந்துள்ள நிழற்படமாகும்.

வளைய முகப்பின் பின்புறம் பதினாறு இதழ்களோடு கூடியதும் மலர்ந்து சற்று குவிந்து விளங்குவதுமான தாமரை மலர் போன்று ஒன்பது அங்குல கனமுடையதாக அமைந்துள்ளது. இதன் முன்புறமான ஐந்து அங்குலம் குறுக் ககலமுள்ள வட்டத்தில் வளைவாகக் கிரந்த எழுத்துக்களில் ஒரு சுலோகம் காணப்படுகிறது. இவ் வட்டத்தின் நடுவில் வலப்புறப் பார்வையோடு பெருமிதமாக உட்கார்ந்துள்ள நிலையில் சோழர்கட்குரிய இலச்சினையான புலியின் உருவம் அமைந்துள்ளது. அதற்கு முன்புறம் பாண்டியர்க் குரிய இலச்சினையான இரட்டை மீன்கள் காணப்படுகின்றன. சோழ பாண்டியர்க்குரிய இவ்விரண்டு இலச்சினைகளும் சமநிலையில் அமைக்கப்பட்டுள்ளன. இவ் விலச்சினைகளுக்கு முன்னும் பின்னும் திருவிளக்கு,

கொடி, அங்குசம், உடைவாள் ஆகியவற்றின் உருவங்களும் உள்ளன. இவற்றிற்கு மேலே வட்டத்தின் உள்ளடங்கிய நிலையில் இருபுறமும் கவரி நிலவக் கொற்றக்குடை அமைக்கப்பட்டுள்ளது.

இவையனைத்தும் ஏறத்தாழ முகப்பின் அரையேயரைக்காற் பகுதியில் அடங்க, எஞ்சிய பகுதியில் வில் வடிவம் அமைக்கப்பட்டுள்ளது. வில்லின் உட்புறத்துள்ள இடத்தில் முழவு, அரசவிருக்கை, பன்றி, சுவத்திகம் இவற்றுடன் ஐந்து இதழோடு கூடிய மலரொன்றும் அமைந்துள்ளது. இவ்வுருவங்களும் கிரந்த சுலோகமும் புடைப்புச் சிற்பமாகவே வார்த்தெடுக்கப்பட்டுள்ளன.

கிரந்த எழுத்திலுள்ள சுலோகம், "ஏதத் ராஜன்ய மகுடஸ்ரேனி ரத்நேஷு ஸாஸநம் ஏதத் ராஜேந்திர சோளஸ்ய பரகேசரி வர்ம்மண" என்பதாம்.

இதன் பொருள், 'பரகேசரி வர்மனை இராசேந்திர சோழனுடைய இந்தச் சாசனம், அரசர்களுடைய முடி வரிசைகளிலுள்ள இரத்தினங்களில் செலுத்தப்பட்டது' என்பதாம்.

இதனால், முதலாம் இராசேந்திர சோழனுடைய பேராற்றலும், பலநாட்டு மன்னர்கள் இவன் கட்டளைக்குக் கீழ்ப்படிந்திருந்த பெருமையும் தெளிவாகின்றன.

இவ்விலச்சினை முதலாம் இராசேந்திர சோழனின் எட்டாம் ஆட்சியாண்டளவில் எழுந்ததென்பது, செப்பேடுகளில் அறச் செயலைக் கூறும் தமிழ்ப் பகுதியின் தொடக்கத்திலுள்ள "நமக்கு யாண்டு எட்டாவது, நாள் நூற்றேழினால்" என்ற தொடரினாலும், இப்பகுதியின் எட்டாவது ஏட்டின் பின்புறத்தில் உள்ள இவனது மெய்க் கீர்த்தியாலும் நன்கு அறியப்படும்.



முதல் இராசேந்திரசோழன் செப்பேட்டு வளைய முகப்பு

இவன் வென்று அடிப்படுத்திய நாடுகளின் அரச இலச்சினைகளே புலி உருவினைச் சார்ந்தும் அதன் கீழும் அமைந்துள்ளன. சோழர்கட்கும் பாண்டியர் கட்கும் உரிய சின்னங்களாய புலி, கயல்களின் உண்மையான அமைப்பினை இவ்விலச்சினை எடுத்துக் காட்டுவதாகும்.

புலியின் உருவம் பெருமிதத்தோடு உட்கார்ந்த நிலையில் உள்ளது. அதன் தோற்றத்திலே வீரம் பொருந்தியுளது. புலி தனது வாலை முன் காலொன்றி ஞல் பற்றியுள்ளதாகக் கல்வெட்டுத்துறை அறிஞர் கூறுவர்.

இருவேறு பேரரசர்களுடைய சின்னங்களும், சோழனுடைய அறத்திறங் கூறும் செப்பேட்டு வளைய முகப்பிலச்சினையில் ஒத்த மதிப்பியலில் மங்கலச் சின் னங்கள் சூழ அமைக்கப்பட்டுள்ளதை நோக்கின், சோழரும் பாண்டியரும் தம்முள் சீற்றமும் அரசியல் மாற்றமும் உடையரேனும், தொன்றுதொட்டு வரும் அவர் தம் உறவின் அடிப்படைப் பெருமையினை அவர் கள் குறிக்கொண்டு போற்றி வந்துள்ளார்கள் என் பது தெளிவாகின்றது. இக் கருத்தை முதலாம் இராச ராசன், தனது மெய்க்கீர்த்தியில் பாண்டியரைவென்ற சிறுரைக்குமிடத்து, "செழியரைத் தேசுகொள் கோவி ராச கேசரி'' என்று கூறிக்கொள்வதும், பாண்டியர் களுடைய செப்பேட்டு வளையங்களின் முகப்பில் புலி யும் பிற சோழர்களுடைய சாசனச் சின்னங்களில் கயலும் ஒத்த தகுதியில் அமைக்கப்பட்டுள்ளமையும் சான்றும்.

புலிக்கும் கயல்கட்கும் இருபுறங்களிலுமுள்ள பொருள்கள் அரசர்க்குரிய மங்கலச் சின்னங்களே யாம். இச் செப்பேட்டு வளையத்தோடு கரந்தைத் தமிழ் சங்கத்திற்குக் கிடைத்துள்ள இதனெடொத்த அளவும் பாங்குமுடைய மற்ரெரு வளைய முகப்பில் புலியின்

பின்னுள்ள மங்கலப் பொருள்களுள், முதலில், திரு விளக்கும் அடுத்துக் கொற்றக்குடையும் உள்ளன.

சோழ, பாண்டிய இலச்சினைகள் இவ்வாறு அரச மங்கலத்துடன் விளங்க, அவற்றின் கீழ் இடங் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது சேரர்கட் குரிய சின்னமான வில் வடிவமாகும். எனவே முதலாம் இராசேந்திர சோழன் சேர நாட்டை அடிப்படுத்திய தற்கு இவ்விலச்சினை சான்றாகக் கருதப்படுகிறது. வில்லின் இடைவெளியில் உள்ள பன்றி உருவம் மேலைச் சளுக்கியர்க்குரிய இலச்சினையாகும். அதனருகி லுள்ள சுவத்திகமும், முரசும் எண்வகை மங்கலப் பொருளைச் சேர்ந்தனவாம். பீடம் போன்ற அரச இருக்கையும் ஐந்திதழ் மலரும் என்ன குறிப்புடையன என்பது விளங்கவில்லை. ஆயினும் இச் சின்னங்களிற் பல முதலாம் இராசேந்திரனின் தோள் வலிக்குத் தாழ்ந்த நாடுகளின் அரச இலச்சினைகள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இவ்வாறு தான் செய்யும் ஒரு பேரறத்திற்கு விளக்கம் கூறும் செப்பேட்டு வளையத்தின் முகப்பில் தன் ஆட்சிக் காலத்து அரசியலின் நிலையை உருவாக் கிக் காட்டிய பண்டித சோழனாகிய முதலாம் இராசேந் திர சோழனுடைய அறிவும் ஆற்றலும் போற்றத்தக் கனவாகும்.

## 11. பருத்தியூர்க் கல்வெட்டுகள்

தஞ்சையிலிருந்து நாகைக்குச் செல்லும் புகை வண்டிப் பாதையிலுள்ள 'கொரடாச்சேரி' என்னும் ஊரினின்றும் கிழக்கேயுள்ள விடையபுரம் என்னும் சிற்றூரின் வழியாகச் செல்லும் மட்சாலையில் ஆறு கல் தொலைவில் உள்ளதே பருத்தியூ ரென்பதாகும். நன்செய்கள் சூழச் சிறிய அளவில் இன்றுள்ள இவ் வூரின் மேலைக்கோடியில் ஒரு சிவன் கோயில் பழுத டைந்துள்ளது. இக் கோயில் தோன்றியபொழுது பெரிய அளவில் இருந்திருக்கிறதென்பதை, அதன் அங்கங்களாக விளங்கிய மண்டபங்களும், திருச்சுற் றுள் நின்ற பரிவாரத்தேவர்களின் சிறியகோயில்களும் அழிந்துபட, கருவறை மட்டில் சிதைவடைந்த விமா னத்துடன் இன்று நிற்பதைக்கொண்டு அறிய முடி கிறது. கோயிலின் ஒரு பகுதியான உமையம்மையின் கோயில் மருங்கறக் கெட்டதனால் அம்மையின் திரு மேனி எஞ்சியுள்ள கருவறையின் ஒருபுறம் வைக்கப் பட்டுள்ளது. மற்றும் பரிவாரத்தெய்வங்களாய் விநாய கர், பைரவர் போன்ற திருமேனிகளும் கருவறையுள் இலிங்கத்தைச் சார்ந்த பகுதிகளில் நிறுத்தப்பட்டுள் ளன. கருவறையின் அடிப்படையுடன் சுவர்களும் கருங்கற் றிருப்பணியாக அமைய விமானம் முழுவதும்

செங்கற்பணியாக அமைக்கப்பட்டுள்ளது. அடிப் படையின் சிற்ப அமைப்பு பன்னிரண்டாம் நூற்றுண் டில் எழுந்துள்ள சோழர் காலக் கட்டிட வகையைச் சார்ந்துள்ளது. கருவறைச் சுவரின் மூன்று பகுதி களிலும் கல்வெட்டுகள் பல உளவாயினும் மிகுதி யாகச் சிதைவு பெருமல் இருந்த இரண்டு கல்வெட்டு களையே படியெடுத்தேன். சுவரின் கம்பப் பலகைகளில் சிலருடைய பெயர்கள் வெட்டப்பட்டுள்ளன. அவை கோயிலைக் கட்டிய சிற்பிகளையோ அன்றி அதிகாரிக ளையோ குறிப்பனவாகும். கோயிலுக்குத் தெற்காக அமைக்கப்பட்டிருந்த திருக்குளம் காலப்போக்கில் குறுகிக் குட்டையாகியதோடு கரையில்லா நிலையில் எஞ்சியுள்ள கருவறையினையே கரையாகக் கொண்டுள் ளதால், இன்னும் சின்னாளில் அதனையும் தன்னகத்து அடக்கி நிறைத்துக்கொள்ளும் நிலையில் உள்ளது. தமிழகத்தின் பழைய சின்னங்கள் நன்முறையில் பாதுகாக்கப் பெருமல் அழிவுறும் நிலையை, இக்கோ யில் நன்கு காட்டுகிறது. எனவே தக்கார் பொறுப் பேற்று, எஞ்சிய கருவறையினைச் செம்மை செய்து காத்தல் வேண்டும். கல்வெட்டுகளைக் கொண்டு அரிய செய்திகளை அறிவதற்கில்லையாயினும், ஆராய்ச்சித் துறைக்குப் பயன்படு மென்னும் கருத்துடன் வெளி யிட்டுள்ளேன்.

## கல்வெட்டு 1

### கருவறை—தென்புறம்

......மப்ப...மனுவாறு விளங்க மாத ம்மி...தெலுங் ...கொடி...செம்பிய...ராஜ கெசரிபற்மரான திரிபுவ னச் சக்கரவர்த்திகள்...பிர்மதெயம் தாழைக்குடி ஸபையோம் இந்நாட்டு பருத்தியூரின் அனபாயபுரத்து



உடைவாழும் தேவகன்மிகள் ஆதிசண்டெசுரர்க்கும் ஸ்ரீமாஹெஸ்வரகண்மிகட்கும்...... தந்த...ஆவது...... பருத்தியூரான அனபாயபுரத்து உடற்குறையாய்க் கிடந்த நிலமாய மடப்புறம் நிலம் ஆறுமாக்காணிக்கு நடுவுகுளம் உள்பட நிலம் மூன்று மாவும் இறையிலி செய்து குடுத்துக் கொள்வதாக...அன்றுடு நற்காசு நாலும் ஆவணக்களி செலவறக்கொண்டு இறையிலிப் பிராமணஞ் செய்து குடுத்தொம் மருப்பூர் கிழவநான தத்துவாயன் தன்மச்சிலெ செட்டி கணவதி...கைலா... ண்ட...ண்டனூர்க்கும் ஸ்ரீமாஹெஸ்வரர்க்கும் ஸபையா ரும் பிராமணஞ் செய்து குடுத்தோம் கிராமக்கணக்கு தாழைக்குடையான் சிங்கன் பிரமீசுரம்முடையான் இவை என்னெழுத்து. இப்படிக்கு...ஸ்ரீசெட்டிபொசன் ...ஞகபாணி பட்டன் எழுத்து இப்படிக்கு...வங்கிய புறத்து செட்டி பொசன் ஸ்ரீகுமாபட்டன் எழுத்து இப்படிக்கு வங்கிய புரத்து செட்டிபொன் தக்ஷிணு மூர்த்தி பட்டன் எழுத்து ||.

## கல்வெட்டு-2

### கருவறை-வடபுறம்

"திரிபுவந சக்கரவர்த்திகள் ஸ்ரீகுலோ......க்கு யாண்டு இருபத்தாருவது பூர்வ பக்ஷித்து ஷஷ்டியும் புதன் கிழமை...திருவாத்தீஸ்வரமுடையார் தெவதா னத்தில் குடி நீக்காத தெவதானத்துக்காண உடை யார் பெரியாந் பிரமீஸ்வரமுடையாந் ச...தலூருடை கொண்டு அனுபவித்து வருகிற கூறுசெய்வர் கூத் தூரனிடை நிலத்தில் விலைகொண்டு நம்முயநார் தெவதாநம் தலம்மு(ள்ள) குலொத்துங்கசோழ விநாய கப் பிள்ளையார் நிலம் ஒருமாவரை. இந்நாயனார் தேவதா நம் திருமின்குறை பூர்வம் தேயத்தார் இட்ட

நிலம் கடைய நிலம் இரண்டு மாவும் ஆக நிலம் அரை...
ருமா இசைந்த விலைப்பொருள் அன்றூடு நற்காசு ஏழா
யிரம் கைக்காணியாகக் கூட்டிக்கொண்டது | |"

கம்பப் பலகைகளில் வெட்டப்பட்டுள்ளவை

1. இச்சி குறும்பன்
2. பெரியான் மண்டை
3. ஸ்வஸ்திஸ்ரீ செட்டி நம்பிகள்
4. தத்துவாயன் மாளிகையுடையான்
5. உடையான் மாதெவன்

நாட்டார் திருக்காவணத்து இட்டகாசு ஒன்று
ஆட்டு அரைதிரமமம் பொலிசையும் காசும்.

## 12. வரலாறு கண்ட வரதட்சணை

வரதட்சணை என்னும் ஆரிய சமயத் திருமணப் பரிச வழக்கம் பண்டுதொட்டுப் பார்ப்பனரிடையே இருந்து வருவதாகும். இது, மணமகள் சுற்றத்தார் பொன்னெடு பெண்ணைக் கொடுப்பதும், மணமகன் சுற்றத்தார் பொன் பெற்றுப் பின் பெண்ணைக் கொள் வதுமாக இருவகை முறையில் நிகழ்ந்திருக்கிறது. இக்கொடிய வழக்கத்தை ஆரியரல்லாத பிறரும் காலப் போக்கில் கைக்கொண்டுள்ளன ரென்பது நாடறிந்த தேயாம்.

இன்றைய இந்திய அரசாங்கம் மேற்குறித்த திரு மணப் பரிச வழக்கத்தின் சார்புடையதாக இன்று மலிந்து நிற்கும் வரதட்சணையை நீக்கும் பொருட்டாக எடுத்துக்கொண்டுள்ள முயற்சிக்கு நாட்டில் மிக்க ஆதரவு கிடைத்துள்ளது. இக்கொடிய வழக்கத்தால் வாழ்க்கைப் பாதையை மாற்றியமைத்து அதனல் உயர்ந்த குடும்பங்களைவிடக் குலைந்த குடும்பங்கள் பல வாம். உண்மைக் காதலுக்கும் இடையே சுவர்போல் நின்றதும் நிற்பதும் இதுவேயாகும். இத்தகைய சம யச் சார்புடைய சமுதாய இழுக்கை, இவ்விருபதாம் நூற்றுண்டில்தான் அரசியலார் நீக்க முயன்றிருக்கி

றார்கள் என்பது பொதுமக்களுடைய முடிந்த கருத்தாகலாம். ஆனால் இன்றைக்கு ஐந்நூறாண்டுகட்கு முன்னர் தென்னாட்டில் வலிமையுடன் திகழ்ந்த விசயநகரப் பேரரசில் இவ்வழக்கம் கடியப்பட்டுள்ள செய்தியை, வேலூரை யடுத்த திருவிரிஞ்சிபுரத்திலுள்ள திருமால் கோயிற் கல்வெட்டுகளுள் ஒன்று தெளிவாகக் கூறுகிறது.

விசயநகரப் பேரரசின் வழிவந்த அரசருள் மூன்றாம் புக்கருடைய மகன் இரண்டாம் தேவராயர் எனப்படும் தேவமகாராயர் ஒருவராவர். இவர் கி. பி. 1422-இல் அரசுரிமை பெற்று, 1446-ஆம் ஆண்டு மே திங்கள் இருபத்து நான்காம் நாள் வரையில் ஆட்சி புரிந்திருக்கிறாரென்பதை வரலாறு கண்டுள்ளது. இப்பேரரசருடைய ஆட்சி, தெற்கே தஞ்சை மாவட்ட அளவில் பரவி இருந்திருக்கிறது.

இம்மன்னர் ஒரு குலத்துக்கொரு நீதிகொண்டு ஆட்சி புரியாமல் நடுநிலைமை மிக்கவராக இருந்திருக்கிறாரென்பதை, தென்கயிலாயமாகிய தில்லைச் சிற்றம்பலத்துக்குரியார் அரசாங்க அதிகாரிகளின் துணையை மறைவாகப் பெற்றுக் குடிகளைத் துன்புறுத்தி வசூலித்த வரிவகைகள், முறையானவை யல்லவென்று குடிகள் முறையிட, அம்முறையீட்டை ஆராய்ந்து, அப்புதிய வரிப்பளுவை விலக்கியுள்ளனர்' என்னும் செய்தியைக் கூறும் ஷை தில்லைக் கோயிற் கல்வெட்டுக்களால் நன்கறியலாம்.

விசயநகரப் பேரரசர்கள் மறையவரது வழிநின்று ஆட்சி செலுத்தியவரென்று கூறும் நிலைமை ஒருவாறு வரலாற்றுள் இடம்பெறினும், அவர்கள் தஞ்சை நாயக்கர் ஆட்சியில் நிகழ்ந்ததைப்போல் ஒரு சார்பு



பற்றி ஆட்சி செலுத்தவில்லை என்னும் கருத்தும் இது போன்ற நீதிமுறைமைகளைக் கூறும் அவர்களுடைய கல்வெட்டுக்களால் புலனாகிறது.

இத்தகைய மேம்பாடுடைய இவ் விரண்டாம் தேவராயரின் மூன்றாம் ஆட்சியாண்டில் இவரது அதிகாரம் பெற்ற முறைமையோடு, திருவிரிஞ்சிபுரத்தி லிருந்த "அஸேஷவித்ய மகாஜனங்கள், அக்ர புஷ்கரணி கோபிநாதன்" சந்நிதியிலே கூட்டங்கூடி, அறநிலையத் தீர்ப்புப் பத்திரம் செய்து, மேற்குறித்த திருமணப் பரிச ஒழிப்புச் செய்திருக்கிறார்கள். அப்பத்திரத்தின் கட்டுப்பாட்டை எவரேனும் மீறினால், சாதி விலக்குடன் அரச தண்டமும் பெறுவரென்னும் குறிப்பும் கல்வெட்டிற் காணப்படுகிறது. எனவே பார்ப்பனரும் அவரைச் சார்ந்த பிறரும் பெருமையுடன் பேணிவந்த சமுதாயக் கொடுமைகளுள் ஒன்றாய வரதட்சிணை, நாயக்கருடைய ஆட்சிக் காலத்திலேயே கண்டிக்கப்பட்டுள்ளதென்னும் உண்மை புலனாகிறது.

கல்வெட்டு :—

ஸ்ரீமன் மஹா இராஜாதிராஜ பரமேஸ்வரரான ஸ்ரீ வீரப்பிரதாப தேவராய மஹாராஜ பிரிதிவிராஜ்யம் பண்ணி அருளா நின்ற ஸகாப்தம் 1347-இன் மேல் செல்லாநின்ற விஸ்வாவஸு வருஷம் பங்குனிமீ 6க்கு சஷ்டியும் புதன்கிழமையும் பெற்ற அநிழத்து நாள் படைவீட்டு இராஜ்யத்து அஸெஷவித்ய மஹாஜநங்களும் அக்கரபுஷ்கரணி கோபிநாத(ன்) சந்நிதியிலெ தர்மஸ் ஸ்தாபந ஸமயபத்ரம் பண்ணிக் குடுத்தபடி இற்றை நாள் முதலாக இந்தப் படைவீட்டு ராஜ்யத்து பிராம்மணரில் கன்னடியர், தமிழர், தெலுங்கர், இலாடர் முதலான அஸெஷ கோத்ரத்து அஸெஷ ஸூத்ரத்தில் அஸெஷஸாவை யிலவர்களும் விவாஹம் பண்ணு

மிடத்து கந்யாதானமாக விவாஹம் பண்ணக்கடவ ராகவும். கந்யாதானம் பண்ணுமல் பொன் வாங்கிப் பெண் குடுத்தால், பொன் குடுத்து விவாஹம் பண்ணி ஞல் இராஜ தண்டத்துக்கும் உட்பட்டு பிராம்ணத்துக் கும் புறம்பாகக் கடவாரென்று பண்ணின தர்மஸ்தா பன சமயபத்ரம்.

இப்படிக்கு

அஸெஷவித்ய மஹாஜனங்கள் எழுத்து.

(S. I. I. Vol-I, page 83)

ARCHIVES LIBRARY

## 13. கருந்திட்டைக்குடி கல்வெட்டு

(இக் கல்வெட்டு இவ்வூரிலுள்ள வசிட்டேசுவரர் ஆலயத்தின் கருப்ப இல்லின் மேலைப்புறச் சுவரி லுள்ளது.)

ஸ ஸி ஸ்ரீ திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்,
வ த
தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக் காந்தளூர் சாலைக் கலமறுத்தருளி, வேங்கை நாடும் கங்கபாடி யும், நுளம்பபாடியும் தடிகைபாடியும், குடமலைநாடும் கொல்லமும் கலிங்கமும், எண்டிசை நிகழ ஈழமண்டல மும், திண்டிறல் வென்றி தண்டாற் கொண்டு தன் னெழில் வளருழியுளெல்லாயாண்டுந் தொழுதக விளங் கும் யாண்டே செழியரைத் தேசுகொள் ஸ்ரீ கோவிராஜ ராஜ கேஸரி பன்மர்க்குயாண்டு 08-ஆவது நித்த விநோத வளநாட்டு நல்லூர் நாட்டு பிரஹமதேயம் ஸ்ரீ ராஜகேஸரி சதுர்வேதி மங்கலத்து மஹாசபையோம் விற்ற நில விலையா வணம் நம்மையுடைய சக்ரவர்த்தி பிராமணவூர்களில் பிராமணர்க்கு கீழ்ப்பட்ட ஜாதி களிலார் காணிகளில் பணிசெய்மக்கள் பணிசெய் காணியொழிய நின்றூர் காணி...வன்றருளச் செய்ய புக்க கேழ்விப்பட்ட அதிகாரிகள் வானவன் மூவேந்த வேளார் அடைவு குத்துவித்து வரிசை விட்டபடி விற்

றுக்காசு தண்டுக வென்றருளிச் செய்து உடையார் பணிமகன் சாத்தம்பியை ஏவ இச் சாத்தம்பியார் தண்டமஹா ஸபையோம் விற்ற நிலவிலையாவணம்.

நம்மை உடைய சக்ரவர்த்தி ஸ்ரீ பராந்தக தேவர் திருமகளார் ஸ்ரீ குந்தவை பிராட்டியார் இந் நித்தா விநோத வளநாட்டுத் தஞ்சாவூர் கூற்றத்துத் தஞ்சாவூர் புறம்பட்டி வடவாற்றின் வடகரை கருந்திட்டைக் குடி தேவர்க்குத் திருநந்தா விளக்கு வைப்பதற்காக இ ஸ்ரீ பராந்தக தேவர் திருமகளார் ஸ்ரீ குந்தவைப் பிராட்டியார்க்கு மஹாசபையோம் விற்றுக் கொடுத்த நிலமாவது—

இவ் விராஜகேஸரி சதுர்வேதி மங்கலத்து நாதொங்கவதிக்கு மேற்கு ஏழாங் கண்ணாற்று இராஜ கேஸரி வாய்க்காலுக்கு 3-ஆம் சதிரத்து வடக்கடைய மூன்று மாவும், நாதொங்கவதிக்கு மேற்கு 4-ஆம் கண்ணாற்று இராஜகேஸரி வாய்க்காலுக்கு தெற்கு 2-ஆம் சதிரத்து தெற்கடைந்த (வ) கால் தெற்கடைந்த (பசு) ஒருமாவரையும் ஆக நான்மாவரை செய்யும் விற்று விலையாவணம் செய்து குடுத்தோம். ஸ்ரீ பராந்தகதேவர் திருமகளார் ஸ்ரீ குந்தவைப் பிராட்டியார்க்கு ஸ்ரீ ராஜகேஸரிச் சதுர்வேதி மங்கலத்து மஹாசபையோம். இந் நிலன் நான்மாவரை செய்யும் விற்று விலையாவணம் செய்து குடுத்துக்கொண்ட விலைப்பொருட்காக ஈழக்காசு வாசி படாமைச் செல்லுங் காசு...எண்பத்தொன்றறையேய் மூன்று மா அரைக்காணிக்கு கீழ்ப்பட்ட ஜாதிகளிலார் காணி......ப்பித்து இந் நில ......வேய்விலையாவணம் இதுவேய் பொருமாவறுதிப் பொரு......விலையும் இதுவேய் ஆவதாகவும் இது வல்லது வேறு பொருமாவறுதிப் பொருட்செலவோலைக் காட்டக் கடவாரல்லாதாராக இப்பரிசு ஒட்டி விலைக்கற விற்றுப் பொருளறக்கொண்டு விலையாவணம் செய்து குடுத்தோம் நம்மையுடைய சக்ரவர்த்தி ஸ்ரீ பராந்தக



தேவர் திருமகளார் ஸ்ரீ குந்தவைப் பிராட்டியார்க்கு ஸ்ரீ ராஜகேஸரி சதுர்வேதி மங்கலத்து மஹாஸபையோம்.

பணியால் இவ்வூர் மத்யஸ்தன் திருவேங்கடவன் ஆயர் கொழுந்தினேன் இவை யென்னெழுத்து. இப்படி அறிவேன் இவ்வூர் வைகானஸன் காஸ்யபன் ஸ்ரீ வாசுதேவன் ஆராவமுதினேன். இப்படி பணியால் மத்யஸ்தன் வேங்கடவன் அரங்கனேன் இவை யென்னெழுத்து இப்படி பணியால் மத்யஸ்தன் வில்லி காடந்தஞன மங்கலாச்சனேன் இவை என்னெழுத்து. இப்படி பணியால்......கௌதமன் கோவிந்தன் சிங்கப்பி ...னென்னெழுத்து இப்படி பணியால் மத்யஸ்தன் அரங்கம் பூதியான மங்கலோத்தம னேன் எழுத்து. இப்படி பணியால் இவ்வூர் வேடகோவன் புறம்பியன் னெச்சில் மண்டை என்னெழுத்து. இப்படி பணியால் மத்யஸ்தன் அரங்கன்......ங்கஞன சாதுப்பிரியனேன் இவை என்னெழுத்து. இப்படிப் பணியால் இவ்வூர் வேடகோவன் பொய்யிலிதேவன் எழுத்து. இப்படிப் பணியால் இவ்வூர் வேடகோவன் நக்கன் முத்தரையனேன் எழுத்து.

இப் பதினேழாவதே இவ் வோலை மேற்பட்ட நிலம் நான்மாவரையும் இத் தஞ்சாவூர்ப் புறம்பட்டி வடவாற்றின் வடகரை இக்கருந்திட்டைக்குடித் தேவர்க்கு சந்திராதித்தவரை நந்தா விளக்கு வைப்பதற்கு இத்தேவர்க்கே யுரித்ததாகக் குடுத்தேன் பராந்தகன் குந்தவையேன்.

இப் பிராட்டியார் அருளிச்செய்ய எழுதினேன் இவர்க்கு அதிகாரஞ் செய்கின்ற சிறு பேருடையான் கொ......ன் தென்னவன் எரியூர் நாட்டு வேளானேன் இவை என்னெழுத்து. இப் பரிசு......அறிவேன். இப்பிராட்டியார்க்கு அதிகாரஞ் செய்கின்ற நாகமங்கிமூான் அங்காடி தூற்றியனென் இவை என்னெழுத்து. இப்படி குடுத்தவை அறிவேன் இப் பிராட்டியார்

கணக்கு பூவணூருடையான் வரகுணன்......இவை என்னெழுத்து. இப்படி குடுத்தமை அறிவேன் ஆழ்வார் கரணத்தான் மருதங்குடையான் மாயிலட்டி ஆச்ச னென்.

**அறச்செயல்:-** ஸ்ரீ இராசகேஸரி சதுர்வேதி மங் கலத்து மகாசபையோரால், பராந்தக தேவரின் திரு மகளார் குந்தவை பிராட்டியார், கருந்திட்டைக்குடி, வடவாற்றின் வடகரையி லெழுந்தருளியுள்ள வசிட்டேசுவரருக்கு திருநந்தா விளக்கு வைப்பதற் கென்று, இராசகேச சதுர்வேதி மங்கலத்திலுள்ள நாலரைமா நிலத்தினை, ஷ யாருக்கு விற்றுக் கொடுத்துள்ளனர்.

**மக்களின் மாண்பு:-** இக் கல்வெட்டு முதலாம் இராசராசனின் பதினேழாவது ஆட்சி யாண்டில் எழுந்த தாயினும், பொன் மாளிகையிற் றுஞ்சிய வரும், தமது அரசரின் தந்தையுமாகிய பராந்தக தேவ ரிடத்து, மக்கள் எத்துணை பெருமதிப்புடையராகத் திகழ்ந்தா ரென்பது 'நம்மை உடைய சக்கரவர்த்தி ஸ்ரீ பராந்தக தேவர் திருமகளார் குந்தவை பிராட்டியார்' என்று குறிப்பிட்டுள்ளதினுற் றெளிய ஏதுவாகின்றது.

**குந்தவையாரின் சிறப்பு:-** இப் பிராட்டியார் அறச் செயல்களில் பெரிதும் ஈடுபாடுடையா ரென்பதுடன், இவருக்குரிய காணிகளும் பிற சொத்துக்களும் இவ ரது அதிகாரிகளினுலேயே இராசராசனது காலத்திலே யும் கண்காணிக்கப் பெற்று வந்தன என்பது, இப் பிராட்டியார் அருளிச் செய்ய எழுதினேன் இவர்க்கு அதிகாரஞ் செய்கின்ற சிறு பேருடையான்...தென்ன வன் எரியூர் நாட்டு வேளானேன், இப் பரிசு அறிவேன் இப் பிராட்டியார்க்கு அதிகாரஞ் செய்கின்ற நாகமங்கி ழான் அங்காடி சூற்றியனேன், இப்படி கொடுத்தவை அறிவேன் இப் பிராட்டியார் கணக்கு பூவணூருடை யான் வரகுணன் என்பனவற்றுல் தெளிவாகின்றன.



கரந்தைத் தமிழ்ச் சங்க முதல் இராசேந்திர சோழன் செப்பேடுகள்

## 14. முதல் இராசேந்திர சோழன் செப்பேடுகளின் படிகள்

வளமான கலைகளெல்லாம் வளர்ந்துவரும் இவ்விருபதாம் நூற்றாண்டில், தமிழகத்தில் தோன்றித் தமிழ்மொழி வளர்ச்சியொன்றையே குறிக்கோளாகக் கொண்டு பணியாற்றிவரும் நிலையங்களுள், தஞ்சையைச் சார்ந்த கருந்திட்டைக்குடியில் வளர்ந்துவரும் கரந்தைத் தமிழ்ச் சங்கம் சிறந்ததாகும்.

இச் சங்கத்தின் உடைமைகளுள் ஒன்றாக விளங்குவது, கி. பி. 1012-முதல், 1044-வரை சோழ நாட்டை மிக்க புகழோடு ஆட்சி செய்த பேரரசனாகிய முதல் இராசேந்திர சோழனால் வெளியிடப்பட்ட செப்பேடுகளாகும். இந்த அரசன், தன் தாயாகிய திரிபுவன மாதேவியின் பெயரால் பெரியதொரு அறம் செய்ய விரும்பி, அதன்படி, தனது ஆட்சியாண்டு எட்டில் (கி. பி. 1020-இல்), சோழ மண்டலத்தில் தஞ்சைக்குக் கீழ்பாற்றொடங்கிய எல்லைகளை உடையதாக அமைந்த ஐம்பத்தோர் ஊர்களை ஒன்றாக இணைத்து, அப் பெரு நிலப்பரப்பிற்குத் 'திரிபுவன மாதேவிச் சதுர்வேதி மங்கலம்' என்று பெயரிட்டு, வேதம் வல்ல அந்தணர் பலருக்கு அந் நிலத்தைப் பங்கிட்டுப் பிரமதேயமாக

வழங்கியுள்ளான். இந் நிகழ்ச்சியை மிகத் தெளிவாக இச் செப்பேடுகள் விளக்குகின்றன.

இந்த ஏடுகளின் கூடிய தொகை ஐம்பத்தைந்தாகும் இவைகள், வலிமையுள்ள 'தரா' என்னும் கலப்பு உலோகத்தாலானதும், முதல் இராசேந்திரன் காலத்தில் சோழ அரசியலுக்கு இருந்த இலச்சினையுடன் கூடிய முகப்புடன் விளங்குவதுமான பெரியதொரு வளையத்தில் கோக்கப்பட்டுள்ளன. வளைய முகப்பு வட்டமாக அமைந்துள்ளது. வட்டத்தின் விளிம்பாக உள்ள பகுதியில் இச் செப்பேடுகளின் சிறப்பைக் கூறும் கிரந்த எழுத்திலுள்ள சுலோகமும், நடுப்பகுதிகளில் சோழர்கட்குரிய புலிச்சின்னத்துடன் பாண்டியர்கட்குரிய மீன்களின் இலச்சினையும், முதல் இராசேந்திரன் வெற்றி கொண்ட நாடுகளின் சின்னங்களும் சிறப்பாக இடங்கொண்டுள்ளன.

இச் செப்பேடுகள் $16\frac{1}{2}$ அங்குல நீளமும், $9\frac{1}{2}$ அங்குல அகலமும் உடையவை. ஒவ்வொரு ஏட்டின் இருபுறமும் செய்திகள் செதுக்கப்பட்டுள்ளன. பக்கத்திற்கு இருபத்து நான்கு வரிகள் உள்ளன. வரிக்கு ஐம்பதிற்கு மேற்பட்ட எழுத்துக்களாக, பக்கத்திற்கு 1200 எழுத்துக்களுக்குமேல் உள்ளன. இந்த எழுத்துக்களைச் செதுக்கியவர், சங்கராரியருடைய பிள்ளை நாராயணன் என்னும் சிற்பி என்பதை, பிரசஸ்திப் பகுதியாகிய மரபுப் புகழ்ச்சியுரைப் பகுதியால் அறிய முடிகிறது. இச் சிற்பி முதலில் ஏடுகளை மட்டப் படுத்திய பின்னர், அதன்மேல் காலே அரைக்கால் அங்குல இடைவெளி உள்ளதாக இலேசான அடிப்படை நேர்க் கோடுகளை முறையாக வருவிக்கொண்டு, அதன் மேலேயே எழுத்துக்களைச் செம்மையாகச் செதுக்கியுள்ளார்.



முதல் இராசேந்திரசோழன் செப்பேடுகளில் ஒன்று.

இச் செப்பேடுகளில் முதன் மூன்று ஏடுகளில் பழைய கிரந்த எழுத்துக்களில் எழுபத்தெட்டுச் சுலோ கங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இப் பகுதியில், சோழர் களுடைய பழமையும்,முறைமையும்,சிறப்பியல்புகளும் தொடர்ச்சியாகக் கூறப்படுகின்றன. இவற்றை, பழம் பொருள் ஆராய்ச்சிக் கழகத்தார் மையொற்றுப்படி களாக எடுத்துள்ளனர். அப் படிகளில் எழுத்துக்கள் தலைமாறி அமைதல் இயல்பாதலின், அவற்றை எளி தில் படித்தற்கு இயலாது போயின. எனவே,1957-ஆம் ஆண்டு மே திங்களில் மரபுப் புகழ்ச்சியுரைப் பகுதி யாகிய முதன் மூன்று ஏடுகளுடன் மற்றைய ஏடுகளை யும், செப்பேடுகளில் உள்ள எழுத்துக்களுக்குரிய வடி வுடன் மிகமுயன்று நேர்படி எடுக்கலானேன்.

பின்னர், சங்கத்தின் அமைச்சரும் கரந்தைப் புல வர் கல்லூரியின் மதிப்பியல் தலைவருமாகிய திரு. C. **வேதாசலம் பிள்ளை** அவர்களின் விருப்பத்திற் கேற்ப, தஞ்சை அரண்மனை சரசுவதி மஹாலில், வட மொழி ஆய்வாளராக உள்ள நாவல்பாக்கம் - தேவ நாதாச்சாரியார் அவர்களிடம் சென்று, சுலோகங் களுக்குரிய பொருளைத் தெளிவுபடுத்த வேண்டி னேன். அன்பும் அமைதியுமே உருவாகக்கொண்ட அப்பெருந்தகை, தமக்கு ஓய்வு கிடைப்பது இரவுக் காலங்களிலேயே ஆதலால், அதுபோழ்து வந்தால் ஆவன உதவுவதாக வாக்களித்தார். அப் பெரியாரின் வழிநின்றகாலை, சுலோகங்களின் சுவடு மாறாமல் அவர் பொருள் கூற, சொல்லும் கருத்தும் வேறுபடாத அளவில் தமிழ்ப்படுத்தி எழுதி முடித்தேன். பின்னர், அண்ணாமலைப் பல்கலைக் கழக வரலாற்று ஆராய்ச்சி யாளராகிய திரு T. V. **சதாசிவ பண்டாரத்தார்** அவர் களின் விளக்கக் குறிப்புடன், தமிழ்ப் பொழில் துணர்—*33*,மலர்—*4*இல், வெளி வருவதாயிற்று.

இம் மூன்று செப்பேடுகளிலும் உள்ள மரபுப் புகழ்ச்சி உரையைப்'பிரசஸ்தி'பகுதி என்றும் கூறுவர்.

மற்றும், திரிபுவன மாதேவிச் சதுர்வேதி மங்கலம் என்னும் பெருநிலப்பரப்பில், அரசியலதிகாரிகளும் கூற்றத் தலைவர்களும் சேர்ந்து, பிடிசூழ்ந்து பிடாகை நடந்து கல்லும் கள்ளியும் நட்ட எல்லைகளின் இயல் பினைக் கூறும் பகுதிக்குரியதும், சிறுபான்மை கிரந்த எழுத்துக்கள் கலந்து வருவதுமாய இருபத்தொரு ஏடுகளை, செப்பேடுகளில் உள்ள எழுத்துக்களின் வடிவும் சுவடும் மாறாமல் கைப்படி யெடுத்தேன் எஞ்சிய ஏடுகளில், பிரமதேயத்திற்குரிய அந்தணர்களைப் பற்றியும், அவரவர்கட்குரிய பங்குகளுடன் வருவாய்களைப் பற்றியும் நுணுக்கமாகக் கூறப்பெற்றுள்ளன. பின்னர், எல்லா ஏடுகளையும் வழக்கிலுள்ள தமிழ் எழுத்துக்களில் பிழையின்றிப் படி செய்தேன்.

இப் படிகளுள், ஒரு பகுதி முறையாகத் திரு. பண்டாரத்தார் அவர்களின் குறிப்புரைகளுடன் வெளிவந்துள்ளது. எல்லைப் பகுதிகளைக் கூறும் இருபத்தோரேடுகளுள் எட்டாவது ஏட்டின் நடுப்பகுதியாகச் செதுக்கப்பட்டுள்ளது. முதல் இராசேந்திர சோழனின் எட்டாம் ஆட்சி யாண்டளவிற்குரிய மெய்க்கீர்த்தியாகும். அதனை, உரிய எழுத்துக்களில் யான் படி எடுத்த அமைப்பினை எடுத்துக் காட்டாக, இந்நூலின் கடைசிப் பகுதியில் உள்ளபடத்தில் காணலாம்.

இப் படமுறையில், தெளிவாக எல்லாப் பகுதிகளையும் எழுதி, பிளாக்குகளாகச் செய்து, இதுபோழ்து வழக்கிலுள்ள தமிழ் எழுத்துக்களில் படத்தில் காட்டியவாறு அச்சியற்றி வெளிவரின், யாவரும் எளிதில் செப்பேட்டு எழுத்துக்களை இன்றைய எழுத்துக்களுடன் ஒப்பு நோக்கிப் படித்தறிய வாய்ப்பாகும் என்பதும், கல்வெட்டுப் பயிற்சித் துறைக்கும் தமிழுக்கும் ஆக்கமாகும் என்பதும் என்னுடைய விருப்பமாகும்.

முதல் இராசேந்திர சோழன் செப்பேட்டுப்படி.



This eye copy forms a part of one of the original copper plates of Rajendra Chola I.

1. ஸ்வஸ்திஸ்ரீ || வ திருமன்னிவளர இருனிலமடந்தையும் பொர்ச்சயப்பாவையுஞ் சீர்த்தநி
2. ச் செல்வியுந் தன்பெருந் தேவியராக்கி இன்புற நெடிதி(ய)லூழியு ளிடைதுறை நாடுந் துட
3. ர்வனவெலிப் படர்வனவாசியுஞ்சுள் ளிச்சூழ்மதிட் கொள்ளிப்பாக்கையுநண்ணற்கருமுரண்ம
4. ண்ணைக் கடக்கமும் பொருதடரி ஈழத்தரைசர்தமுடியு மாங்கவர் தெவிய ரொங்கெழில்முடியு முன்
5. னவர்பக்கலி தென்னவர் வைத்த சுந்தரமுடியும் இந்திரனாரமுந் தெண்டிரை ஈழமண்டல முழுவ
6. து மெறிபடைக் கெரளர் முறைமையிற் சூடுங் குலதனமாகிய பலர் புகழ்முடியுஞ் செங்க
7. திர் மாலையுஞ் சங்கதிர் வேலைத்தொல் பெருங்காவற் பல்பழந்தீவுஞ் செருவிச் சினவி இரு
8. இருபத்தொருகாலரைசுகளை கட்ட பரசுராமன் மெவருஞ்சாந்திமத் தீவரண்கருதி யிருத்திய செ
9. ம்பொற்றிருத்தகுமுடியு மாப்பொருத் தண்டாற் கொண்ட கொபரகெஸரி வர்மரான ஸ்ரீராஜெந்திர
10. சொழதெவர்க்கு யாண்டு எட்டாவது நாட் கிழநாட்டொமுக்குத் திருமுகம்வர நாட்டொமும்
11. திருமுகம்வரகண்டு எதிரெழுந்து சென்றுதொழுது வாங்கித் தலைமெல் வைத்துப் பிடிசூழ்
12. ந்து பிடாகை நடந்து கல்லுங் கள்ளியு நாட்டி அறவொலை செய்த நித்தவிநொதவள
13. நாட்டு பிர்ம்மதெயம் திரிபுவநமஹா தெவிச்சதுர்வெதி மங்கலத்துக்குக் கீழ்பாற்கெல்லை இவ்

## பழநியாண்டவர் கோயில் செப்புப்பட்டயம்

தஞ்சை, குறிச்சித் தெருவிலுள்ள சுப்பிரமணிய சுவாமி கோயில் இறையகத்தில் திருமேனிக்குப் பின்புறமாக இச் செப்பேடு காணப்பட்டது. இதனைக் கரந்தை உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளி ஆசிரியரும் தஞ்சைக் குறிச்சித் தெருவில் வாழ்பவருமாகிய திரு. தி. க. சம்பந்தசாமிப் பிள்ளை அவர்களின் உதவியினால், கிடைக்கப் பெற்றேன்.

செப்பேட்டின் முழு உயரம் 14-அங்குலம்; அகலம் 8-அங்குலம். முன்புறம் மேற்பகுதியில் 4½ அங்குல அளவிற்குட்பட்டதாக முறையே, விநாயகன், வள்ளியம்மை (நடுநாயகமாக) மயிலூர்தியோடு கூடிய முருகன், தேவயானை, தண்டாயுதபாணி ஆகிய தெய்வவுருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இப்பகுதியைத் தொடர்ந்து கீழாக, 'பழநியாண்டவன் துணை' என்ற காப்புரையுடன் சாசனம் தொடங்குகின்றது. இவ்வேட்டின் முன்புறத்தில் 38-வரிகளும்; பின்புறத்தில் 50-வரிகளுமாகச் செய்தி செதுக்கப்பட்டுள்ளது.

ஏட்டின் பின்புறம் தொகுப்பாகக் கூறப்பெறும் மகாராட்டிர மன்னர் வரிசையில் இறுதியாகக் கூறப்பட்டுள்ள, பிரதாப சிம்ம மன்னரின் ஆட்சியாண்டு ஏழில், அஃதாவது கி. பி-1747-இல் இற்றைக்கு 213-ஆண்டுகட்கு முன்னர் இச் சாசனம் ஏற்பட்டுள்ளதென்பதைச் சாசனத்தில் குறிக்கப்பட்டுள்ள ஆண்டுகளைக் கொண்டு அறியலாகும்.

இச் சாசனத்தில், தஞ்சை கொடிக்கால் தெருவிலுள்ள பழநியாண்டவருக்குச் சோழிய வேளாளர் அனைவரும் செய்யும் அறமாக, திங்கள் தோறும் 'வெத்திலைப் பேட்டை' என்ற இடத்தில் கூடி, திங்களொன்றுக்கு, குடிக்கு அரைப்பணமும், தைப்பூசநாள்

சிறப்புக்கு ஒரு பணமும் அறப்பொருள் கொள்ளப் பட்டதோடு, திருமண வீட்டார் ஒன்றரைப் பணம் கொடுக்கவும் ஒப்பம் செய்யப் பெற்று, அப்பொருளை அறநிதியாக்கிக் கோயிற் செலவுகளைச் செய்ய உறுதி செய்யப்பட்டுள்ள செய்தி புலனாகின்றது.

பிரதாப சிம்ம மன்னரின் அரசியலதிகாரி யொருவரின் பார்வையில், சோழிய வேளாளர் அனைவரின் சொற்படிக்கு ஆறுமுகத்தா பிள்ளை சாமிநாதன் என்பவர் இச் சாசனத்தை எழுதியுள்ளார். சாசனப்படி அறச்செயலைக் கண்காணித்து வரப் பதினொருவர் நியமிக்கப் பட்டுள்ளனர். மூவர் சாசனத்தை நிறைவேற்றி யுள்ளனர். (பெயர்களைச் சாசனத்துட் காண்க.)

இப்பட்டயத்தில் பிழைகள் மலிந்து காணப்படுகின்றன. சோழர், நாயக்கர், மகாராட்டிரர் ஆகிய மன்னர்களின் மரபுத் தொடர்ச்சி கூறப்பெறினும், வரலாற்றாராய்ச்சிக் குரிய தகுதியில் இல்லை. ஏட்டின் பின்புறம் வேளாளரின் சிறப்பியல்புகளாகக் கூறப்பட்டுள்ள பகுதி விளக்க முற்றிலது. ஆயினும், தஞ்சையை ஆண்ட மகாராட்டிர மன்னருள் ஒருவராய பிரதாபசிம்மரின் வரலாற்றுக் காலத்துள் இச் செப்புப் பட்டயமும் இடம் பெறுதல் அறியப்படுகிறது.

## செப்புப் பட்டயம்

### (முன்புறம்)

பழநியாண்டவன் துணை. சுவத்திச்சிறி சுபமத்து ஸ்ரீமன் மகாமண்டலிசுபாளன், அரியராய தளவிபாடன், பாஷைக்குத் தப்புவராத கண்டன், கண்டனாடு கொண்டு கொண்டநாடு குடாதான், சத்தசமுத்திராதிபதி, தொண்டமண்டலத்தாபனசாரியன் பாண்டி மண்டலப் பற்பன சாரியன், சோழமண்டலப் பிறதிஷ்



டாபனசாரியன் துங்கரத்தின மாலிகாபருணன், சங்கீத சாயுத்தப் பவித்தியா விநோதன், துஷ்ட்ட அனுக்கிரக சிஷ்டபரிபாலனன் அஷ்டலோகமும் புரதான யென்மண்டலமும் அன்பத்துஆறு தேசத்துக்குள்ள கற்றை தேசத்தில் சோழ மண்டலத்தில் ராச்சிய பாரம் பண்ணபப்பட்ட சோழ ராசாக்களில், தள்ளி தலை கிள்ளிடான் நூற்பத்தெண்ணாயிரம் சோழனகரில்... டத்துங்கச் சோழன், கலத்துங்கச் சோழன், மாணதிபாச சோழன், விகூராசச் சோழன், ஆளப் பிறந்த சோழன், மண்ணில் கண்ட சோழன், வீரப்பிரதாப சோழன், வித்சயதுங்க சோழன், மனுநீதி கண்ட சோழன், மண்ணளந்த சோழன், சோழழியச் சோழன், தேசாந்திறை கொண்ட சோழன் கேளருயச் சோழன், ராசேந்திரச் சோழன், ருசதாபாலச் சோழன், கரிகாலச் சோழன், காவேரிகரை கண்ட சோழன், கலிங்கந் திரை கொண்ட சோழன், சிவாலயச் சோழன், சிவபிறதிட்டைச் சோழன், மழுவேந்திரச் சோழன், படமெழுபச் சோழன், கிறுமிகண்ட சோழன், செயங்கொண்ட சோழன், சேரன், சோழன், பாண்டியன், மகராசா வீரலெட்சுமி விசைய லெட்சுமி தனலெட்சுமி தானிய லெட்சுமி சந்தானலெட்சுமி சவுபாக்கிய லெட்சுமி பசு லெட்சுமி மகாலெட்சுமி அஷ்ட லெட்சுமியும் பொருந்திய மார்பன், அசுபதி கெசபதி நறபதி மன்ன மண்டலிகா அபகன் க்ஷபகன் பிறவண்டதேவர் காறயானுதயாய மனுவிக்கியானனெத்தி செங்கோல் செலுத்தப் பட்ட சற்கருமம் மறவாத நற்குன்ற யாகேசவேட்டை கண்ட களிய வீரரும வீரப்பறுவதேய மகாராயர், ஆனைகுந்தி வேங்கிடபதி தேவ மகாராயர், சீரங்கத் தேவ மகாராயர். நரசிங்கதேவ மகாராயர், லிங்கதேவ மகாராயர், திக்ஷிணதேவ மகாராயர்...கடாக்ஷத்துக்கு யோக்கிய பாகிண சேவப்ப நாயக்கர், அச்சுதப்ப நயகற்தர், விசையாபுரம் பாரிசா வசிரறன்ன துகோசி

மகருசா அவர்கள், ஏகசி மகாருசா அவர்கள், ச.ற போசி மகாராசா துகொசி மகாராசா பிறதாபுசிங்கு மகாராசா அவர்கள், பிரிதிவிராச்சியம் செங்கோல் செலுத்தா நின்ற

(பின்புறம்)

நாளில் கலியுக ஹூ , , சாலியவாகன சகாத்தம் ஹூ —இதன்மேல் செல்லா நின்ற அஷ்செய ஹூ தையி மீ மங்கள வாறனுள், பூச நச்சத்திரத்தில் குரு பழணியாறுக்கு சொமவார முதல்லெ கோத்திரம் பரிபாலகரான சோழிய வெள் ளாளரணைவர்களும் வெள்ளாழாசரில் களான கொழுந்து (கு)டி வாழயிலெ குடி வெத்திலெ பேட்டை யுள் அணைவரும் மாத மகக்கு, குடிக்கு பணம்-இ வீதம் மாத மாதம் குடுக்கவும், கலியாண வீட்டுக்கு பணம்-கஇ தையி பூசத்து சபரதுக்கு பணம்-க. கெங்காகுல வங்கிஷெ பரிபாலகரான மேழி தரிக்குவனுக, வெசவெந்தா பொங்துவனுக, ஆழி தரிக்குபவர் அருளுவனுக சூழ்கலியை நீக்குகயி நின்று நிலெரு னுக, நீடுழி தாங்குவனுக, காருளனுக, கொழுமிதி கொடுக்குவ வங்காவளமுனே வாரிய முதளிதவா முன் னுகச் சந்தளமாக அறாத்த சிவவாதரி முதுகிற கோற னித்தவர் சேவகுவனே மராபர் மெழிகெத்றதிப பொமிபாலக முதல்வற்க்கு முதல்வராகிய சொழிய வெள்ளாழ பிறதாபத்தினுலே, கிழக்கு மேற்கு தெற்கு வடக்கு நான்கெல்லெக்குட்பட்ட சோழிய வெள்ளா மரணைவரும். அகிலாண்டகோடி பிறுமாண்ட நாயக ரான சருவசீவ பூதாடச்சிகரான், சங்கு சக்ர கேதடகோதண்டம் பஞ்சாயூதரான கயிலாசபதி புத்திரண் பழணியப்பாற்கு, கொடிக்கால் தெருவில் ஆண்டவ ரான பழணியார்க்கு, இந்த சாதனம் சோழிய வெள் ளாழற் அணைவரும் தர்ம சாதனம் குடுத்



தொம். தர்ம சாதனம் வெள்ளாழற் பேற்குடி யான அணைவரும் சம்மதித்து தஞ்சாநகர(த்)து தஞ்ச பண்டார கொஷவிரு நிதியமாக னும் னடத்திவைக்க கடவெனுகவும். யிந்த தரும பூமி ஆகாசம் சந்திர சூரியர்கள் கல்லும் காவேரியும் உள்ள மட்டும் புத்திர பவுத்திர பாரம் பரியாயம் நடப்பிக்கக் கடவெனுகவும். இந்தப்படிக்கு சம்மதித்து சோழிய வெள்ளாழர் அணைவரும் பழணியாருக்கு குடுத்த சாத னம். இந்த தற்மத்துக்கு யாதாமொருத்தர் விகாதம் பண்ணினுல் காசியிலே கெங்கையிலே காரான் பசுவை கொண்ண தோஷத்திலே போக கடவொமாகவும். மாதாவை அரிவதனம் பண்ணின தோஷத்திலெ போக கடவொமாகவும். இந்த படிக்கு சம்மதித்து தரும சாதனம் கொடுத்தோம்.

சோழிய வெள்ளாழற் அணைவரும் சொற்படிக்கு ஆறுமுகத்தா பிள்ளை சாமினுதன் கயிஎழுத்து. ராய ஹத்தொசி அபாலுதராகும்பொசி அபாலுதரா அவர் கள் காறுபாருல் எழுதின சாதனம். ராமபிள்ளை குமா ரன் திருவேங்கிடத்தாபிள்ளை, வழியடுமையாபிள்ளை. குமரப்பபிள்ளை, பூம்பிள்ளை, வாழைத்தோட்டம் தெய்ங்க பெருமாள் பிள்ளை, குப்பனுப்ய பிள்ளை, கோயிலாபிள்ளை மூத்தப்பிள்ளை குமாரன் காத்தபெரு மாள் பிள்ளை, ரெங்கனுதபிள்ளை, லெட்சுமணபிள்ளை, சிதம்பரம் மூத்தபிள்ளை ஆறுமுகத்தாபிள்ளை, சொக்க னுத செட்டியார், இந்தபடி எழுதி கொழுந்துகுடி வாழத் தோட்டங்குடி இவர்கள் இந்த சாதனம் பரி பாலனம் பண்ணவேண்டியது. சிவத்திலிங்க செட்டி யார், சின்னது பிள்ளை தேங்காய் கடைக்கார அணை வரும் இந்த சாதனம் நிறவேத்தவேண்டியது. இந்த சாதனம் வயித்தினுத ச்வாமி அறிய எழுதினது உ.

## 15. வராகியார் கோயிற் கல்வெட்டுகள்

தஞ்சையிலிருந்து திருச்சிக்குச் செல்லும் புகை வண்டிப் பாதை நிலயங்களுள் மூன்ருவதாக உள்ளது பூதலூர் ஆகும். இவ்வூரின் தென்மேற்கு எல்லையாக வுள்ள செம்மை நிறமுடன் கூடிய குளக்கரையில், மிகப் பழமையான பிடாரியார் கோயிலொன்று உள் ளது. இக்கோயிலில் உள்ள தெய்வத்தை, வாஷ்ராகி யார் (வராகியார்) என்று கல்வெட்டுகள் குறிப்பிடி னும், இதுபோது மக்கள் நாச்சியார் என்றே அழைக் கின்றனர். இக்கோயிலின் கருவறை சுவர்ப்புறங் களில் கல்வெட்டுகள் நிறைந்துள்ளன. அவற்றுள் தெளிவாகவும் முழுவடிவிலும் உள்ள கல்வெட்டுகள் மூன்றேயாம். மற்றவை, சிறு சிறு பகுதிகளாக ஒன் றிற் கொன்று தொடர்பில்லாத நிலயில் காணப்படு கின்றன. கல்வெட்டுகள் முறையே பத்து பதினேராம் நூற்ருண்டில் எழுந்தனவாகும். கல்வெட்டுகளில் கோயிலுள்ள பகுதி திருச்செங்குளம் என்று கூறப்படு கிறது. இப் பகுதியை யான் 27—8—58-இல் சென்று ஆராய்ந்தேன்.

கோயில் சிறிய அளவுடையதாயினும், கட்டிட முறைமையால் முதல் இராசராசன் காலத்துக்குரிய பழமையுடன் காணப்படுகிறது. வடக்கு நோக்கியுள்ள இக் கோயிலின் கருவறை தென்புறச் சுவரில், எட்டடி உயரத்திற்குமேல் கல்வெட்டுகள் உள்ளன. இடப்புற முள்ள மிக நுணுகிய அழகிய எழுத்துக்களோடு கூடிய கல்வெட்டு முதல் இராசேந்திர சோழன் மெய்க்கீர்த்தியின் முதற் பகுதியாகக் காணப்படு கிறது. அடுத்து வலப்புறமாக இணைந்த கல்லில் எஞ் சிய பகுதி தலைகீழாக உள்ளது. இதணக்கொண்டு சிந் திக்கின், இடைக்காலத்தில் கோயிலின் அடிப்படை மஞ்சத்திற்கு மேலிருந்த சுவர்ப்பகுதி சிதைவடைந் திருந்த தென்பதும், பிற்காலத்தில் செம்மை செய்த வர்கள் அவற்றை முறையின்றி அடுக்கிவிட்டார்க ளென்பதும் தெரிய வருகிறது.

மற்றும், இந் நாச்சியார் கோயிலுக்கு நேர் வடக்கே அரை கல் தொலைவில், நன்செய்களின் நடுவே பிற்காலத்தில் தோன்றிய சிவன் கோயி லொன்று, திருக்குளம் வாயிலுக்கு முன்னே திகழ மேற்கு நோக்கியுளது. இக் கோயிலின் மகா மண்ட பத்திற்குரிய தென்புறச் சுவரின் மேலைக் கோடியி லுள்ள கல்வெட்டொன்று மான்ய பட்டொன்று, மான்ய பட்டவிருத்தியாகக் கொடுக்கப்பட்ட நிலங் களைப் பற்றிக் கூறுகின்றது. இக் கல்வெட்டு 'பாண்டிய குலாசனி வளநாட்டு பூதலூர் வட்டத்து பூதலூரில்.........' என்று தொடங்குகிறது. இச் சிவன் கோயிலுக்குத் தென்புறமாகத் தொடர்ந்துள்ள நன் செய்களின் கோடியாகவும், நேர் சாலையிலிருந்து ஐயன் கோயிலுக்குப் பிரிந்து செல்லும் மட்சாலையின் வடபுறச் சரிவாகவும் உள்ள புதரினுள், பத்தடி அளவில் நெடிதாகவும் சிற்ப வேலைப்பாடுடனும் கூடிய அழகிய பலிபீடம் முதல் இராசராசன் காலத் திற்குரிய சிற்ப வேலைப்பாடுகளுடன் காணப்படுகின் றது. இச் சின்னம், கட்டுக் கோப்புகள் நெகிழ்ந்து சிதைகின்ற நிலயில் சதுப்பு நிலத்தாக்குதலால் அடி

யோடு சாய்ந்து வருகிறது. தனித்து விளங்குகின்ற இதனைப் பழம்பொருள் பாதுகாப்புக் கழகத்தார் உடனுகக் கண்டு ஆவன செய்யின் நலமாம்.

யான் படியெடுத்துள்ள திருச்செங்குளம் கல்வெட்டு கள்:-

On the West wall of the central shrine:- Ins: NO-I.
(Stone Size:— L-3′×B-17″)

TEXT

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கொப்பரகேசரி பங்மற்கு யா......
2. வது எரி நாட்டு பூதலூர் திருச்செங்குளத்து வா......
3. கு பங்மாஹெஸ் வரர் ஆராய்ந்து வைத்த ஆடு 80......
4. முபதாடுங் கொண்டு நிசதம் முப்பிடி நெ......
5. தித்தவற் அட்டுவொ மா ஞெம் ஞடொடி ஐஞெ......
6. னும் ஐலாகம்பனும் ॥ —

On the East wall of the central shrine. Ins:No-2.

TEXT

1. உஸ்வஸ்திஸ்ரீ கௌவிராஜ கெசரி வர்மர்க்கி யாண்டு 05 ஆவது எரியி நாட்டு பூதலூ(ர்)
2. திருச் செங்குளத்தூர் வாஷ்ராகியார்க்கு பூத லூருடை யான் பாண்டி
3. சாமி பகல் விளக்கு எரிப்பதற்க்கு வைய்த்த ஆடு 35 இங் நாற்பத்தஞ்சு
4. இவ்வாட்டிற் பாதி இருபத்து இரண்டரையும் புனையங்காமன் கெ(ா)
5. ண்டு நிசதம் ஒரொபிடி நெய் அட்டுவதாகவும் சாத்தன் சொழவாயிலு



6. மகம் பி(ள்)ளைகும் இருபத்திரண்டரையுங் கொண்டு நிசதம் ஒரொ பிடி நெ
7. ய்யட்டுவ தாகவும் இவிருவொம் சாவா மூவாப் பெராடாக கொண்
8. டு சந்திராதித்தவற் அட்டு வொமர்ஞெம் இது பன்மா ஹெஸ்வ (ர)
9. கெஷ | D | —ஸ்வஸ்திஸ்ரீ...

ஒஷ South wall. A piece of Inscription.

"நாடாழ்வாங் உளிட்டாரும் ஈழங் கொண்ட...
வல்ல நாடாழ் வாங் உளிட்டாரும்...

## 16. இரண்டு புதிய கல்வெட்டுகள்

செந்தலை என்னும் சிற்றூர் தஞ்சை மாவட்டத்திலுள்ளதாகும். இது, திருக்காட்டுப்பள்ளியிலிருந்து கிழக்கே திருக்கண்டியூர் செல்லும் நேர் சாலையில் மூன்ருவது கல் அளவிலும், தஞ்சையிலிருந்து வடக்கே திருவையாறு செல்லும் பெருவழியிலுள்ள மேற்குறித்த திருக்கண்டியூரிலிருந்து நேர் மேற்காக ஒன்பது கல் அளவிலும் அமைந்துள்ளது. இவ்வூரை, **'ஆற்காட்டுக் கூற்றத்துப் பிரமதேயம் சந்திரலேகைச் சதுர்வேதிமங்கலம்'** என்று இவ்வூரிலுள்ள மிகப் பழைமை பொருந்திய சுந்தரேசுவரர் கோயிற் கல்வெட்டுகள் கூறுகின்றன. இச் செந்தலையும் அதனைச் சார்ந்துள்ள திருக்காட்டுப் பள்ளி, நியமம், திருக்கருப்பூர், அடஞ்சியூர் ஆகிய பகுதிகளும், ஆயிரத்து இருநூறு ஆண்டுகட்கு முன்னர்ப் பல்லவரின் கீழிருந்து அரசாண்ட முத்தரைய மன்னர்களின் ஆட்சிக்குரிய இடங்களாக இருந்திருக்கின்றன என்பது வரலாறு கண்டதேயாம்.

சென்ற இரண்டாண்டுகளில் ஓய்வு கிடைத்தபோதெல்லாம் செந்தலையையும், அதனைச் சார்ந்த மேலே கண்ட சிற்றூர்களையும் வரலாற்று நோக்குடன் ஆய்ந்து வரலானேன். அதுபோது, செந்தலையிலுள்ள



சுந்தரேசுவரர் கோவிலின் வட கிழக்குப் பகுதியில் கட்டப்பட்டுள்ள 'பாரத மண்டபம்' என்று அழைக்கப்படும் நூற்றுக்கால் மண்டபத்தினுள், பழமையான இரண்டு புதிய கல்வெட்டுகள் இருப்பதைக் கண்டேன். இவ்வம்பலம், முதல் ஆதித்த சோழனின் ஒன்பதாவது ஆட்சியாண்டில் (கி. பி. 880-இல்) வயிரமேகப்படாரன் என்னும் அரசியலதிகாரியால் எடுக்கப்பட்டுள்ளதென்றும், அதில் நாள்தோறும் ஸ்ரீ மகாபாரதம் வாசிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பெரும்புலியூர் சிங்கி நந்தீசுவர பட்டனுக்கு, இவ்வூர்ச் சபையார் 53-ஆம் குடும்பிலுள்ள ஒரு பங்கு நிலத்தை இறையிலியாகக் கொடுத்தார்களென்றும் ஷை கோவிலிலுள்ள கல்வெட்டொன்று கூறுகிறது.[1] இப் பாரத மண்டபத்தினுள், யான் கண்டு படியெடுத்துள்ள கீழே காணும் கல்வெட்டுகள், புதியவைகளாகும்.

இக் கல்வெட்டுகளுள் ஒன்று மேற்குறித்த மண்டபத்தின் தென் கிழக்கு மூலையில், இராசகோபுரத்தின் வடபுறத்தை அடைவாகக் கொண்டுள்ள மதிற் சுவரின்மேல் பத்தடி உயர அளவில் வைத்துக் கட்டப்பட்டுள்ள கல்லில் உள்ளதாகும். இவ்விடத்தில் ஏழை மக்கள் நாளும் குடிபுகுந்து, அடுப்பிட்டு அடிசிலட்டிய காரணத்தால் புகை படர்ந்து ஒரே கருமையாகவுள்ளது. அம் மையடைவில் மறைந்துள்ள கற்களுள் ஒன்ருகவே கல்வெட்டுள்ள கல், படுக்கைத் தோற்றத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டுள்ள கல் இரண்டடி மூன்றங்குல நீளமும், ஓரடி நான்கங்குல அகலமும் கொண்டது. இதன் முதற் பகுதி, மட்டமாக இருப்பதால் எழுத்துக்கள் பெரிய வடிவில் தெளிவாகவுள்ளன. பிற்பகுதி சற்றுக் குழிந்தும் தேய்ந்தும் இருப்பதால் எழுத்துக்கள் குறுகியும் தேய்ந்தும் நுணுகியும் உள்ளன. தமிழும் கிரந்தமும் கலந்த பாங்கில் செய்திகள் வெட்டப்பட்டுள்ளன. யான் அக் கல்வெட்டு முழுவதையும்

இரு பிரிவாக மைப்படி (Ink Impression) எடுத்துள்ளேன். மைப்படியின் முதல் பகுதி மிகத் தெளிவாக அமைந்துள்ள தென்பதை இந்நூலின் இறுதியில் உள்ள படத்தில் தெளிவாகக் காணலாம். இக் கல்வெட்டு, திருக்கருப்பூர் என்னும் சிற்றூரில் இருந்த கோவிலைச் சேர்ந்ததாகக் காணப்படுவதால், இதற்குத் 'திருக்கருப்பூர்க் கல்வெட்டு' என்று பெயரிட்டுள்ளேன். திருக்கருப்பூரைப் பற்றிய ஆய்வுரையினைப் பின்னர்க் கூறுதும்.

I. A. R. No. 63 OF 1897.

1. திருக்கருப்பூர்க் கல்வெட்டு:—

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கொவிராஜ கெசரிவர்மர்க்
2. கு யாண்டு உ ஆவது எரியி நாட்டு
3. (ஆ) ப்பிகுடி நடுவிற்க் கூற்று நாட்டி
4. நக்கனுக கண்டராதித்த முத்தரயனெ
5. ஆற்காட்டுக் கூற்றத்து மீ பிரம்பி
6. த் திருக்கருப் பூர் ஸ்ரீ கொயிலில் ஸ் த
7. பந மண்டப அஹில...
8. மண்டலா தி த் த சு...
9. த்தர் ணிர்த்தர்க்கு செவ...
10. ர் பெர் இம் ம...
11. ண் ட ப ம் இ ர ண் டு
12. க ரை யி ல் ெ க ங்
13. ெ கக் கரைத் து ர் க் ெ ககு
14. வ ல ம்
15. ல ர் தி த ன் தா...ச...
16. வ க் க ன் ஆ
17. த ா ணி க் கு ப க ல்
18. வி ள க் கு
19. ல அ ம் ஸ ர (ங்) த
20. து வ ா ர க் கீ க ல்
21. இ ங் த பூ ப த ன ம்.

திருக்கருப்பூர் கல்வெட்டு (செங்கலை)

(புதிய கல்வெட்டு)



N.B.-This ink impression was taken on the spot by the author

மற்றும், இப் பாரத மண்டப வாயிலின் வலப்புற மிருந்து உள் நோக்கி நிற்கும் தூண்களின் வரிசை யில், ஆருவது தூணை அடுத்துள்ள இடத்தில் மேல் விதானத் துலாவாக ஒரு கல்வெட்டுள்ள தூண் பயன் படுத்தப்பட்டுள்ளது. இத் தூண், நியமம் ஆயிரந் தளியில் விளங்கிய கோயிலைச் சார்ந்தது. தூணின் கண் நெடிதாக உள்ள முகப்பட்டைக் கேற்ப ஒன்றின் கீழ் ஒன்ருக முப்பத்தொரு வரிகளே தெரியும். இக் கல் வெட்டு, முடிவடையாத செய்தியோடுள்ளது. இக் கல்வெட்டை ஏணியின் உதவியால் படியெடுக்க முடிந் தது. இவ்வாருக யான் கல்வெட்டுக்களைப் படி யெடுத்தற்கு வேண்டிய உதவிகளைச் செய்த செந்த லைச் சுந்தரேசுவரர் கோயிற் கண்காணிப்பாளரும், அன்பருமாய காலஞ்சென்ற திரு. K. சிதம்பரம் பிள்ளை அவர்களை நினைவு கூருமவிருப்பதற் கில்லை.

## 2. நியமம் ஆயிரந்தளி கல்வெட்டு:—

1. ஸ்வஸ்தி ஸ்ரீ
2. கொவிராஜகெ
3. சரி பந்மற் க்
4. கி யாண்டு
5. ங ஆவது
6. எ யினுட்டுஆ
7. ட்டுப்பள்ளி நி
8. யமத் து
9. சகஸ் வ
10. ரஸ் ர லிங்கேஸ்வர
11. த்து ம ஹாதெ...
12. தொட்டப் பாழ் இ
13. வ்வூர் வியாபாரி
14. அரை தூருடை
15. யாந் அறிஞ்சி
16. கைபெருமார
17. னுக்கு காணி செ
18. சய்து குடுத்த நி
19. லத்துக்கு எல்லை
20. கிழ் பாற்கெல்லை
21. பரகார்ய மண்ட
22. லத்து எல்லை க்
23. கு மெற்கும் தெந்
24. பாற்கெல்லை கிழ
25. க் கொடிவாய்க் காலு
26. க்கும் கறடிகைச் செ
27. ய் மும்மா வ ரை க்
28. கு வடக்கும் மெல்
29. பாற் கெல்லை ஸ்ரீ கொ
30. யி லிந் அடைந்
31. தகிமெழதிரு......

மேற்கண்ட இவ்விரண்டு கல்வெட்டுகளும் தோன்றிய ஊர்களாகிய திருக்கருப்பூர், நியமம் ஆயிரந்தளி ஆகியவற்றைப் பற்றிய குறிப்பினைத் தருவது இன்றியமையாததாகும்.

முதல் கல்வெட்டுக்குரிய திருக்கருப்பூர், செந்தலையைச் சார்ந்து கிழக்கே உள்ள சிற்றூராகும். இவ்வூர் இப்பொழுது கருப்பூர் என்றே வழங்கப்படுகிறது. இவ்வூரின் கிழக்குப் புறமாகக் குடமுருட்டி ஆற்றின் தென்கரையில் பெரிய அளவில் எல்லா அங்கங்களுடன் கட்டப்பட்டிருந்த கோயிலொன்று, சிதைந்து கருவறை மட்டும் எஞ்சியதாக விமானமின்றி மண்டப வடிவில் பிளவுகளோடு நிற்கும் காட்சியை இன்றும் காணலாம் இப் பகுதியைச் சார்ந்துள்ள பரந்து கிடக்கும் மேட்டுப் பகுதியில் சமணருடைய கோயில் இருந்து அழிவுற்றதாகக் கூறப்படுகிறது. இப் பகுதியை, திரு T. A. கோபிநாத ராயரவர்கள் மிக முயன்று ஆங்காங்கு அகழ்ந்து பார்த்ததாகத் தக்கவர் கூற அறிந்தேன்.

இத் திருக்கருப்பூரைச் சார்ந்து கிழக்கே உள்ள சிற்றூர் 'நடுக்காவேரி' என்பதாகும். இங்குள்ள சிவன் கோயிற் கருவறையின் நுழைவாயில் மேற்சட்டமாக அமைக்கப்பட்டுள்ள கல், நிலைச் சட்டக் கல்லோடு ஒன்றாத வகையுடைய துண்டுக்கல்லாகும். இதில், தலைப்பும் முடியும் குன்றிய நிலையில்,

1. வறக் ,கூற்றத்து ஸ்ரீ பராந்தக சதுர்வேதி மங்கலத்து.........
2. தேவ கிரமவித்தன் நில விலை கொண்ட.........
3. ஸ்ரீஸஸ்ர தேவ மங்களத்தில் விலை கொ.........
4. ஆதித்த வதிக்கு மேற்கு கணபதி......

என்னும் கல்வெட்டுச் சொற்றொடர்கள் காணப்படுகின்றன. இச் சிறு பகுதி கல்வெட்டுக் கல், திருக்கருப்பூரில் சிதைந்துள்ள கோயிலைச் சார்ந்தது. சிதைந்த



கோயில்களின் பகுதிகளைப் பிற்காலத்தில் பயன்படுத்த முற்பட்டதின் விளைவே இதுவாகுமென்பதை நன்கு அறிய வியலுகின்றது. இச் செயலுக்குட்பட்டகற்களுள் ஒன்றாகவே, செந்தலைச் சிவன் கோயிலிலுள்ள திருக்கருப்பூர் கல்வெட்டுள்ள கல்லும் இடம் பெற்றுள்ளதென்பது தெளிவாம்.

இரண்டாவது கல்வெட்டுக்குரிய நியமம் ஆயிரந்தளி என்னும் சிற்றூர், செந்தலைக்கு மேற்கே மூன்று கல் அளவிலுள்ள திருக்காட்டுப்பள்ளியைச் சார்ந்துள்ளதாகும். இப் பகுதியில் காணப்படும் பெரிய திடலில் பல வேறுபட்ட நிலையில் இலிங்கங்கள் அங்குமிங்கும் கிடக்கின்றன. இதன் காரணமாகவே இப் பகுதியை 'இலிங்கத் திடல்' என்று ஊரார் இன்று அழைக்கின்றனர். இப் பகுதியில், பன்னூறு இலிங்கங்களோடு விளங்கிய பெரிய கோவிலொன்று இருந்து பாழ்பட்டுள்ள தென்பதை இடத்தின் பாங்கால் நன்கு அறியலாம். அக்கோயிலே நியமம் ஆயிரந்தளியென்பதாகும். அப் பெருங் கோயிலுக்கு அங்கமாக நின்ற தூண்களுள் பல, செந்தலைச் சுந்தரேசுவரர் கோயிலின் பல பகுதிகளிலும் வேறுபட்ட நிலையில் பயன்படுத்தப் பட்டுள்ளன. அவற்றுள் ஒன்றே, பாரத மண்டபத்தின்மேல் துலாக்கல்லாகவுள்ள கல்வெட்டுத் தூணும்.

ஆயிரம் ஆண்டுகட்கு முன்னர், சைவ சமணப் பூசல்களுக்குரியதாக நியமம், நியமம் ஆயிரந்தளி, செந்தலை, திருக்கருப்பூர் அடுத்துள்ள பூந்துருத்தி ஆகிய பகுதிகள் இடம் பெற்றுள்ளன. சமயத்தை நிலைநிறுத்தும் முயற்சியின் பயனாய் உருவிழந்தும் சிதைந்தும் போன கோயில்கள் இப் பகுதிகளிற் பலவாகும் பிற்கால மன்னரும், அரசியற்றலைவர்களும், ஊரார்களும் சிதைந்த கோயில்களின் பகுதிகளைக் கொண்டு விரும்பிய தெய்வங்கட்குக் கற்றளியாகவும்

மண்டபங்களாகவும் நிறுவியுள்ளனர். இக் கருத்தைச் செந்தலைச் சிவன் கோயிலிலுள்ள கல்வெட்டுகளாலும், நடுக் காவேரி சிவன் கோவிலிலுள்ள கல்வெட்டுப் பகுதியாலும் நன்கறியலாம். இதுபற்றிய விரிவான கட்டுரையொன்று 'தமிழ்ப் பொழில்' துணர்-35, மலர்-2-இல் எழுதியுள்ளேன்.

## ஆராய்ச்சிக்குரிய குறிப்பு :—

'செந்தலைச் சுந்தரேசுவரர் கோயிலிலுள்ள மகா மண்டபத்தில், நியமித்திருந்த பிடாரியார் கோயிலில் இருந்தும், முத்தரைய மன்னர்களைப் பற்றிய கல்வெட்டுப் பாடல்களோடு கூடியதுமான தூண்களே இடம் பெற்றுள்ளன' என்பது இதுவரையில் வரலாறு கண்டுள்ளதாகும். இக் கருத்து, இக் கட்டுரையால் வரலாற்றியல்புடன் வளர்ந்து, அவற்றுடன் திருக்கருப்பூர், நியமம் ஆயிரந்தளி ஆகிய இடங்களில் சிறந்து விளங்கிப் பின் கால வெள்ளத்தாற் பாழ்பட்ட கோயில்களின் பகுதிகளும் இடம் பெற்றுள்ளன என்னும், ஆராய்ச்சியுரை பெறுதற்குரிய தாகும். மற்றும், இக்கோயிலின் தென்கிழக்கு மூலையில் இடிந்த நிலையிலுள்ள குறுகிய மண்டபத்தின் வாயிலில் நரசிம்ம பல்லவனுடைய காலத்திற்குரிய சிற்ப இலச்சினையுடன் இரண்டு கல்வெட்டுள்ள தூண்கள் நிறுத்தப் பட்டுள்ளன. அவற்றில் காணப்படும் செய்திகளை நோக்கின், ஸ்ரீகண்டபுரம் என்னும் கோயிலிலிருந்தும் தூண்கள் எடுத்துவரப் பெற்றிருக்க வேண்டுமென்பது புலனுகிறது. மற்றும், இராச கோபுரத்தின் முன்புறமாக் இரு பக்கமும் உயர்ந்த நிலையில் ஆவரண மண்டபங்கள் உள்ளன. அவற்றின் முகமண்டப வாயிலின் மேற்புறம் துலாக் கற்களாக, எட்டுப் பட்டைகளுடன் கூடியதும், அடிப்பகுதி திரட்சியுடன் சிற்ப வேலைப் பாடுடன் கூடியதுமான, கல்வெட்டுள்ள தூண்கள்



பயன்படுத்தப் பட்டுள்ளன. மேலும் இக் கோயிலில் ஆங்காங்கே சமண தீர்த்தங்கரர்களின் வடிவுடன் கூடிய பல்லவர்காலச் சிற்பச் சுவடுகள் பல்வேறு நிலையில் காணப்படுகின்றன. இதுபற்றி அறிஞர் ஆராய்தல் வேண்டி, உரிய சில படங்களுடன் 'தஞ்சைசெய்திக்கதிர்' என்னும் தாளில் 6—9—57-ல் கட்டுரையொன்று விரிவாக எழுதியுள்ளேன்.

---

## 17. கொல்லியும் குற்ருலமும்

ஒரு நாட்டின் பழமை, குறிஞ்சி நிலங்களிலேயே பெரும்பான்மையும் நிலைத்து நிற்கின்றது. தமிழகத்தின் பழமையினையும் மூன்று பெரும் மலைப் பகுதிகளே மிகுதியாகக் கொண்டு இலங்குகின்றன. இவற்றுள், சங்க காலந்தொட்டு வரலாறு கண்டு வருவது கொங்கு நாட்டிலுள்ள கொல்லி மலையும், பாண்டிய நாட்டிலுள்ள பொதிய மலையுமேயாகும். எஞ்சிய ஒன்று நீல மலைத் தொடராகும்.

யான், 1957-மே திங்களில் முதற்கண் கூறிய இரண்டு மலைகளையும் ஒப்பு நோக்கியறிய விரும்பிச் சென்றேன். முதலில் கடையேழு வள்ளல்களுள் ஒருவனுய வல்வில் ஓரி ஆண்ட கொல்லியின் வளத்தைக் காணச் சென்றேன்.

கோவை, சேலம் ஆகிய இரண்டு மாவட்டங்களையும் கொங்கு நாடு என்பர். சேலம் மாவட்டத்தின் தென் கிழக்குப் பகுதியைச் சார்ந்து அமைந்துள்ளது கொல்லி மலைத் தொடராகும் இம்மலையின் பொதுத் தோற்றத்தினை, கதிரவன் எழுகின்றபோதோ, அன்றி மறைகின்றபோதோ தொலைவிலிருந்து கண்டால், ஓங்கி வளர்ந்தும் நிமிர்ந்தும் சாய்ந்தும் பருத்தும் மெலிந்தும் சேர்ந்தும் பிரிந்தும் படர்ந்தும் நாற்



கோணப் பாங்கில் அளவிடற்கரிய பரப்பினைக் கொண்டதாக அமைந்து விளங்குகிறது. எனவே தான், இதைச் சதுரகிரி என்று அழைத்தனர் போலும்! இம் மலையின் மேற்றளத்தின் கிழக்குப் பகுதியில் அறப்பளீசுவரம் என்னும் பாடல் பெற்ற சிவன் கோயில் உள்ளது.

இம் மலையின் மேல் செல்லுவதற்கு நாற்புறமும் சேந்தமங்கலம், பள்ளிப்பட்டி, துறையூர், தம்பம்பட்டி போன்ற பல பகுதிகள் இருக்கின்றன. ஆயினும், யான் அறிந்த வகையில் மலையின் தென் மேற்காக வுள்ள பள்ளிப்பட்டி என்னும் சிற்றூரே அடிவாரத்தை ஒட்டி உள்ளதாகும். இம் மலைக்குத் தலையைப் போன்று தென் கிழக்கு மூலையில் நெடிதாக எழுந்து முகடிட்டுத் தனித்து நிற்கும் மலையைத் 'தலைமலை' என்பர் இது முசிரி என்னும் நகருக்கு ஐந்துகல் மேற்கே உள்ள தொட்டியம் என்னும் ஊருக்கு வடக்காக ஐந்து கல் தொலைவிலுள்ளது.

கொல்லி மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ள ஊர்களில் வாழும் மக்கள் மலைமேல் செல்லுவதற்கு மிகவும் அஞ்சுகிருர்கள். மலையின் மேற் சென்றவுடன் அங்குள்ள குளிர் காற்றும், நீரும் சுரநோயை உண்டு பண்ணுவதாயும், அம்மலைச்சுரம் கண்டால் பிழைப்பது அரிதென்றும் அவர்கள் திண்ணமாக நம்புகிருர்கள். இஃது உண்மையாயின், கொல்லி என்னும் பெயரும் பொருத்தமுடையதுதான். ஆயினும், மலைமீதுள்ள விளைபொருள்களை ஆங்கு நிலைத்து நின்று வாழ்ந்து வரும் மலையாளிகள் என்னும் பழங்குடி மக்களிடம் பண்டமாற்று முறையிலும் குறைந்த மதிப்பிலும் பறித்து வரும் பழக்கமுடையார் சிலர், நாள்தோறும் மலை மேற் சென்றுவரும் பழக்கம் இல்லாமலும் இல்லை. அது தவிர, மலையின் மேல் வாழும் அம்மக்களின் முன்னேற்றங் கருதி, அரசாங்கம் செய்து வரும்

முயற்சிகளுள் ஒன்றாய பள்ளிக்கூடங்களும், தபால் போக்குவரத்தும் அருகிய நிலையில் ஆங்காங்கே வளர்ந்துவருகின்றன. சேந்தமங்கலம் பகுதியில் கிருத்து மார்க்கத்தார் மலைவாழ் மக்களைச் சீர்திருத்தும் பணியில் இறங்கி யுள்ளனர்.

மலையின் மேல் பல முறை ஏறிப் பழக்கப்பட்ட நண்பரொருவருடன் யான் பள்ளிப்பட்டியிலிருந்து ஏற முற்பட்டேன். அச் சிற்றூரி லிருந்து மலையின் அடிவாரம் உயர்ந்து செல்லுகிறது. ஒரு கல் அளவு சென்றவுடன் ஆங்குக் குறுகிய குன்றொன்று குமரவேள் கோயிலுடன் அமைந்துள்ளது. அக்குன்றைக் கூவமலை யென்பர். இங்கிருந்தே மலை மீது ஏறுவதற்குரிய குறுகிய பாதை தொடங்குகிறது. அப் பாதை பெரும்பாலும் பாழி என்று அழைக்கப்படும் அருவியின் நீரோட்டப் பகுதியாகவே அமைந்துளது. அச் சிறு நெறியைப் பின்பற்றிச் செல்லுங்கால் இருபுறமும் அடர்ந்து உயர்ந்த புதர்கள் சுவரிட்டதைப் போன்று இருக்கின்றன. காட்டில் பூத்துள்ள பல்வகை மலர்களின் மணங்களும் ஒருங்கு சேர்ந்து வெறிமணமாக வீசுகிறது. ஈக்களின் ஒய்...ய் என்ற இரைச்சலின் இடையே வண்டுகளின் ரீங்காரமும் இடைவிடாது கேட்கிறது. இவ்வாறு இரண்டு கல் தொலைவு சென்றவுடன், இடையே ஓரிடம் சற்று வெளியாகக் காணப்பட்டது. அங்குள்ள பாறைக் குழிவுகளில் நீர் தேங்கியுள்ளது. அப் பகுதியைச் சார்ந்து அடைவாகவுள்ள புதரிடையே குறுக்காகச் சிறு புழைகள் போன்று நெறிகள் காணப்பட்டன. அவற்றை யான் என்னவென்று நண்பரிடம் வினவியபோது, காட்டில் வாழும் பன்றி, நரி, சிறுத்தைப் புலி, கரடி போன்ற விலங்குகள் நீரை நாடி வந்து செல்லும் பாதைகள் என்று அவர் தெளிவுபடுத்தினார். இங்கிருந்து வலப்புறமாகச் சுழன்று பாதை மேலே



செல்லுகிறது. பாதையின் அமைப்பு பெரும்பாலும் பரற்கற்களும் வேர்களும் பாறைகளும் கொண்டதாகும். இடையே சில இடங்களில் புளிய மரங்களும் பலாமரங்களும் உள்ளன. அவற்றின் நிழலில் சற்று இளைப்பாறலாம். இவ்வாறு ஐந்துகல் தொலைவு வழிக் கொள்ளின் கொல்லி மலையின் மேற்றளத்தை அடையலாம்.

மலைமீது இயற்கையாக விளையும் பலா, கொய்யா, வாழை ஆகிய பழங்களையும், மிளகு, ஏலக்காய், தேன், மட்டிப்பால், பலாக்கொட்டை ஆகிய பொருள்களையும் அடிவாரத்தில் காத்துள்ள வியாபாரிகளிடம் கொடுத்துப் பொருள் பெற, மலைவாழ் மக்கள் அப் பொருள்களுடன் நாள்தோறும் இறங்கி வருகிறார்கள். குறிப்பிட்ட நாட்களில் அடிவாரத்தில் உள்ள ஊர்களில் கூடும் சந்தைகட்கும் பெருந்திரளாக வந்து செல்லுகிறார்கள். நான் செல்லும்போது, அத்தகைய பொருள்களுடன் கீழே இறங்கி வரும் ஒரு தொகுதியினரைக் காணும் வாய்ப்புக் கிடைத்தது.

ஆடவரும் மகளிரும், நரம்பும் தசையும் வலுக் கொண்டுள்ள திண்ணிய தோற்ற முடையவர்களாகவும் கருநிற முடையவர்களாகவும் காட்சியளிக்கின்றனர். சில சிறுவர்களுடைய வயிறு நோய் கொண்டு உப்பியதைப் போலிருந்தது. அதுபற்றி யான் அவர்களை வினவியபோது, மலைமீதுள்ள மூலிகையொன்று பூக்கும்போது பிறக்கும் குழந்தைகட்கும், பெரியவர்களில் சிலருக்கும் அப்பூவின் வாடையால் வயிற்றில் கட்டி உண்டாகி விடுகிறதென்றும், அந்நோய் சில ஆண்டுகளில் மற்றைய பச்சிலைகளின் வாடையினால் சிதைந்து நலம்பெறுகிறதென்றும் கூறினர். இருபாலரும் தடித்த ஆடைகளையே உடுத்தியுள்ளனர். மகளிருள் சிலர் சட்டை அணிந்துள்ளனர். ஒரு பெண் மூன்று பருத்த பலாக்கனிகளை ஒன்றாக இணைத்துத்

தலைமீது வைத்துக்கொண்டு, பாறைகளின் மீது இலகுவாகத் தாண்டித் தாண்டி இறங்கி வரும் காட்சி, பழந் தமிழ் மக்களின் பாங்கிற்கோர் எடுத்துக்காட்டாக இருக்கிறது. அவர்கள் பேசும் மொழி தமிழின் சிதைவுகளாகவே பெரும்பான்மையும் உள்ளன.

மலையின் மேற்றளத்தில், இயற்கையாகவே வாழை, பலா, நாரத்தை, கொய்யா ஆகிய பயன்மரங்கள் ஆங்காங்கு செறிந்தும் தனித்தும் வளர்ந்துள்ளன. தளமான பகுதிகளில் மலைவாழ் மக்கள் புன்செய்ப் பயிர்களாகத் தினை, சோளம் ஆகியவற்றைப் பயிர் செய்வதோடு, அழகாக ஓடும் பாழிகளுக் கருகில் மலை நெல்லையும் விளைவிக்கிறார்கள்.

'சாரல் அருவி பயமலை' என்று இம் மலையைப் புறநானூறு புகல்வதற்கு இலக்காய், சிறு பாழிகள் பெரும்பாறைகளின் மீதிருந்து வீசி விழுந்தோடும் பகுதிகளில் பலாவும் வாழையும் பயனுடன் வளர்ந்துள்ள காட்சி மாட்சியோடு விளங்குகிறது. மலையின் முகடுகளிலும், சார்பிலும், இடுக்கிலும், தவழ்ந்தும் படர்ந்தும் எழுந்தும் அமைந்தும் நிற்கும் முகிலினங்களின் தோற்றம், 'மழையணி குன்றம்' என்று மாண்புடன் புலவர் கூறிய பெருமைக்கு இலக்காக நிற்கின்றது. ஒரு முகட்டில் ஏறிய பிறகு, மற்றொரு முகடு எதிரிட்டுத் தோன்றி நமக்கு மலைப்பைக் கொடுக்கும் சிறப்பால் 'பிறங்குமிசைக் கொல்லி' என்னும் பெயரமைதியைப் பிழையாது காண முடிகிறது. மலையின் மேலுள்ள பள்ளத்தாக்குகளில் பலா பழுத்து மணக்கும் இயல்பு 'பயங்கெழு பலவின் கொல்லிக் குடவரை என்னும் பான்மையைக் கருத்துக்கு விருந்தாக்குகிறது.

இத்தகைய எழிலோடு விளங்கும் கொல்லி மலையின் சிறப்பால் வழிநடந்த சோர்வே தெரியவில்லை. கொல்லிமலையின் மீது வாழும் பழங்குடி மக்களின்



வாழ்க்கை, மிக்க எளிமையுடையதாகவே இருக்கிறது அவர்கள் தங்கள் வாழ்க்கைக்குரியனவாகக் குறுகிய குடிசைகளைத் தொகுதியாக அமைத்துக் கொண்டுள்ளனர். ஒரு சில குடிசைத் தொகுதிகள் சேர்ந்த பகுதியை, நாடு என்றே அழைக்கின்றனர். அவ்வாறு கொல்லியின் தென்பகுதியில், வாழவந்திநாடு, குண்டூர் நாடு, வலம்பூர்நாடு, பழஞ்சூர்நாடு என்னும் நாடுகள் நல்ல தமிழ்ப் பெயர்களுடன் உள்ளன. மலர்களின் நறுமணமும், பலாப்பழங்களின் தெளிமணமும் நமக்கு மயக்கமூட்டுவதாயினும், எழிலரசியாக இயற்கை வளனுடன் வீற்றிருக்கும் வரலாறு கொண்ட கொல்லிமலையின் மேலிருந்து இனிது வாழும் மக்களின் வாழ்வே வாழ்வாகும்.

கொல்லிக்குக் குற்றாலம் ஏற்றமேயாகும். மேற்குத் தொடர்ச்சிமலையின் தென்கோடியாகவுள்ள பகுதிகளில் சிறந்தது குற்றால மலையாகும். இங்கு மலை மூன்று சிகரங்களாக உயர்ந்து எழுந்து திரிகூடமலை என்னும் பெயரைப் பெற்றுள்ளது. நான் சென்றபோது சாரல் நன்முறையில் அமைந்திருந்தது. புராணங்களும், பிரபந்தங்களும், திருக்குற்றாலம், திரிகூடமலை, சாரல் இவற்றைப் பற்றிய பலவாறு புகழ்ந்து கூறியிருக்கின்றன. ஆயினும் நான் நேரிற்கண்ட காட்சிகளைச் சுருங்கக் கூறுவதே இக்கட்டுரையாகும்.

திருக்குற்றாலம் பெருமை பெற்றதற்குச் சித்திரா நதி எனப்படும் சிற்றாற்றின் நீர்வீழ்ச்சிகளே முதற்காரணமாகும். தேனருவி, செண்பகாதேவி என்ற இரண்டு நீர்வீழ்ச்சிகள் மலையின் மேற்பகுதிகளில் முறையே அமைந்துள்ளன. மூன்றாவது நீர்வீழ்ச்சியே மக்கள் எளிதில் பயன்படுத்தும் அளவிலுள்ள புகழ்பெற்ற அருவியாகும். இப்பகுதியை மாவடித்துறை என்பர். இவ்வருவிக்கு மிக்க அண்மையிலுள்ள குற்றாலநாதர் கோயிலின் பக்கத்தே நின்று அதன் மாட்சியைக்

காண்போமாகில், உள்ளம் குளிர்ந்து உவகை மிகுந்து எண்ணமெலாம் இறைவனின் ஆற்றலையே கண்டு திளைக்கும்.

இயற்கையின் அழகுக்கு இட்ட அணிகலன் போல அருவி தோன்றுகிறது. அருவியினிடம் உண்டாகும் இடைவிடா ஆரவாரமும், அதிலிருந்து தெளிக்கும் தூவானமும், அதன் இயல்பான வெண்மை நிறத் தோற்றமும், கதிரொளியால் ஏழு வண்ணங்களோடு மிளிரும் ஏற்றமும், எவர் மனத்தையும் கொள்ளைகொள்ளும் சிறப்பு வாய்ந்துள்ளன. வானிலிருந்து வழிவதைப்போன்றுள்ள அருவியின் இருபுறமும் அடர்ந்துள்ள மரங்களிலிருந்து, அழகிய பச்சிளங்கொடிகளும் பூக்களும் இயற்கை இட்ட மாலைபோலத் தொங்கும். பசுமையுடன் மேலே உயர்ந்து நிற்கும் பாறைகள் நீலவானைப் பிடிக்க நிமிர்ந்து நிற்பதைப்போல் இருக்கும். அங்குக் கருமேகங்கள் ஒன்றோடொன்று மோதி அதிரும். பக்கமெலாம் பெண்குரங்குகள் அடிவயிற்றில் குட்டிகளைக் கட்டிக் கொண்டு அங்குமிங்கும் மரத்துக்கு மரம் தாவிச் செல்லும். மந்திகள் பலாமரக் கிளைகளில் வாலைச் சுருட்டிப்பிணைத்துக்கொண்டு தலைகீழாகத் தொங்கி ஊசலாடும். மலைச் சரிவிலுள்ள மரம் செடி கொடிகளையும், பாறைகளையும் ஊடுருவிக்கொண்டு, புரண்டும் மெலிந்தும் பொங்கியும் வழிந்தும் இரைந்தும் பற்பல அருவிகள் ஓடிவரும். விட்டு விட்டு வீசும் சாரல், இயற்கை ஓவியமாகத் திகழும். இவற்றையெல்லாம் மெல்லிய திரையால் மறைப்பதைப்போன்று அடிக்கடி மழையுடன் அழகு காட்டும்.

குளிப்பதற்கு ஏற்றதாயுள்ள மாவடித்துறை அருவி 286 அடி உயரத்திலிருந்து கீழே விழுகிறது. இவ் வருவி செங்குத்தாய் உள்ள மிகவும் உயரமான இடத்திலிருந்து பொங்குமாங்கடல் என்ற பள்ளத்தில்



விழுந்து அங்கிருந்து மெல்லிய அருவியாய் வெண்ணிறத் துகிலை விரித்தாற்போலப் பொங்கிப் பூமியை நோக்கி வழிந்து விழுகின்றது. இதன் அடியில் முப்பதின்மர் வரிசையாக நின்று குளிக்கலாம். தலையில் எண்ணெய் தேய்த்துக் கொண்டு நீராடின் நீரின் வேகம் தலையில் விழுந்ததும், சீயக்காய் இல்லாமலேயே எண்ணெய் அறவே நீங்கி விடுகிறது. அருவியில் நீராடியவுடன் பசியும் மிகுதியாகிறது. என்னே இயற்கையின் ஆற்றல்!

திரிகூடமலையின் உயரம் 5135 அடி என்பர். மலையின்மேல் ஏலக்காய், சாதிக்காய், கிராம்பு, மிளகு, குங்கிலியம், தேன், மங்குஸ்தான் பழம், பலாப்பழம் முதலிய பயனுள்ள பொருள்கள் கிடைக்கின்றன.

திருக்குற்றாலத்தில், இயற்கையின் எழுச்சியாகத் திகழும் ‘சாரல்’ எவ்வாறு உண்டாகிறதென்பதை அறிய முயல்வதும் இயற்கையேயாகும். மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் உள்ள ஆரியங்காவுக் கணவாய் ஒரு பெரிய சமவெளியாக அமைந்துள்ளது. அக் கணவாய்க்கு மேற்கே எழும் தென்மேற்குப் பருவக் காற்றும் மழையும் அக்கணவாயின் கீழ்ப்பக்கத்தில் இருக்கின்ற குற்றாலத்தில் இளங்காற்றாகவும் சிறு மழையாகவும் மாறுகிறது. அக் குளிர்ந்த காற்றினையே சாரல் என்றும், காற்றினால் உண்டாகும் மழையே சாரல் மழை என்றும் கூறுவர். ஆண்டுதோறும், வைகாசி முதல் ஆவணி முடிய இங்கு இச் சாரல் வீசுகிறது. காற்று மக்கள் நுகர்ந்து இன்புறுவதற்கேற்ற ஆற்றலுடையதாக அமைந்திருப்பதால் இக்காலம் மக்களுக்குக் களிப்பூட்டுவதாக அமைந்துள்ளது. சாரல் என்பதற்குத் தென்றலுடன் கூடிய தூறல் என்றால் மிகையாகாது.

பகற்காலத்தில், சாரல் தனித்தும் வெயிலுடன் தவழ்ந்தும் மழையுடன் மாண்புற்றும் வீசும். அது

போது, நாம் சாரல் மழையில் நனைந்தும் வெயிலில் காய்ந்தும் செல்லவேண்டிய நிலை ஏற்படினும், சூழ்நிலையில் உண்டாகும் இன்பத்தால் உடலின் மேலுள்ள ஆடைகள் நனைந்ததும் உலர்ந்ததும் நினைவுக்கே வருவதில்லை. அத்தகைய பாங்கில் குற்றாலத்தில் சாரற் காலம் திகழுகிறது. திருக்குற்றால மலையின் வளமாம் இயற்கைப் பேரழகில் இறைவனின் ஆற்றலைக் கண்டு இன்புறலாம்.

A voice is in the wind; I do not know;
A meaning on the face of the high hills
Whose utterance I cannot comprehend,
Something is behind them; that is God.



பட்டடை (அடைகல்)

# 18. பட்டடை, புதைவடை, தாழிகள்

மலைகளிலுள்ள செங்குத்தான பாறைகள், இயற்கையின் எழிலோடு நிற்கின்றன. அவை பன்னூறு ஆண்டுகள் கதிரவனாலும், மழை, பனி ஆகியவைகளாலும் உண்டாகும் வெப்ப தட்ப நிலைகளுக்கு உள்ளாகி வருகின்றன. அதன் காரணமாகவே காலப் போக்கில் அப் பாறைகள் கரடு முரடான பலகை உருவில் பொலிவு பெற்றுப் பெயர்ந்து விடுகின்றன. இவ்வாறு இயற்கையில் கிடைத்த கற்பலகைகளைக் கொண்டு, நிலத்தின் மேல் நிமிர்ந்த பாங்கில் இவ்வாறு அடைவாகப் புதைத்து நிறுத்தி, அதன் மேல் ஒரு கற்பலகையால் மூடி, அதனுள்ளும் புதிய கற்கால மக்கள் வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. இத்தகைய பாறைப் பலகையாலான குடிலைப் 'பட்டடை' (அடைகல்) என்று கூறலாம். அப் பட்டடைகட்குரிய வாயிலடைப்பும் பயன்படுத்தி வந்துள்ளனர்.

மற்றும், புதிய கற்காலமக்களே மண்ணால் பாண்டங்கள் செய்து சுட்டுக் கெட்டிப்படுத்தத் தெரிந்து கொண்டார்கள் என்றும், அவர்களே இறந்தவர்களின் உடல்களைப் பெரிய வடிவோடு வாயகன்ற சுட்ட

பாணைகளில் வைத்து மண்ணுள் அடக்கம் செய்து வந்தனர் என்றும், இக் காலம் கி. மு. 4000 ஆண்டு கட்கு மேற்பட்டதாகும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.

மலைக்குகைகளையும், பட்டடைகளையும் பெரும் பாலும் தங்கள் இருப்பிடமாகக்கொண்டு வாழ்ந்த மேற்கூறிய புதிய கற்கால மக்கள், சவங்களை அடக் கம் செய்வதற்கு மேலே கூறப்பட்ட சுட்ட மண் பாண்டங்களாகிய தாழிகளைமட்டும் பயன்படுத்திஞ ரில்லை. இயற்கைச் சூழலில் கிடைத்த கற்பலகை களைக் கொண்டு, நிலத்தினுள் வாய்திறந்த பேழை யைப் போன்று அமைத்து, அதனுள் முதுமக்களை இட்டுப் பரற்கற்களால் பதுக்கி, மற்ருெரு பலகைக் கல்லால் மேலடைப்புச் செய்து வைக்கும் வழக்கத்தை யும், முதுமக்களை அடக்கம் செய்த தாழிகளை ஷி கல் லறையுள் வைக்கும் வழக்கத்தையும் கையாண்டுள்ள னர். இத்தகைய கல்லறைகளைப் 'பதுக்கைப் புதை வடை' என்று சிறப்பித்துக் கூறலாம்.

பட்டடையில் வாழ்க்கையும் புதைவடையில் முது மக்களை இடுவதுமாய பழக்கங்கள் நாகரிககாலம் வரையில் நெடுங்காலம் தொடர்ந்து வந்திருக்கிறது. இதனைச் சங்க இலக்கியங்களுள் ஒன்ருன புறநானூற் றுப் பாடல்களிலும் ஆங்காங்கு சிறிதளவு காண முடிகிறது.

### (i) கோனுட்டில் யான் கண்ட பட்டடைகளும் புதைவடைகளும் :—

தென்னுட்டில் சமணருடைய வாழ்க்கை இரண்டா யிரம் ஆண்டுகட்கு முன்னரே இருந்திருக்கிறது, யான் சென்ற பத்தாண்டுகளாகவே அத்தகைய இடங்களை எல்லாம் நேரிற்கண்டு படமெடுக்கவும் உண்மை வரலாற்றை அறியவும் எடுத்துக்கொண்ட



முயற்சிகளுள் சித்தன்ன வாசல் மலைப்பகுதிகளை ஆராய்ந்து வந்ததும் ஒன்ருகும். சிற்றண்ணல் வாயில் என்னும் செம்மையான பெயருடைய ஊரைச் சார்ந்த மேற்குறித்த மலையின் கிழக்குப் புறமுள்ள குகையில், பிராமி மொழியில் வெட்டப்பட்டுள்ள கல் வெட்டோடு கூடிய கற்படுக்கைகளைக் கொண்டும், மற்றும், சில சரித்திரச் சுவடுகளைக் கொண்டும், இம் மலையில் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரேயே சமணபௌத்த துறவிகளுடைய வாழ்க்கை இருக்கிற தென்னும் உண்மை புலனுகிறது. இம் மலையுடன் கூடியதாகக் கோனுட்டுப் பகுதியி லடங்கிய நாரத்த மலை, குடுமியான்மலை ஆகிய மலைகளையும், மலையடிப் பட்டி, செட்டிப்பட்டி, கொடுங்கோளூர் ஆகிய ஊர் களையும் யான் ஆராய்ந்து வந்தபோது காட்டுப் பகுதி களுள் பட்டடைகளும், புதைவடைகளும் பல இருப்ப தைக் கண்டேன். இவைகளுள் பல சமண முதுமக்க ளின் எஞ்சிய வாழ்க்கைக்கு இலக்கானவைகளாகும். அவற்றுள், சிற்றண்ணல் வாயில் மலையடிவாரத்தின் தென் பகுதியில் நேர்சாலையைச் சார்ந்து உள்ளதும், இதுபோது பழம் பொருள் பாதுகாப்பாளர்களால் காக்கப்படுவதுமாய சிதைவடைந்து கிடக்கும் முது மக்கள் புதைவடைப்பகுதியும் ஒன்ருகும்.

யான், சிற்றண்ணல் வாயில் மலையின் கிழக்குப் புறம் இயற்கையாக அமைந்துள்ள சமணர் குகை யினைப் புகைப்படமெடுக்க, 1952-இல் முயன்றேன். அதன் காரணமாகப் புதுக்கோட்டையிலிருந்து அன்னவாசல் (அண்ணல் வாயில்) வழியாகத் திருச் சிக்குச் செல்லும் நெய்யாவி வண்டியில் (Bus) இடம் பெற்று, இடைவெளியிலுள்ளதும், புதுக்கோட்டைக்கு மேற்கே ஆறு கல் தொலைவிலுள்ளதுமாய பெருஞ்சினை என்னும் பெயருடைய சிற்றூரினைக் கடக்கும் இடத் தில் இறங்கினேன். அவ்விடத்திலிருந்து நேர் வட

மேற்காகத் தெரியும் சிற்றண்ணல் வாயில் மலையைக் குறியாய் வைத்துக்கொண்டு காடுகளின் வழியே குறுக்கிட்டுச் செல்லத் தொடங்கினேன். அப்பொழுது காலை ஒன்பது மணியாகும். கதிரவனும் தன் வெம்மையைக் காட்டத் தொடங்கினன். தொலைவில் தோற்றமளிக்கும் மலை, தெற்கு வடக்காக நீண்டு திருமால் பள்ளி கொண்டிருக்கும் பாங்கில் இருக்கும் இயற்கை எழிலை என்னென்பது! அம்மலையின் தென் பகுதியிலேயே சமணர்குகை கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இருநூறடி நீளத்திற்கு மேலாக நீண்டு, பதினைந்து அடி முதல் நான்கடி வரையில் விரிந்து குறுகியோடிய திறப்புடன் உட்குழிந்து செல்லும் குகையின் வடிவத்தினையும், அது அமைந்துள்ள மலைப்பகுதியின் மேற்புற அமைப்பினையும் தொலைவிலிருந்து காணும்போது, அன்னப்பறவையொன்று திறந்த வாயுடன் அமர்ந்திருக்கும் வடிவில் தோற்றமளிக்கிறது.

என்னுடைய நேர் பார்வைக்கு மலை தெரியும்படியாக எனது வழியை மாற்றி மாற்றி அமைத்துக் கொண்டேன். நெறியல்லா நெறியை யான் மேற்கொண்டதனால் முட்புதர்களும் காய்ந்து பதிந்து கிடக்கும் சுள்ளிகளும் என்னுடலில் இட்ட இலைச்சினைகள் பலவாகும் கரும மொன்றையே கண்ணாகக் கொண்டு வழி நடந்த எனக்குத் துணையாக இருந்தது நடுப்பகல் உணவிற்காக யான் புதுக்கோட்டையிலேயே தயாரித்துக்கொண்ட நான்கு இட்டலிகளுடைய கடிதப் பொட்டலத்துடன், தொலைநோக்கி, புகைப்படப்பெட்டி ஆகியவையும் இடம் பெற்றுள்ள பை ஒன்றேயாகும். இவ்வாறு யான் வழி நடந்தபோது காட்டினுள் எங்கோ ஒருவர் விறகு வெட்டும் ஓசையைக் கேட்டேன். அடுத்து ஒரு பெரும் புதரினுள் அச்சமூட்டும் குமுறலையும் கேட்டேன். அப்பொழுது



என் மனம் பட்ட பாட்டினை ஆண்டவனும், ஆதவனுமே அறிவர்.

என்ன செய்வது! பாதி வழி வந்தாயிற்று. எதிரிலோ மலையிலுள்ள குகையும் தெளிவு பெறுகிறது. எனவே ஆசை முன்னே ஈர்க்க, அச்சம் கால்களில் ஆட்டம் கொடுக்க மேல் நடந்தேன். (இதுபோது இக்காடுகள் அழிக்கப்பட்டு, ஆங்காங்கே புன்செய் நிலங்களாகத் திருத்தப்பட்டுள்ளன.) சிறிது வழி சென்றவுடன் ஓர் ஏழை விறகு வெட்டி என்னைச் சந்தித்து, இங்கு வழியே இல்லை, குறுக்கு வழியாகத் தெற்கு நோக்கிச் சென்றால் நேர் சாலையை எட்டிப் பிடித்து விடலாம் என்று என்நிலைக்கு இரங்கி வழி காட்டினர். எனது குறிப்பறியாது நிலைமைக்கு மட்டும் இரங்கி வழிகாட்டிய அம் முதியவரிடம் மலையிலுள்ள குகையைப் படமெடுக்கும் எனது முயற்சியை வெளியிட்டேன்.

இவ்வாறு யான் விறகு வெட்டியைச் சந்தித்த இடம் சிற்றண்ணல் வாயில் மலையின் கிழக்கு முகத்திலிருந்து ஒரு கல் தொலைவிலாகும். மேல் யான் காட்டினுள் தடம் பெற்றுச் சென்றபோது இடையே ஓரிடத்தில், அங்கொன்றும் இங்கொன்றுமாகக் குறும்பாறைகள் யானைக் கூட்டம் நிற்பதைப் போல் இருந்தன. அப்பாறைகட்கிடையே யுள்ள பகுதிகளில் நிலமட்ட அளவாகவும், உயர்ந்தும் கற்பலகைகளாலான முதுமக்கள் புதைவடைகள் இருக்கக் கண்டேன். அவற்றுள் கற்குவியல்கள் நிறைந்திருந்தன. உள்ளே இருப்பதைக் காணும் அவாவினால், எனது பையை அருகில் உள்ள பாறை யொன்றின்மேல் வைத்துவிட்டு, மிக விரைந்து அப்புதைவடையொன்றனுள் இறங்கிக் கற்குவியல்களை வெளியேற்றினேன். நீண்ட சதுரமாக அமைந்த அப்புதைவடையின் உட்பரப்பை இரு பகுதிப்படுத்திக் குறுக்கே ஒரு கற்பலகை நின்றது.

அவ்வடைப்புப் பலகையினை மூடிய நிலையில் காற்பந்து அளவிலிருந்து கைப்பந்து அளவாகக் குவிந்து கிடந்த கற்களையும் வலிந்து வெளியேற்றினேன். அவ்வாறு அகற்றும்போது மிகத் தடிப்பாகவும் வாயகன்றும் உள்ள தாழியின் சிதைந்த விளிம்பு தெரிந்தது. அப்பொழுது யான் ஓரளவு களைத்திருந்தேன்; ஆதலினால் கண்ட புதை பொருளைப் பற்றிச் சிந்திக்கும் முயற்சியில் சற்று ஈடுபடலானேன். ஒரு நொடியில் சென்ற காலத்தில் யான் கண்ட அனுபவத்திலும் படித்த வரலாறுகளிலும் சிந்தனை அலைகள் சென்றன. யான் இளைஞனாக இருந்தபோது, கும்பகோணத்தை அடுத்துத் தெற்கே நான்கு கல் அளவிலுள்ள பட்டீசுவரத்தில் நிகழ்ந்த திருவிழாவிற்குச் சென்றிருந்தேன். அப்பொழுது அவ்வூரைச் சார்ந்து வடபுறமுள்ள **'சோழ மாளிகை'** என்னும் சிற்றூரின் புறத்தேயுள்ள தரிசினை, உழவர்கள் நன்செய்யாகத் திருத்தும்போது கண்டெடுத்து உடைத்த முதுமக்கள் தாழிகளைப் பார்த்திருக்கிறேன். அக்காட்சிக்கு இலக்காகக் கற்புதைவடையினுள் யான் கண்ட தாழி இருந்ததெனினும் அதைவிடச் சற்று வாயகன்று இருந்தது. தாழியினுள் மணலும் கற்களும் மல்கிச் செறிந்திருந்தன மழை பொழியுங் காலத்தில் புதைவடையினுள் நீர் வழிந்தோடி அவ்வாறான நிலையை ஏற்படுத்தியது போலும்!

கதிரவனும் உச்சிக்கு வருவதற்குச் சற்றுக் கிழக்கே சாய்ந்திருந்தான். இந்நிலையில் யான் மேலும் தாழியினுள் இருக்கும் பொருளை ஆராய முற்படின், மலையின் கிழக்குப் புறமாகப் படர்ந்துள்ள கதிரவனின் ஒளி மாறி நிழற்படிந்துவிடும். அவ்வாறு நேரிடின் புகைப்படம் எடுத்தற்குரிய தகுதியும் நியதியும் தவறிவிடும். எனவே யான் கற்புதைவடையினுள் தாழியினைக் கண்ட நிலையைப் படமெடுக்க முயன்

புதைவடை



**காமிரா தானே இயங்கி எடுத்த படம்**
(The Author was researching-self Photo)

றேன். பத்தடிக்கு அப்பால் இருந்த சிறு பாறையின் மேல் காமிராவை அமைத்துப் புதைவடை நன்கு தெரியுமாறு சரி செய்து வைத்தேன். பின்னர் தானே இயக்கிவிடும்போது ஏற்படும் சிறு அசைவுக்கும் இடங் தராதபடி சிறு கற்களைக் காமிராவுக்கு இணைப்பாகச் செய்தேன். தானே இயக்கிப் படமெடுக்கும் நுண் கருவியை பக்குவகமாக இயக்கிவிட்டு, விரைந்து சென்று புதைவடையினுள் யான் முன்னர்த் தோண்டிய பாங்கில் அமர்ந்துகொண்டேன். எனது காமிராவும் தனது கடமையைத் தவருமல் முடித்ததற்கு அடையாளமிட்டதைப் போல் 'கிளிக்' என்ற ஓசையுடன், அகல விழித்து நோக்கும் பான்மை பெற்று நின்றது. (இவ்வாருன எனது வேடிக்கைப் படத்தினை இந் நூலின் இறுதியில் காணலாம்.)

இந் நிகழ்ச்சியை முடித்துக்கொண்டு, மிக்க களைப்போடு வழிக்கொண்ட எனக்குச் சிற்றண்ணல் வாயில் சமணர் குகை மிகத் தெளிவாகத் தெரியலாயிற்று. காலந் தாழ்த்தாமல் குகையின் தோற்றத்தை மூன்று படப் பிடிப்புக்களால் பதிவு செய்துகொண்டேன்.[1] நிகழ்ந்தது சரியானது என்பதைச் சுட்டிக் காட்டுவதைப் போல் சற்று நேரத்தில் கதிரவனும் சரியாக உச்சிக்கு வந்து நின்ருன்.

பின்னர் மலையைச் சார்ந்துள்ள பகுதி சிறிது வழி நடக்க ஏற்றதாக இருந்ததால் மலையைத் தென்புறமாக வலம் வந்து பிற்பகல் ஒருமணியளவில் மலையின் தென் மேற்குச் சரிவின்கீழ் உள்ள அய்யன் கோயிலைச் சார்ந்த அடவியின் நிழலில் சற்று ஓய்வு எடுத்துக் கொண்டேன். பசியும் களைப்பும் சேர்ந்து உறவாடியதால் பையிலுள்ள பொட்டலத்தை எடுத்துக்கொண்டு

1. குகையின் படம் 'தென்னுட்டில் சமணர்' என்னும் இவ்வாசிரியர் நூலுள் இடம் பெறுகிறது.

வடக்காக அமைந்துள்ள கணபதி சுனையை நாடிச் சென்றேன். அதுபோது அம் மலையிலுள்ள பாதுகாக்கப்பட்ட சின்னங்கட்குக் காவலதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கும் செவ்வந்தி என்னும் திருநாமமுடையவர் என்னைச் சந்தித்து வழக்கம்போல உரையாடினார்.

இவ்வாறாக யான் மலையிலுள்ள குகையைப் படமெடுக்கச் சென்றபோது, இடையே கற்புதைவடைகளும் தாழிகளும் இருக்கக் கண்டேன். இத் தகைய தாழிகளை நன்முறையில் எடுத்துத் திருக்கோகரணம் பொருட்காட்சிசாலையில் வைத்திருப்பதை 1954-ஆம் ஆண்டில் அறிய முடிந்தது.

## (ii) தென்காசியில் யான் கண்ட தாழிகள்:—

இரண்டாவதாக யான் கண்டுபிடித்த தாழி தென்காசியிலுள்ளதாகும். தென்காசி விசுவநாதர் கோயிலிலுள்ள பராக்கிரம பாண்டியனின் பாடற் கல்வெட்டுகளையும், சிற்பங்களின் சிறப்பினையும் குற்றால அருவியின் கோலத்தினையும் கண்டு மகிழ, 16-5-1957-இல் அங்குச் சென்றிருந்தேன். தென்காசி உயர்நிலைப்பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராகவுள்ள திரு. ம. குற்றாலம் என்னும் நண்பர் நான் தங்கியிருந்த பொதிய மலையின் வளங்களையும், கோயிற் கல்வெட்டுகளையும் காண ஆவன செய்தார்.

ஒருநாள், நாங்கள் இருவரும் தென்காசியிலிருந்து எமது கல்லூரியிற் பயின்று வந்த இராமசாமி, இராசேந்திரன் ஆகியோருடன் நேர் சாலை வழியாகக் குற்றால அருவிக்கு நடந்து சென்றோம். இடையே சாலைக்கு வடபுறமுள்ள சிறு குன்றையும், இருபுறமுமுள்ள நெடிய பாறைகளையும் யான் அருகில் சென்று பார்க்க விழைந்தேன். சாரலும் மழை உருவில் பெய்து கொண்டிருந்தது. துணைவர்களும் எனது விருப்பத்திற்கு ஒருப்பட்டனர். எனவே, **'வாலியம்பொற்றை'**



என்று அழைக்கப்படும் அக்குன்றின் மீது ஏறத் தொடங்கினோம். இடையே கள்ளிமரங்கள் சூழ நின்ற ஒரு நெடிய பாறையில் அரைகுறையான நிலையில் சிவபெருமானின் தாண்டவக் கோலம் செதுக்கப்பட்டிருந்தது. பராக்கிரம பாண்டியன் தொடங்கிய கோயில் திருப்பணிக்குரிய சிற்பங்களுள் அதுவும் ஒன்று போலும்!

பின்னர், பொற்றையின்மீது ஏறினோம். மிகப் படர்ந்து சரிவாகவுள்ள அதன் ஏற்றப் பகுதி மண்ணும் பாறையும் இணைந்த பாங்கில் அமைந்திருக்கிறது. மண்ணுள்ள பகுதிகளில் ஆங்காங்கே சிறு வட்டக் குழிவுகள் பரற்கற்கள் நிறைந்த சுவடுகளுடன் காணப்பட்டன. அவற்றைக் கண்டவுடனேயே புதுக்கோட்டைச் சீமையிலுள்ள காடுகளில் யான் கண்ட கற்புதைவடைகளின் பொதுத் தோற்றம் நினைவுக்கு வந்தது. எனவே நண்பர் குற்றாலம் அவர்களிடம் 'இக் குழிவுகளில் முதுமக்கள் தாழிகள் இருக்கவேண்டும்' என்று குறிப்பாகக் கூறினேன். முதலில் சிந்தித்த அவரும் பின்னர்க் கருத்தை உட்கொண்டு எனது நோக்கத்திற்கு இயைந்தார். அதன் காரணமாக, அருகில் மண்ணெடுக்கப்பட்டிருந்த பள்ளமொன்றைச் சார்ந்திருந்த பரற்குழிவு தோண்டப்பட்டது. சிறிது நேரத்தில் யான் கருதியதைப் போலவே பெரிய தாழியின் விளிம்பு புலப்பட்டது. ஆர்வத்தோடு நாங்கள் அத் தாழியை முழு வடிவில் எடுக்க முயன்று கைகளையே கருவியாக்கி மண்ணைத் தோண்டித் தாழியை அசைத்து எடுத்தபோது அந்தோ! தாழியின் உடற்பாகம் உடைந்துவிட்டது. உள்ளே நிறைந்திருந்த மணலைக் கவனத்துடன் சோதனையிட வேண்டுமென்ற குறிப்பின்படியே முயற்சிகள் நடந்தன. அதுபோது அத்தாழியினுள் ஒரு மனித எலும்புக்கூடு மணலோடு மடிந்த நிலையில் இருந்தது. தடிப்பாக

வும் வாயகன்றும் உயர்ந்திருந்த அப்பெரிய தாழியின் குறுகிய கழுத்துப் பட்டையைத் தொடர்ந்து பருத்துள்ள உடற் பகுதியின் குறுக்களவு இரண்டடியிருக்கும். உடற்பகுதியிலிருந்து தொடரும் அடிப்புறம் கும்பமாகச் சென்று முகடிட்டிருந்தது. வாயை மூடியிருந்த கூர்முனைச் சட்டி சிதைந்ததற்குரிய சின்னங்கள் காணப்பட்டன.

தாழியின் உள்ளே இருந்த எலும்புக் கூட்டின் அமைப்பைக் கொண்டு, முதுமக்களை அடக்கம் செய்யும் பாங்கு ஒருவாறு புலனாயிற்று. உடலைத் தாழியின் உள்ளே புகவிடும்போது முன்னதாகப் புகவிடும் கால்களை உடனாக மடக்கிக் குற்றிடச் செய்து, இடுப்பை வளைத்து உட்கார்ந்த நிலையில் கைகளைக் கால்களுக்கு இடையே செலுத்தி, N போன்ற வடிவில் அடைவாக அமைக்கப் பட்டிருந்தது. கைவிரல்கள் இருக்க வேண்டிய இடத்திற் கருகில் ஒரு சிறு மட்கலயம் கருமை நிறமுடன் முழுவடிவில் காணப்பட்டது. விளாங்காய் அளவிலுள்ள அக்கலயத்துள் சவ அடக்க முறைப்படி ஏதாவது உணவு வைப்பர் போலும்! தாழியின் உள்ளே நிறைந்திருந்த மணல் தூய்மையாகவும் பெரு மணலாகவும் அடைவாக இருந்தது. இந்நிலை, முதுமக்களை அடக்கம் செய்யும் முறைமையைப் பற்றிய ஆய்வுக்கு உரியதாகும்.

இவ்வாறாகத் தென் காசிக் கருகிலுள்ள வாலியம் பொற்றையில் கிடைத்த தாழியின் இயல்பினைக் கொண்டு சிந்தித்துப் பார்த்தால், தாழியினுள் முதுமக்களை உரிய சடங்குகளுடன் அடக்கஞ் செய்து, வாயைச் சட்டியால் மூடி, தரைமட்ட அளவிற்கு மண்ணிட்டுச் சமன் செய்து, தாழி இடப்பட்டுள்ள இடமென்பதற்குரிய அடையாளமாக மேலே பரற்கற்களால் சிறு வட்டக் குறி செய்து, பண்டைக்கால

முதுமக்கள் தாழி

(வாலியம் பொற்றை - தென்காசி)



தாழியினுள் கண்ட எலும்புக்கூட்டின் அமைப்பினைக்கொண்டு ஆசிரியரால் எழுதப்பெற்ற படம்.

மக்கள் வைப்பர் என்னும் வழக்கம் ஒருவாறு புலனா கிறது.

தென்காசித் தலபுராணத்தின் பகுதியாகிய வாலி வரம் பெற்ற படலத்தில், 'கிட்கிந்தை மன்னனை வாலி, தென்காசியிலுள்ள வாலியம்பொற்றையை யடைந்து, அங்குள்ள குகையில் தங்கினான். நாள் தோறும் திரிகூட மலைக்குச் சென்று அருவியில் நீராடி வாலிநாதனை நிறுவி, காசி விசுவநாதரையும் வழிபட்டுத் தவமிருந்தான். அதன் பயனாக, தன்னை எதிர்ப்பவர் ஆண்மையில் அரைப்பகுதியைத் தான் இலகுவில் பெறுகின்றதோர் ஆற்றலைப் பெற்றான்' என்று, வாலியம் பொற்றையைப் பற்றிய கதை கூறப் பட்டுள்ளது. புராணக் கதையாயினும், பழைமையை உணர்த்துகின்றது. எனவே, வாலியம்பொற்றை பழைமையானது என்பதுடன் அதன் சரிவில் யான் கண்ட தாழியின் அமைப்பினையும் உள்ளிருந்த மனித எலும்புக் கூட்டின் நிலைமையினையும் ஒப்பிட்டு ஆரா யின், அத்தாழி ஆயிரம் ஆண்டுகட்கு முற்பட்டதாதல் வேண்டும்.

## 19. தஞ்சையில் நாயக்கர் ஆட்சி

பண்டைக்காலத் தமிழகத்தின் ஒருபகுதி தஞ்சை நாடு. இங்கு ஒன்பதாவது நூற்றாண்டின் இடையில் சோழர் ஆதிக்கத்தை மீண்டும் தலையெடுக்கச் செய்தவன் விசயாலயன் ஆவான். இவனே சரித்திரகாலச் சோழர்களின் பேரரசுக்குத் தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு அடிகோலினவன். இவனது காலம் முதற் கொண்டு பதின்மூன்றும் நூற்றாண்டின் பிற்பகுதி வரையில் தஞ்சைவள நாட்டினைச் சோழர் பரம்பரையினரே ஆண்டு வந்தன ரெனலாம்.

பதினான்காம் நூற்றாண்டில் தென்னிந்தியாவில் விசயநகர அரசு தலையெடுக்கலாயிற்று. நாளடைவில் அப்பேரரசிற்கு அண்டை நாடுகள் இரையாயின. பதினைந்தாம் நூற்றாண்டின் முதற் பகுதியில் தஞ்சை நாடும் இப் பேரரசில் இணைப் புண்டது. விசயநகர நாயக்கர்கள் தஞ்சையில் ஆட்சி செலுத்தி வந்தனர்.

பதினாறும் நூற்றாண்டில் விசயநகரப் பேரரசு பாமினிய முகமதிய மன்னரால் அழிக்கப்பட்டது. விசய நகரமும் பாழடைந்தது. அக்காலை அப் பேராசைச் சார்ந்திருந்த குறுநில மன்னரும், நாயக்கரும் தத்தம் நாட்டில் தனியாட்சி நிறுவினர். அவ்வண்ணம் தஞ்சையில் தனியாட்சி படைத்த நாயக்கர்



'சேவப்ப நாயக்கர்' ஆவர். எனவே தஞ்சையில் நாயக்கர் ஆட்சியை நாட்டியவர் இவரே.

சேவப்பரின் தந்தை 'திம்மப்ப நாயக்கர்'; தாய் 'வையமாம்பாள்'; மனைவியார் 'மூர்த்திமாம்பாள்'. மூர்த்தி மாம்பாள் விசயநகர மன்னரின் மனைவியரான திருமலையம்மனுடைய தங்கையார். மூர்த்திமாம்பாளைச் சேவப்ப நாயக்கருக்கு மணம் புரிவித்த காலையில் விசயநகர அரசர் தஞ்சை நாட்டை அவ் வம்மையாருக்கு மஞ்சட் காணியாய் அளிக்க, தஞ்சையின் ஆட்சி சேவப்பருக்கு உரித்தாயிற்று.

இவர் திருவண்ணாமலைக் கோயிலில் ஓங்கி உயர்ந்துள்ள கோபுரத்தைக் கட்டிக் கோயிலின் புறத்தே தோன்றும் குளத்தையும் வெட்டியுள்ளதால் சைவ சமயப் பற்றுடையவரென்பது நன்கு புலனாகின்றது. தவிர, இதுபோது தஞ்சைக் கோட்டையினுள் தென்மேற்கு மூலையிலுள்ள சிவகங்கைக் குளத்திற்கு நீர் வழங்கி வரும் சேவப்பனேரியை (சேப்பனேரி என்பர்) இச் சேவப்பரே வெட்டு வித்தார்.

சேவப்பர் 23 ஆண்டுகள் ஆட்சி புரிந்திருந்து கி. பி. 1572-இல் தம் மகனார் அச்சுதப்ப நாயக்கருக்கு அரசினையளித்து அகன்றார். அச்சுதப்பர் 1614-வரையில் ஆண்டார். தஞ்சையைத் தலைநகராகக்கொண்டு ஆண்ட நாயக்க மன்னர்களுள் இவரது ஆட்சிக் காலமே பொற்கால மெனலாம்.

இவர் இயற்கையிலேயே நற்பண்புகள் வாய்ந்தவர். மக்களிடத்து மிகுந்த பற்றுடையவர். இவருக்கு அமைச்சராக அமைந்திருந்தவர் அறிவாற்றலிற் சிறந்த கோவிந்த தீக்கத ரென்பவராவர். அச்சுத நாயக்கர் அரங்கநாதனிடம் அளவிலா அன்புடையவர். அப் பெருமாளுக்கு நிலனும் கலனும் வழங்கியுள்ளார். தில்லை, திருப்பதி, காளத்தி முதலிய தலங்களில் உள்ள கோயில்களிலுந் திருப்பணி செய்வித்

துள்ளார். அத்துடன் மக்களின் வளத்தினைக் கருதினவராய்க் காவிரியாற்றின் கல்லணையைச் சீர் திருத்தியுமுள்ளார். அச்சுதப்பர் தமது இறுதிக் காலத்தில் தமது மகனார் இரகுநாத நாயக்கருக்கு அரசுரிமை யளித்து எஞ்சிய வாழுநாளைத் திருவரங்கத்திலேயே கழித்துத் திருநாட்டை அலங்கரித்தார்.

அச்சுதப்பரின் காலத்தில் தஞ்சை வளநாடு மிகுதியாகப் பரந்திருந்தது; வடக்கே திருமுது குன்றமும், கிழக்கே வங்கக் கடற்கரையும், தெற்கே சேதுவும், மேற்கே திருச்சிராப்பள்ளியும் எல்லைகளாயின.

இரகுநாத நாயக்கர் கி. பி. 1616-இல் அரசரானார். மெய் வீரமும் மெய்யறிவும் ஒருங்கே வாய்க்கப் பெற்றவர் இவரே. எனவே தான் இவரது காலத்தில் பகைத்தெழுந்து கல்லணையைத் தகர்த்த பாண்டிய வமிசத்தானொருவனைப் படை கொடு சென்று, போரிட்டு, அவனைப் புறங்காட்டி ஓடச் செய்தார். அப் பாண்டியனும் பகையை யொழித்து இவரது நட்பை நாடித் தன் மகளை இவருக்குத் திருமணம் புரிவித்தான். இரகுநாதர் புலவர் பெருமக்களை மிகுதியாகப் போற்றியவர்.

இரகுநாதருக்குப் பின் விசயராகவ நாயக்கர் ஆண்டார். இவரது காலத்தில் திருச்சியில் ஆண்டவர் சொக்கநாத நாயக்கர் என்பார். தஞ்சையைக் கைப்பற்றி ஆளவேண்டுமென்பது சொக்கநாதரின் வேட்கை. இவ் வேட்கையைத் தணித்துக் கொள்ளத் தருணம் பார்த்திருந்தார். விசயராகவருக்கு ஒரு புதல்வி; சொக்கநாதர் அப்பெண்ணை மணக்க விரும்பித் தூதனுப்பினார். விசயராகவரோ அம் மணத்திற்கு இணங்கவில்லை. சொக்கநாதர் கோபமுண்டு தஞ்சையைத் தாக்கிப் பிடிக்குமாறு ஒரு படையைத் தமது தளபதி வேங்கடகிருட்டினப்ப நாயக்கரின் தலைமையில் அனுப்பினார்.



ஓரிரவுக்குள் ஓடிவந்த அப்படை வல்லம் கோட்டையை வகையாகப் பிடித்துக்கொண்டு தஞ்சையையும் காலையில் தாக்கத் தொடங்கியது. திடீரெனத் திருச்சிப் படை தஞ்சையைத் தாக்குவதைக் கேட்ட விசயராகவர் சிறிதும் கலக்கமுற வில்லை. இயன்ற அளவு படையைத் திரட்டி எதிரியைத் தாக்கச் செய்தார். எனினும் தமது படை எளிதில் எதிரிகட்கு இரையாவது கண்டு, அரண்மனையிலுள்ள பெண்டிர் அனைவரையும் தனியிட மொன்றில் சேர்ந்திருக்கச் செய்து, புதல்வர் மன்னாரப்ப நாயக்கருடன் போர்க் கோலங் கொண்டு போர்முகம் நாடிச் சென்றார். இதற்குள் திருச்சிப்படை கோட்டைக்குள் புகுந்து விட்டது. இராசகோபால சுவாமி கோவிலுக்கு அண்மையில் நிகழ்ந்த கொடிய போரில் விசயராகவ நாயக்கரும், மன்னாரப்ப நாயக்கரும் பெரு வீரத்துடன் போர் புரிந்து படுகாயமுற்று வீழ்ந்தனர். இச் செய்தி அரண்மனையி லிருந்த பெண்டிர்க்கு எட்டிற்று; உடனே, அவர்கள் தத்தங் கையிலிருந்த வாளால் ஒருவரை யொருவர் வெட்டிக் கொண்டு மாண்டனர்; அவர்கள் வீழ்ந்த இடமும், அரசர் கட்டளையைச் செலுத்தவிருந்த அக்கிராசு என்னும் வீரனால் வெடி வைத்துத் தகர்க்கப்பட்டது. தம் பெண்டிர் பகைவரின் கைப்படாதிருக்க வேண்டுமென்பது விசயராகவரின் எண்ணம் போலும்!

எனவே. தஞ்சை நாடு சொக்கநாத நாயக்கருக்கு உரிமையாயிற்று. ஆயினும், சிதைந்த அழகாகத் திகழ்ந்த அரண்மனையில் சிறிதளவும் இருந்து ஆட்சி புரியத் துணியாத அவர், தமது செவிலித்தாயின் மகனாகிய அளகிரி என்பாருக்கு அவ்வரசை நல்கித் தாம் திருச்சிக்குச் சென்றார்.

சச்சந்தனின் அன்பினால் பெற்ற அரசை, அப்படியே விழுங்க முயன்ற கட்டியங்காரனைப் போல,

அளகிரியின் மனமும் திரிந்தது. அதனுல் தம் அரசர் சொக்கநாத நாயக்கரை மதியாமல் தனியாட்சி செலுத்த முற்பட்டார். இதை யறிந்த சொக்கநாதர் மனம் புழுங்கினுராயினும் அளகிரியின் பேராசைக்கு முடிவு கட்டாமல் ஆளட்டு மென்றே விட்டு விட்டார்.

இந் நிலையில், விசயராகவரின் அரசியல் கணக்குத் தலைவரொருவர், வெங்கண்ணுவையர் என்னும் பெயருடையவர்; நுண்ணறிவுடையவர். சேவப்பர் பரம்பரைக்குரிய அரசை அளகிரி கைப்பற்றி இருப்பது அவருக்கு ஒருவாருன மனக் கொதிப்பை மூட்டிற்று. இதற்குச் செய்வது யாதெனச் சிந்திக்கலானுர்.

விசயராகவரின் மகன் மன்னுரப்பன் மரித்தகாலை அவருடைய ஆண் மகவு எஞ்சியிருந்தது. அக் குழந்தையைத் தாதி யொருத்தி தந்திரமாக எடுத்துக் கொண்டு, தஞ்சை விட்டகன்று நாகைப்பட்டினம் போய்ச் சேர்ந்தாள். அங்கு ஒரு செட்டியார் வீட்டையடைந்து குழந்தையின் வரலாற்றினை விரித்துரைத்தாள். செட்டியாரும் மனமிரங்கி அப்பிள்ளையை வளர்த்து வருவாராயினர். செங்கமல தாசு என்ற பெயருடைய அப்பிள்ளையும் பன்னிரு பிராயம் வரையில் செட்டியார் இல்லத்திலேயே வளர்ந்து வந்தான்.

வெங்கண்ணுவையர் செங்கமல தாசரின் நிலைமையை அறியலானுர்; உடனே அவர்பால் புதிய மனவெழுச்சி தோன்றிற்று. செங்கமலதாசைத் தஞ்சைக்கு அரசராக்க உறுதி கொண்டார். அப்பால் அரசிளங் குமரனை அழைத்துக் கொண்டு வடக்கிலுள்ள பீசப்பூருக்குச் சென்று, அந்நாட்டு முகம்மதிய மன்னனை யணுகி, விநயமாய்ப் பேசி, செங்கமல தாசரின் வரலாற்றைக் கூறி, உதவி புரியும்படி வேண்டினுர்.

சில நாட்களில் பீசப்பூர் படையொன்று தஞ்சையை நோக்கிப் புறப்பட்டது. அதனை நடத்தியவர்



வெங்காசி என்பவர். அவர் மராத்திய குலத்தவர்; ஆதிசிவாசி மன்னரின் உடன் பிறப்பாளர். வெங்காசியின் படையெடுப்பை ஒற்றர்களின் வழியே யறிந்த அளகிரி, சொக்கநாதரின் உதவியை நாடினுன். கிடைத்திலது. எனவே அச்சத்தோடும் வெறுப்போடும் அய்யம்பேட்டையில் பீசப்பூர் படையை எதிர்த்தான் அளகிரி. இறுதியில் அளகிரி படை புறங்கொடுத்து ஓட வெங்காசி பின் தொடர்ந்து தஞ்சையில் புகுந்தார். அளகிரி மைசூர் நாட்டிற்கு ஓட்டமெடுத்தார். தஞ்சையைத் தம் வயமாக்கிய வெங்காசி அரசரின் ஆணைப்படி செங்கமல தாசருக்கு முடி சூட்டுவித்தார். ஆகவே, வெங்கண்ணுவையரின் வேட்கையும் வெற்றி பெறுவதாயிற்று.

செங்கமலதாசர் அரசு கட்டில் ஏறியதும் தமக்கேற்ற அமைச்ச ரொருவரை நியமிக்க எண்ணித் தமது செவிலித் தாயை யழைத்து அவளது மனக் குறிப்பை ஆய்ந்தார். அவள் நாகைப்பட்டினத்தில், செங்கமலதாசரைக் குழவி முதலாக வளர்த்திட்ட செட்டியாரைக் குறிப்பிட்டாள். செங்கமலரும் செய்ந்நன்றி யறிதலாக அவ்வண்ணமே செய்தார். இதை யறிந்தார் வெங்கண்ணுவையர்; சீறி எழுந்தார். குடந்தையில் பாடி இறங்கி இருந்த வெங்காசியைக் கண்டு தமது விநய மொழிகளினுல் அவரது மனத்தை வென்று, தஞ்சையரசைக் கவருமாறு தூண்டினுர். வெங்காசிக்கு விருப்பமாயினும் மனந் துணியவில்லை. இந்நிலையில் சின்னுளில் பீசப்பூர் மன்னன் இறக்கவே வெங்காசி அச்ச மொழிந்து வெங்கண்ணுவின் விருப்பத்திற் கிணங்கினுர்.

வேலியே பயிரை அழிக்கத் துணிந்ததைப் போன்று, தமக்கு உதவியாயிருந்த வெங்காசியே படையெடுத்து வருவதை அறிந்த செங்கமலதாசர் வேறு வழியின்றித் தஞ்சையை விட்டு ஓடினுர்.

தஞ்சை வெங்காசியை வெற்றியுடன் வரவேற்க வேண்டியதாயிற்று. வெங்காசி தாமே தஞ்சைக்கு அரசரானார். வெங்கண்ணாவே அவருக்கு அமைச்சரானார். (வெங்காசிக்கு 'ஏகோசி' என்ற மறுபெயரும் உண்டு.) அது முதல் நாயக்கர் ஆட்சி ஒழிய, மராத்தியர் ஆட்சி ஓங்கலாயிற்று.



ஐயனார்



மூன்றும் ராசராசன்



அகத்தியர்

## 20. மூன்று வரலாற்று முத்துக்கள்

ஆழ்கடலின் அடியில் கருக்கொண்டு கிடக்கும் இப்பிகள் அளவிறந்தனவாகும். அவற்றுள், முத்துக் குளிப்போரின் முயற்சிக்கு இலக்காவன சிலவாகத் தான் இருக்கின்றன அவற்றுள்ளும் மதிப்புள்ள முத்துக்களுடன் இருப்பன ஒன்றிரண்டாகும். ஓர் இப்பியில் குற்றமற்ற முத்தொன்று கிடைத்துவிட்டாலோ பெற்றுன் பெருமகிழ்ச்சி அடைகிறுன். மற்றென்றில் மூன்று முத்துக்கள் விளைந்திருப்பதைக் காணின் மகிழ்ச்சிக்கோரளவில்லை.

அதைப்போலவே, சென்ற காலத்தில் மன்னரும் மாந்தரும் செய்த மாண்புறு செயல்களின் இலச்சினைகள் கால வெள்ளத்தால் மண்ணினுள் மறைந்தும் சிதைந்தும் வரலாற்றின் சுவட்டினைக் கருக்கொண்டு இருக்கின்றன. அவற்றுள், ஆராய்ச்சியின் பயனுகக் கிடைப்பன ஒரு சிலவாகவே இருக்கின்றன. ஒன்றிரண்டே வரலாற்றுச் சிறப்பைப் பெறுகின்றன. இத்தகையதாக யான் இதுவரையில் முயன்று கண்ட பழமையான சின்னங்களுள், ஒரே இடத்தில் மூன்று சிறந்த சின்னங்கள் கிடைக்கப்பெற்றதின் விளக்கமே இக்கட்டுரையாகும்.

தமிழகத்தில், தமிழ் முனி என்று [illegible]ன் சிலெ அழைக்கப்பெறும் அகத்தியரைப் பற்றிய [illegible]டுஞ்கள் பலப்பலவாகும். அவற்றுள் அவர் தங்கிய ஊர்களாகவும், அவரால் தோற்றுவிக்கப்பட்ட [illegible]து வணங்கப்பட்ட தலங்களாகவும் கூறப்பெறுவன [illegible]ர். காங்குப் பல இருக்கின்றன. அவற்றுள் அகத்திய முனிவர் தங்கியதுடன், அவரால் தோற்றுவி[illegible]கப் பெற்ற சிவன் கோயிலுடன் கூடியதாகக் கூறப் பெறுவதே, தஞ்சை பாபநாசம் வட்டத்திலுள்ள முன்[illegible]யூர் என்னும் சிற்றூரும் அங்குச் சிதைந்த நிலையிலுள்ள பழமையான சிவன் கோயிலுமாகும். இச்சிவன் கோயிலின் கருவறைச் சுவரிலுள்ள் கல்வெட்டுகளில் இக்கோயில் 'அகத்தீசுவரம்' என்றும், ஊர் 'முன்னியூர்' என்றும் வழங்கப்பட்டுள்ளது. கருவறையின், தென்புறமுள்ள சிற்ப மாடமொன்றில் அகத்தியரின் திருவுருவம் மிகச் சிறந்த முறையில் உள்ளது. முகத்தில் புன்முறுவல் தோன்றச் சடைமுடியும் அடர்ந்த தாடியும் கொண்டு, தளர்ந்த தொப்பையுடன் விளங்கும் சிறப்போடு, சிலையை அமைத்த சிற்பியின் கைத்திறனைப் படத்திற் காணலாம். தமிழக வரலாற்றுள் பல ஆயிரம் ஆண்டுகட்கு முன்னர்த் தோன்றித் தவ வலிமையால் இன்றும் வாழ்பவராகக் கருதப் பெறும் தமிழ் முனிவரின் படிமம் தெளிவாகக் கிடைத்துள்ளமை முதல் முத்தாகும்.

அடுத்து, இவ்வூரின் வடபாலுள்ள மேடொன்றினை யான் ஆராய்ச்சி செய்ததின் பயனாகப் பழமையான சிலை யொன்று கிடைத்தது. மூன்றடி அளவில் நின்ற கோலத்தில் தலைக்கு மேலாக ஐந்தலை நாகம் [illegible]ம் விரித்து நிற்கும் தோற்றத்துடன் கூடிய இச்சிலை சமண தீர்த்தங்கார்களுள் சிறந்தவராகக் கூறப் பெறும் சுபார்சுவ நாதரின் திருவுருவமாகும். தமிழக வரலாற்றுள் சமணருடைய சுவட்டினைக் காண உதவி



[illegible] சின்னங்களுள் இதுவும் ஒன்றாதலின் இஃது [illegible]ாவது முத்தாகும்.

முனிவர்களுள் தலைசிறந்த அகத்திய முனிவர் த[illegible]தாலோ, அன்றிச் சமண முனிவர்கள் இங்கு [illegible]ததாலோ இவ்வூர் (முனி+ஊர்) முனியூர் என்று பெயர் பெற்றிருக்கக் கூடுமென்று காண்பதாயினும், கி. பி. 11–ஆம் நூற்றாண்டில் எழுந்துள்ள கல்வெட்டுகள் முன்னியூர் என்றே குறிப்பிடுகின்றன.

செங்கற்களால் கட்டப்பட்டிருந்த இக் கோயில், பிற்காலச் சோழரின் கலைச்சிறப்புடன் கருங்கல் திருப்பணியாகக் கட்டப்பட்டுள்ளது. கருவறையின் தென்புறமுள்ள அகத்தியரை வணங்கும் நிலையில் அரசனொருவனின் படிமமொன்று புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளது.

மூன்றாம் இராசராசனே இக்கோயிலுக்குரிய பெரும் பான்மையான அறங்களைச் செய்திருப்பதாகக் கல்வெட்டுகள் உணர்த்துவதைக் கொண்டும், வரலாற்றறிஞர் சதாசிவ பண்[illegible]ன் வெளியிட்டுள்ள மூன்றாம் குலோத்துங்கனுடைய படிமத்தை ஓரளவு ஒத்த பாங்குடன் சிலையிருப்பதைக் கொண்டும், வகிர்ந்து பக்கமாக முடியப்பட்டுள்ள கொண்டையுடன் ,மார்பில் உயர்ந்த அணிகலன்களுடன் முழங்தாளளவும் நீண்டதும் வேலைப்பாடுடையதுமான சட்டையணிந்து வீரப் பொலிவுடன் விளங்கும் இச்சிலை மூன்றாம் இராசராசனுடையதாகலாமென்று கருதுகிறேன். இவ்வாறு வரலாற்றுக் குரிய அரசனொருவனின் படிமம் சிறந்த முறையில் கிடைத்திருப்பது மூன்றாவது முத்தாகும்.

மற்றும், இக்கோயிலில் காணக் கிடைத்த உலோகச் சிலைகளுள் மிகவும் வேலைப்பாடுடன் விளங்குவது, ஆரியச் சாத்தன் என்றழைக்கப்படும் ஐயனாரின் திருவுருவமேயாகும். அரச இலக்கணங்களுடன்

விளங்கும் யானைமீது அமர்ந்துள்ள ஐயனாரி[illegible] [illegible]நுஞ் மெல்லியதாக உட்புறம் கூடாகவே வார்க்கப்பட[illegible] ளது. இத்தகைய அமைப்பு மிகவும் சிறப்புடையது என்பர்.

இவ்வாருக, அகத்திய முனிவர், சமண முனிவ[illegible] (பார்சுவநாதர்) அரசவுருவம் (மூன்ரும் இராசராசன்) ஆகிய வரலாற்றுச் சின்னங்களாய மூன்று முத்துக்களையும் முனியூர் என்ற பழமையான இப்பி யினுள் யாவரும் காணலாகும்.

முற்றிற்று.

TAMIL NADU ARCHIVES & LIBRARY
No. 100744